# கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

# வட்டதீபம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டதீபம்

## இதழ் – 4

கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

**2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

## பாடசாலைக்கீதம்

*இராகம்- ஹம்சத்வனி* *தாளம்- ஆதி*

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோமே
ஞான ஒளி மிளிரும் கல்விச்சாலை வளம் பெறவே
என்றும் வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோமே

கட்டுக்கட்டாய் நெல்மணிகள் வெட்டிக் கட்டி வைத்திடும்
வட்டக்கச்சி மானில மத்திய கல்லூரி
கட்சன் வீதி காட்சி தரும் எங்கள் கல்லூரி
பட்சமுடன் பல கலைகள் பயிலத் தரும் ஆலயம்
(வாழ்த்துவோம்)

தெள்ளு தமிழ் வளர்த்துப்பேச பணிபல புரியவும்
உள்ளமதில் அள்ளுங்கலை தொண்டு பல புரியவும்
அள்ளி அள்ளி அறிவுகளை அளிக்கும் நம் கலைக் கூட்டம்
வள்ளுவன் குறளைப் போல வாழ்க நீடு வாழ்கவே.
(வாழ்த்துவோம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆசிரியர் குழாம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

"கேடில் விழுச் செல்வம் கல்வி"

## தூரநோக்கு - Vision

"தரமான கல்வியின் மூலம் தனியாள், குழு, கிராமச் சமூகத்தவரிடையே ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்தல்"

"Improving The Personality Attributes among Personal Group and rural Society through Quality Education"

## பணிக்கூற்று - MISSION

"கல்விக் கொள்கைகளின் படி கலைத்திட்டத்தையும் மாணவ சமநிலைப் பண்புகளையும் விருத்தி செய்வதற்கு ஆசிரிய ஆளணி, பணியாளர், பௌதீக வளம், நிதிமுகாமை, உறவு வலுப்படுத்தல் என்பவற்றின் மூலம் இலக்கை நோக்கி நெறிப்படுத்தல்."

**"To improve the curriculam and student equity balance according to the Education policy, Direct the staff minor employees, physical resources and financial management, and society relation enhancement to achieve vision."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களின் "வட்டதீபம்" சஞ்சிகைக்கான ஆசிச்செய்தி



கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் 2017ம் ஆண்டுக்கான "வட்டதீபம்" சஞ்சிகை வெளியீட்டுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். "கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு" என்பதற்கிணங்க கல்லூரியில் கல்வி பயின்று பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றாலும் பல விடயங்கள் அறியப்படாமல் இருக்கும். இவற்றை ஓரளவு நிவர்த்தி செய்யும் பொருட்டு வட்டதீபம் போன்ற சஞ்சிகை வெளிவருவது மாணவர்களுக்கு மட்டுமன்றி பலதரப்பட்டவர்களுக்கும் பெரும் பயனுள்ளதாக அமையும். அதற்கமைய ஒவ்வொரு மாணவர்களும் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் கல்விசார் படைப்புக்கள் என்பவற்றை சஞ்சிகையில் வெளியிடுவதன் மூலம் பல விடயங்களை அறியும் வாய்ப்பு பல தரப்பினருக்கும் ஏற்படுகின்றது. எனவே பலரும் பலதரப்பட்ட விடயங்களை அறிந்து முழு மனிதனாகும் வாய்ப்பினை வட்டதீபம் சஞ்சிகை வழங்கி ஆண்டுதோறும் வெளிவந்து தீப ஒளியாக மிளர வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்.


**சுபமஸ்து**

**சிவஸ்ரீ.பாலசாந்தினிகேசக் குருக்கள்**
**சபரி ஐயப்பன் ஆலயம்**
**சில்வா வீதி, வட்டக்கச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



"கல்வியின் நோக்கம் தகவலை திணிப்பதல்ல, அறிவுத் தாகத்தை தூண்டுதலே ஆகும்." மனிதனை எந்த பேதமுமில்லாமல் மனிதனாகவே பார்க்க வைக்கும் அறிவுக் கண்ணாக கல்வி விளங்குகின்றது. அந்த வகையில் கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி முயற்சியாக அமையும் "வட்டதீபம்" எனும் சஞ்சிகை உயர்தர மாணவர்களின் ஒன்றிணைந்த வெளியீட்டின் அரிய முயற்சியை பாராட்டி மகிழ்வோடு இச் சஞ்சிகை வெளியீட்டிற்கு இறையாசீர் கூறி நிற்கின்றேன்.

கல்வி என்பது தானும் கற்று பயனடைந்து மற்றவரையும் கற்றலுக்கு தூண்டுவதாகும். புத்தகங்கள் இல்லையென்றால் சரித்திரம் மௌனமாகிவிடும். இலக்கியங்கள் ஊமையாகிப் போகும். புத்தகம் என்பது மனித குலமே அச்சு வடிவில் இருப்பது போன்றது. அந்த வகையில் உயர்தர மாணவர்களால் வெளியிடப்படும். "வட்டதீபம்" எனும் இச் சஞ்சிகையின் சுகத்தினை பல மாணவர்கள் நுகர்ந்து பயன் பெறவும் தொடர்ந்தும் இவ்வாறான வெளியீடுகள் மூலம் மாணவர் சமுதாயம் உருவாக இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றேன்.


**"முடியும் வரை முயற்சி உன்னால் முடியும் வரை அல்ல**
**நீ நினைத்த செயல் முடியும் வரை"**

**அருட்பணி. பா.பிராயன்**
**பங்குத் தந்தை,**
**வட்டக்கச்சி, கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டதீப வெளியீடு சிறக்க வாழ்த்துகின்றேன்



கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விப்பண்பாட்டில் தனக்கென ஓர் தனியிடம் பிடித்து நிற்கும் கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி தன் ஊருக்கும், இந்த மாவட்டத்துக்கும் ஆற்றிவரும் கல்விப்பணி கனதியானது! "வட்டக்கச்சி" என்னும் வளம் நிறைந்த ஊரின் பெயரைத் தாங்கி அப்பெயருக்கு ஓங்கிய புகழை ஈட்டித்தரும் வகையில் அரும்பணியாற்றும் இக்கல்லூரியின் தடங்களைத் தாங்கி வெளியீடு காணும் "வட்டதீபம்" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

கனதிமிகு கல்விக்கடலில் அறுபது ஆண்டுகளை நீந்திக்கடந்துவிட்ட பின்னரும் தன்னால் உருவாக்கம் பெறும் மாணவ சமூகத்தின் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் மட்டுமே மனதிற் கொண்டு உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வெளியீடாகவும், மாணவர்களின் ஆளுமை வெளிப்பாட்டுக்கான அடித்தளமாகவும் "வட்டதீபம்" என்னும் ஓர் சஞ்சிகையை வடிவமைத்து காலத்திற்கு காலம் வெளியிட்டு வைப்பது வரவேற்கத்தக்கது.

1990களின் ஆரம்பத்தில் முதல் வெளியீடு கண்ட இச்சஞ்சிகை 1993ம் ஆண்டில் ரோனியோ பிரதியாக தனது இரண்டாவது வெளியீட்டைக் கண்டிருந்தது. அதன்பின்னர் ஏற்பட்ட காலமாற்றங்களில் இழப்புக்கள், இடப்பெயர்வுகள் என்று நிலையற்றும் நிம்மதியற்றும் கடந்து கொண்டிருந்த வாழ்வினால் அடுத்த வெளியீட்டுக்கு நீண்டதொரு அவகாசம் தேவைப்பட்டது. இறுதியுத்தத்தின் பின்னர் 2010களில் மீண்டும் சொந்த மண்ணில் எம் மக்கள் மீளக்குடியேறி மெல்லமெல்ல இயல்பு வாழ்வுக்குள் நுழைந்ததன் பின்னர் 2016ம் ஆண்டில் மூன்றாவது வெளியீடு அச்சுப்பதிப்பாக வெளியிடப்பட்டு அதற்குப்பிற்பட்ட இரண்டு ஆண்டுகள் இடைவெளியில் தனது நான்காவது வெளியீட்டை இச்சஞ்சிகை அவாவி நிற்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் வெளிக்கொணர்ந்து அவர்களையும் இந்த சமூகத்திற்கு தூரமான கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும், படைப்பிலக்கியவாதிகளாகவும், அறிவியலாளர்களாகவும் அடையாளப்படுத்துவதை மட்டுமே நோக்காகக் கொண்டு முற்றுமுழுதாக மாணவர்களின் ஆக்கங்ளை மட்டுமே தாங்கி வரும் பதிப்பாக இச்சஞ்சிகை வெளியிடப்படுவது காலத்தின் பதிவேயாகும்.

எமது மாவட்டத்தின் மாணவர்கள் இலைமறை காய்களாக தமக்குள் புதைந்திருக்கும் திறமைகளை இனங்காண்பதற்கு முடியாமலும் தமக்கு ஏற்ற களங்கள் எதுவுமற்ற சூழலிலும் வெறும் சாமான்ய மனிதர்களாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் அத்தகைய மாணவர்களின் படைப்பாற்றல்களை வெளிக்கொணர்வதற்கான ஆரம்ப களமாகவும் அடுத்த கட்ட நகர்வுக்கான உந்துதலாகவுமே இச்சஞ்சிகை வெளியீட்டை என்னால் உணர முடிகின்றது.

காலத்தின் பதிவாய், கனதியான பதிப்பாய் வட்டக்கச்சி மண் பெற்றெடுத்த மைந்தர்களான தன் மாணவர்களின் பல்துறைசார் ஆக்கங்களோடு தனது நான்காவது குழந்தையை பிரசவிக்கும் "வட்டதீபம்" என்னும் வரலாற்று சஞ்சிகையின் வெளியீடு சிறக்கவும், காலத்தின் தேவையுணர்ந்து செயலாற்றியுள்ள உயர்தர மாணவர்களின் உன்னதமான பணிக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களை வழங்கி நிற்கும் அதேவேளை எதிர்வரும் காலங்களில் வருடாவருடம் வெளியீடு காண இறையாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**கௌரவ.சிவஞானம் சிறீதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்**
**இணைத்தலைவர் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் உயர்தர மாணவர் மன்றம் வெளியிடும் வட்டதீபம் இதழ் - 4ற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ''சமூகப் பொருத்தப்பாடுடைய மாணவர் சமூகத்தை உருவாக்குதல்'' என்ற தேசிய கொள்கைக்கு மகுடமிடும் வகையில் தேடல்கள் மூலம் புதுமைகளைப் படைக்கத் துடிக்கும் மாணவ உள்ளங்களின் பிரகாசிக்கும் ஒளிவெள்ளத்தின் எழுச்சியாகவே ஆக்கப் படைப்புக்கள் விளங்குகின்றன. இதற்கான வாய்ப்புக்களை உருவாக்கி வழிகளைத் திறந்து விடவேண்டிய முழுமையான பங்களிப்பு அதிபர், ஆசிரியர்கள் கைகளில் தங்கியுள்ளது.

உலகின் சவால்களை எதிர்கொண்டு புத்தாக்க சிந்தனையுடன் புதியன படைத்து மாணவர்களின் பண்பு சார்ந்த இலக்கு நோக்கி நகர்வின் அடையாளமாக இச் சஞ்சிகை வெளியீட்டை எண்ணுகின்றேன். இவ்வாறான மலர்வெளியீட்டுச் செயற்பாடுகள் மூலம் மாணவரிடையே உயர்ந்த தலைமைத்துவம், தொடர்பாடல்திறன், குழுவாக இயங்கும் ஆற்றல், பொறுப்புணர்வு போன்ற பண்புகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன.


இவ்வகையில் மலரும் புதுப்பொழுதில் வட்டதீபம் இதழ் - 4 கதிர் வீசிப்பிரகாசிக்கவும் வருடம் தோறும் இவ் இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டுமென ஆசியும் வாழ்த்தும் வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

**திரு.யோன்குயின்ரஸ்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



நீண்டதொரு வரலாற்றுப் பெருமைகொண்ட வட்டக்கச்சி மத்திய கல்லூரி தனது வரலாற்றுப் பயணத்தில் கல்வியிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தனக்கென பல தடங்களை பதித்துள்ள தென்றால் மிகையல்ல.

நான் அறிந்த வகையில் யுத்தத்திற்கு முந்திய காலப்பகுதியில் "வட்டதீபம்" என்ற இரண்டு சஞ்சிகையை உயர்தர மாணவர்கள் வெளிக்கொணர்ந்துள்ளனர். தொடர்ந்து வந்த காலப்பகுதியில் தீபம் சுடர்விட்டு வெளிச்சத்தை கொடுப்பதற்கு ஏற்புடைய செயற்பாடுகள் ஏன் நடைபெறவில்லை என்பது தெரியவில்லை.

மீண்டும் 2016ல் முன்னாள் அதிபர் M.C.L மனுவல் அவர்களது வழிகாட்டுதலில் முத்தமிழ் மன்றம் வட்டதீபத்தை சுடர்விட்டு வெளிச்சம் பரப்ப பொறுப்பெடுத்து சிறிய அளவில் வெளியிட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்று.

நான் இக்கல்லூரியை 2017 மே மாதத்தில் பொறுப்பேற்ற காலப்பகுதியில் வைர விழாவையும் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்விழாவை செவ்வனவே செய்து முடித்த பின்னர் 2016ம், 2017ம் ஆண்டுகளில் க.பொ.த உயர்தர மாணவர்களை அழைத்து "வட்டதீபம்" மலரை வெளியிட வேண்டுமென கேட்டு ஆலோசனைகளும் வழங்கியதன் பயனாக மாணவர்களின் ஆக்கங்களை தாங்கியதாக மலர் வெளிவருவதையிட்டு மட்டில்லா மகிழ்வடைகின்றேன்.

இனிவரும் காலங்களில் இம்மலர் தொடர்ந்து வெளிவருவதற்கான ஏற்பாடுகளை உயர்தர மாணவர் மன்றத்தினூடாக ஏற்படுத்தியுள்ளோம்.

நான்காவதாக வெளிவரும் இவ் "வட்டதீபம்" மலரானது சிறப்பாக வெளிவந்து ஒளிவீச வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

**திரு.ச.பூலோகராஜா**
**அதிபர்**
**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி வைரவிழா நூல் வெளியீட்டின் பின்னர் உயர்தர மாணவர் மன்றத்தினால் வட்டதீபம் சஞ்சிகையானது அச்சுப்பதித்த ஒரு தரமான நூலாக வெளியிட்டதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய மாணவர்களுக்கிடையே கதை, சிறுகதை, கவிதை, கட்டுரைகள் போன்ற ஆக்கங்கள் எழுதுவதிலும் வாசிப்பதிலும் ஈடுபாடு குறைந்து இலத்திரனியல் சாதனங்களில் ஈடுபாடு கொண்டுள்ள போதும் எமது உயர்தர மாணவர்களின் இச் செயற்பாடானது அவர்களின் ஆக்கத்திலும், ஆளுமை, அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, கலை, கலாசாரம் என்பவற்றின் வெளிப்பாடகவே இந்நூல் எங்களின் கைகளில் தவழ்கிறது. மேலும் இந்நூலானது ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக வெளிவர வேண்டும் என்ற பேராவவோடு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பிரதி அதிபர்**
**திரு.ஜெ.கிருபாலன்**
**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



21ம் நூற்றாண்டில் புதிய பாதையில் பரிணமிக்கும் கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி வைரவிழாவினையும் மலர் வெளியீட்டினையும் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்த மிடுக்குடன் விளங்கும் இத்தருணத்தில் உயர்தர மாணவ மன்றத்தினரின் இம்முயற்சியினைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வட்டதீபம் இதழ் - 4ற்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த அரிய வாய்ப்புக்கும் இறைவனை வணங்கி, அதனை பெரும் பேறாகக்கருதி அகமகிழ்கின்றேன். கல்விப் புலத்தில் மாணவர்களின் ஆற்றல்களை கற்றலில் மாத்திரமன்றி வேலையுலகிற்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் ஏற்றாற்போல சகல இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தமது திறமையினை வெளிப்படுத்தி "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" எனும் மனப்பாங்கினை வளர்த்து சமூகத்தில், நற்பிரஜையாக திகழவேண்டும்.

நவீன உலகின் போக்கிற்கேற்ப தேடல்களை ஒவ்வொரு மாணவனும் முனைப்புடன் செயற்படுத்த வேண்டும் என்பதற்கேற்ப எமது கல்லூரியின் செயற்பாடுகள் வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றன. அந்த வகையில் வட்டதீபம் சஞ்சிகையும் பல்வேறு சிறந்த ஆக்கங்களை உள்வாங்கி வெளிவருவது யாவராலும் பாராட்டக் கூடியதொன்றே. இவ்வெளியீடானது தொடர்ந்தும் வெளிவர மாணவ சமுதாயம் முன்வரவேண்டுமென இறைவனை வேண்டி உளம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

**காந்தரூபி காசிலிங்கம்**
**உபஅதிபர்**
**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டதீபம் சஞ்சிகை முதல் காப்பாளரின் வாழ்த்துச் செய்தி



"கேடில் விழுச்செல்வம் கல்வி"

இத்தகைய உன்னதமான கல்விச் செல்வத்தை வாரி வழங்கிக் கொண்டிருக்கும் கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் கல்விசார் வெளியீடாக "வட்டதீபம்" என்னும் சஞ்சிகை விளங்குகின்றது. 1990ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சஞ்சிகையானது கடந்த காலப் போர் சூழ்நிலைகளாலும், இடப்பெயர்வுகளாலும் அழியும் நிலையை எட்டினாலும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலையினால் மீண்டும் சுடர்விட்டு எரிவதற்கு ஏதுவாகியிருப்பது கல்விச் சமூகத்தினால் வரவேற்கப்படுகின்ற ஒரு விடயமாகும்.

இப்பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவர்களின் அயராத முயற்சியினால் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ள இச்சஞ்சிகையானது பாடசாலை மாணவர்களுக்கும், ஏனைய அறிவுத்தாகமுடையோருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும். விஞ்ஞான கணித வர்த்தக மற்றும் கலைப்பிரிவு மாணவர்களின் பாடம் சார்ந்த ஆக்கங்களும், பண்பாட்டு விழுமியம் சார்ந்ததும் அறிவு சார்ந்ததுமான கட்டுரைகளும், பிறவும் மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் அறிவையும் அனுபவங்ளையும் வளர்க்கும் சாதனமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. உயர்தர வகுப்பு மாணவர்களால் முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது வாழையடி வாழையாக தொடரப்பட வேண்டும். "வட்டதீபம்" காலத்திற்குக் காலம் சுடர்விட்டு எரிந்து பிரகாசித்து எதிர்கால மாணவ சந்ததியினருக்கு அறிவுச் சுடரை ஏற்றி அவர்களது வாழ்க்கையில் ஒளிவீச வேண்டுமென்று வாழ்த்தி நிற்கின்றேன்.

**திருமதி.நொ.யூ .தர்மரட்ணம்**
**ஓய்வுநிலை ஆசிரியை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர பகுதித் தலைவரின் வாழ்த்துச் செய்தி



கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் உயர்தர மாணவர் மன்ற 2016 - 2017 மாணவர்களின் ஒன்றிணைந்த முயற்சியாக அமையும் "வட்டதீபம் இதழ் - 4" எனும் சஞ்சிகை வெளியீட்டின் அரிய முயற்சியைப் பாராட்டி மகிழ்வதோடு வாழ்த்தும் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

நேர் சிந்தனைகளை வளர்த்து ஒழுக்க விழுமியமும் கல்வி அறிவுமுடைய எதிர்கால சந்ததியினை உருவாக்கும் கல்வி நோக்கிலே முனைப்புடன் செயற்பட்டு வரும் கல்லூரியில் 1989ம் ஆண்டு வட்டதீபம் என்ற பெயர் தாங்கிய முதல் இதழ் வெளிவந்தது. தொடரறா செயற்பாடாக வட்டதீபம் இதழ் - 4 வெளிவருவதையிட்டு பாராட்டுவதுடன் தொடர்ந்து வட்டதீபம் ஒளிவீச வேண்டும் என சரஸ்வதி தேவியின் பாதம் பணிகின்றேன்.

**திருமதி.தயாநிதி சிவலிங்கம்**
**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பாளரின் உள்ளத்திலிருந்து...



கத்தரித்து ஒட்டப்பட்ட சமூகத்தின் ஒரு துண்டாகவே பாடசாலை அமைகின்றது. சமூகத்தில் மாறிச் செல்கின்ற பொருளாதார, அரசியல், சமூக கலாசார தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப பிள்ளைகளின் இணக்கப்பண்பும், விளைதிறனும் சீரான கல்வியை சிறப்பாக வழங்கும் போது தான் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வகையில் அர்ப்பணிப்பான கல்விப்பணியின் வழி அறுபத்து ஐந்து அகவையை பூர்த்தி செய்த எம் கல்லூரி அடிப்படைத் தகைமைகளை இழந்து விடாமல் எக்காலத்தும் நிமிர்ந்து நிற்பது தனித்துவமானது. எம் கல்லூரியின் செயல் வீரர்கள் பலதுறைத் தலைவர்களாக ஈழத்திலும் அலை கடலைத் தாண்டியும் அணி சேர்ந்து கைகோர்த்துள்ளனர் என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

கல்லூரி அன்னையின் மகளான நான் வட்டதீபம் இதழ் - 4 உருவாக்கத்தில் காப்பாளராக இருப்பதையிட்டு பெருமையடைகின்றேன். மனமகிழ்வடைகின்றேன். பாடசாலைக் கல்வியில் பல்வேறு சுமைகள், தடைகள், பிரச்சினைகள், சவால்கள் அனைத்தையும் படிக்கற்களாக மாற்றி சாதனை படைக்கவேண்டும் என்ற நோக்கில் 2016 - 2017ம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களினால் இவ் இதழுக்கான முன்னெடுப்புக்கள் முனைப்புடன் நிறைவேறின. அவர்களின் கடின உழைப்பும் ஊக்கமும் கூட்டு முயற்சியும் இலக்கை நோக்கிய பயணத்தின் வெளிப்பாடும் தங்கள் கைகளில் தவழும் வட்டதீபம் இதழ் - 4 என கூறுவது ஏற்புடையதாகும்.

வட்டதீப இதழின் உயர்நிலையான தொடருவாக்கத்தின் நோக்கில் கல்லூரி முதல்வரின் எண்ணத்தில் உதித்த சிந்தனைச் சிதறலின் வெளிப்பாடு பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். வட்டதீபம் இதழ் - 4 உருவாக்கத்தின் பங்காளிகளான அனைவருக்கும் நன்றிகூறி தொடர்ந்தும் வட்டதீபம் ஒளி வீச வேண்டும் என்று சரஸ்வதித் தாயின் பாதம் பணிந்து வாழ்த்தும் கூறுவதில் நிறைவடைகின்றேன்.


**திருமதி.ஸ்ரீ.திலீபன்**

**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



எமது கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் வட்டதீபம் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் சிறுவனாக இக்கல்லூரியில் கல்வி கற்றகாலத்தில் முதன்முதல் இச்சஞ்சிகை வெளியிடப்பட்டது என அறிகின்றேன். அதன் பின்னர் முன்னைய அதிபர் திரு.M.C.L மனுவல் காலத்தில் இச்சஞ்சிகையின் 3வது இதழ் ஒரு சிறிய அளவுடன் வெளியிடப்பட்டது. தற்போது இச்சஞ்சிகையின் 4ஆவது இதழ் அதிபர் அவர்களின் வழிகாட்டலுடன் மீண்டும் வெளிவரவிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஒரு பாடசாலையின் பெருமைகளை அதிகளவு வெளிக்கொணரும் சக்தி உயர்தரமாணவர்களுக்கே உண்டு. அந்த வகையில் இம் முயற்சி நடைபெறுகின்றது. அறிவியல் சார்ந்த கற்றலோடு இணைப்பாடச் செயற்பாடுகள் முக்கியமானவையாகின்றன. அந்த வகையில் வட்டதீபம் ஒரு கூட்டுப் பொறுப்போடு வெளிவருகின்றது. "புத்தகங்கள் இல்லையென்றால் சரித்திரம் மௌனமாகிவிடும்" என்னும் கூற்றுக்கிணங்க வட்டதீபம் பல சரித்திரங்களை வெளிக்கொணர்கிறது.

இந்நூலாக்கத்திற்காக உழைத்த அத்தனை நல்லுள்ளங்களையும் இவ்வேளையில் வாழ்த்தி வட்டதீபம் தொடர்ந்து வெளிவர சரஸ்வதித்தாயின் அருள்வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**திரு.ப.ஜெயகாந்தன்**
**தலைவர்**
**(கிராம அபிவிருத்திச் சங்கம் - வட்டக்கச்சி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி "வட்டதீபம்" நூல் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது கல்லூரி 64வது வயதில் இவ்வளவு பெரிய பல மைல் கற்களைத் தாண்டி தரத்தில் உயர்வு கண்டு நிற்கின்றது. கல்லூரித்தாயின் மாணவர்களின் ஆக்கம், ஊக்கம், ஒழுக்கம், கற்றல் செயற்பாடுகளை கட்டியெழுப்பிய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இக் கல்லூரி மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறைகளிலும், கலாசார நிகழ்வுகளிலும் சிறந்த பெருமையைத் தருகின்றார்கள். இப் பிரதேசத்திற்கு ஆண்டுதோறும் இக்கல்லூரி பல துறைகளில் பல புத்திஜீவிகளை கற்கைக்காக அனுப்பி பெருமை தேடித் தந்துள்ளது. இம் மாணவர்கள் நெறி தவறாது உருவாக வேண்டுமெனவும், அதிபருக்குப் பணிந்தும், ஆசிரியரை மதித்தும், பெற்றோரை வணங்கியும் கல்லூரிக்கு மென்மேலும் பெருமை தேடித்தர எமது சித்தி விநாயகரின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று ஆசிவேண்டி வாழ்த்துகின்றேன்.

**கிராம அபிவிருத்திச் சங்கம்**
**தலைவர்**
**ந.கணணதாசன்**
**சிவிக்சென்ரர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் வாழ்த்துச் செய்தி



வைரவிழா கண்ட எம் வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் உயர்தர மாணவர் மன்றத்தினால் "வட்டதீபம்" என்ற சஞ்சிகை வெளியீடு நடைபெற்று வருகிறது. இவ்வகையில் 2016 - 2017 க.பொ.த உயர்தர தேர்வு எழுதிய நாம் வட்டதீபம் இதழ் - 4 சஞ்சிகை வெளியீட்டுக்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டோம்.

மலர்க்குழு கட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் வட்டதீபம் இதழ் - 4 வெளிவருவதையிட்டு பெருமையடைகின்றேன். மகிழ்வடைகின்றேன். கல்லூரியின் கல்வியை நிறைவு செய்த நாம் மீண்டும் பள்ளி நினைவுகளை மீட்டிப் பார்க்க கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொண்டோம் என்றே கூற வேண்டும். சிறுகதை முதல் சிந்தனைத்துளி வழியாக கவிதை வரை பல்துறைசார் ஆக்கங்களை தாங்கியதாக இவ் இதழ் திகழ்கின்றது.

இவ்விதழ் வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய முதல்வர், காப்பாளர், ஆசிரியர்கள் நிருவாகசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைப் பகிர்கின்றேன். வட்டதீபம் இதழ் - 4ல் படைப்புக்களை தந்த மாணவர்களுக்கும் நன்றிகூறி வட்டதீபம் தொடர்ந்து ஒளிவீச இறைஆசி வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**சு.கோபிதரன்**
**பழைய மாணவன்**
**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் எழுதுகோலில் இருந்து...



மாணவர்களின் அறிவுக் கண்ணைத் திறக்கும் பாடசாலைகளை ஆலயங்களாகவே போற்றுகின்றோம். இதனால்தான் பாடசாலைக்கு வித்தியாலயம் என்ற பெயர் ஏற்பட்டது. 2014ம் ஆண்டு கல்லூரி ஆக உயர்ந்து நிற்கும் எம் பள்ளியில் கல்வி கற்க கிடைத்த வாய்ப்பை பெரும் பேறாகவே கருதுகிறேன். இச்சஞ்சிகை ஆக்கத்தின் இதழாசியராக இருப்பதையிட்டு சரஸ்வதிதாயின் பாதம் பணிகிறேன்.

கல்லூரியின் வரலாற்றுப் பயணத்திலே அறுபத்து ஐந்து அகவையை நிறைவு செய்துள்ளது. எனவே பல்துறையாளர்கள் பலரை எம் கல்லூரி சமூகத்தினுள் உருவாக்கியுள்ளது எனலாம். 2016 - 2017ம் ஆண்டு மாணவர்கள் க.பொ.த தேர்வின் பின் வட்டதீபம் என்ற சஞ்சிகையை வெளியிட கல்லூரி முதல்வரின் தீர்க்கமான செயலுருவாக்க முன்னெடுப்புக்கான ஆலோசனைகளுடன் நிருவாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வட்டதீபம் இதழ் - 4 உருவாக்கம் விரைவுபடுத்தப்பட்டது. எம் சஞ்சிகை ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்திகளுடன் 2016 - 2017ம் ஆண்டு மாணவர்களின் பசுமையான நினைவுப் பதிவுகளும், அறிவியல் கல்வியின் வளர்ச்சியும் தொழிற்துறைகளின் தேவையும் இன்றைய உலகின் இருபக்கங்களாகும். எனவே அவை தொடர்பான ஆக்கப்படைப்புக்களும் பதிவாகியுள்ளன எனலாம்.

எம் கல்லூரியின் பயனாளிகளான மாணவர்கள் அனைவரும் பூரண பங்களிப்பை வழங்கி ஒவ்வொரு ஆண்டும் வட்டதீபம் ஒளிவீச வேண்டும் என வினையமாக கேட்டு நிறைவு செய்கின்றேன்.

**பே. லஜித்**
**(பழைய மாணவன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி உயர்தர மாணவர் ஒன்று கூடல்-2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KN/Vaddakkachchi Central College
# Advance Level Get together - 2017 Batch



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உள்ளத்தில் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் பதிவுகள்...

வட்டக்கச்சி மகா வித்தியாலயம் என செயற்பட்டுக் கொண்டிருந்த பாடசாலை தற்போது வட்டக்கச்சி மத்திய கல்லூரியாக ஏற்றம் கண்டிருப்பது மகிழ்ச்சியை தந்தாலும் இது மட்டும் போதுமானதா? என்கிற கேள்வி அங்கே எழுகிறது.1990 முதல் 1995 வரையான காலப்பகுதி ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம். இந்த காலப்பகுதியில் தான் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் பேரும் புகழும் உச்சம் பெற்றது என்று சொன்னால் யாரும் மறுப்பதுக்கு இல்லை.ஒரு பாடசாலை திறன்பட சிறப்பாக செயற்பட வேண்டும்.என்றால் அதற்கு காரணகர்த்தாவாக பாடசாலையின் தலைமை அது அதிபராகத் தான் இருக்க முடியும். ஒன்றல்ல இரண்டல்ல அரியரத்தினம், குருகுலராஜா, சின்னராசா என மூன்று முத்தான அதிபர்கள் வாய்த்தார்கள்.

அவர்களின் திறமையான செயற்பாட்டாலும் அயராத தொடர்ச்சியான உழைப்பாலும் வட்டக்கச்சி மகாவித்தியாலயம் சிறந்து விளங்கியது எனலாம். அதிபர்க்கு உறுதுணையாக தோள் கொடுத்தவர்கள் தான் கல்வியை அக்கறையோடும், அன்போடும், நல்லறிவோடும் மாணவச் செல்வங்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள். அந்த ஆசிரியர்களின் உதவி இல்லாமல் எந்த அதிபர்களினாலும் தனியாக எதனையும் முன்னெடுத்து வெல்ல முடியாது என்பது திடமே திறன்பட்டு செயற்பட்ட ஆசிரியர்களும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஆசிரியராக சிறந்து விளங்கிய இப்பாடசாலையில் முன்னாள் மாணவரும், ஆசிரியருமான தற்போது எம்பி பதவி வகிக்கும் சிவஞானம் ஸ்ரீதரன் ஆசிரியரைக் கூறலாம்.

விவசாயம் பற்றிய போதுமாக அறிவே இல்லாத மாணவர்கள் கூட இவர் விவசாயப்பாடம் கற்பித்த பின்னர் விவசாயம் பற்றி முழுமையாக அறிந்து கொண்டனர் என்பது மறுக்கப்படாத உண்மையும் கூட. அது மட்டுமா? பாடசாலையிலே தோட்டம் அமைக்கலாம் என்பதனை சொல்லிலே காட்டாது செயலிலும் காட்டினார். 1992, 1993, 1994 ஆகிய காலப்பகுதியில் பார்த்தால் வாழைத்தோட்டம்,மரக்கறித்தோட்டம், பழ மரங்கள் என்பவற்றால் கிடைக்கும் பணத்தை பாடசாலைக்கே செலவு செய்தார்கள் என்பதும் உண்மை.

பாடசாலையின் முன்னேற்றத்திற்கே மற்றுமொரு காரணம் மாணவர்களே. கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை கிடைத்தது என்றால் அது வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு தான் ஏனென்றால் இந்தக் காலப்பகுதியில் தான் விளையாட்டுக்களிலும் கல்வி சார்ந்த போட்டிகளிலும் வட்டக்கச்சி மகாவித்தியாலயம் கொடிகட்டிப் பறந்த காலப்பகுதி என்று ஆணி அடித்தாற் போல் சொல்லலாம். இப்பாடசாலையை பெருமையாக மட்டுமன்றி ஆணவமாகவும் பேசும்படியான ஒரு விடயம் 1994 ம் நிகழ்ந்த நிகழ்வைக் கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இந்தக் காலப்பகுதிக்கு முன்னரும் சரி பின்னரும் சரி இவ்வாறு நிகழ்ந்தது இல்லை எனலாம். ஆம்அம் அது ஒரு உடற்பயிற்சிப் போட்டி வட்டக்கச்சி மகாவித்தியாலயம் சார்பாக ஆண்கள் பிரிவில் 3 அணியும், பெண்கள் பிரிவில் 3 அணியும் பங்கு கொண்டனர். இப்போட்டியில் என்ன அதிசயம் என்றால்?பெண்கள் பிரிவில் ஒரு அணி மட்டும் 2 வது இடம் பிடிக்க மற்றை 5 அணிகளும் முதலிடத்தை பெற்றுக்கொண்டது. என்பது இந்த இடத்தில் இச்சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்வதில் மாணவர்கள் மட்டுமல்ல வட்டக்கச்சி மகாவித்தியாலயமும் பெருமை கொள்கிறது.

இங்கே குறிப்பிட்டு சொல்லக் கூடிய மற்றுமொரு விடமும் உள்ளது. அது "லக்கிஸ்ரார்" விளையாட்டுக் கழகத்துக்கும், வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திற்கும் நடுவில் அப்படியொரு ஒற்றுமை. அதற்குக் காரணம் காற்பந்து விளையாட்டு ஆகும். வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் விளையாடும் மாணவர்களும் பலர் லக்கிஸ்ரார் விளையாட்டு கழகத்திலும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாடசாலைகள் இடையே நடைபெறும் காற்பந்துப் போட்டியாகட்டும் கழகங்களிலே நடாத்தப்படும் போட்டியாகட்டும் இந்தக் காலக்கட்டத்தில் ஏனைய பாடசாலைகளுக்கும், ஏனைய கழகங்களுக்கும் எப்போதும் குழப்பமான நிலையே காணப்படும். அதற்குக் காரணம் பாடசாலை சார்பாக விளையாடும் மாணவர்கள் அனைவரும் உண்மையிலேயே மாணவர்களா? கழக உறுப்பினர்களா, என்ற சந்தேகம் அது.

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு எதிராக ஏனைய பாடசாலைகள் புகார் செய்துள்ளனர் என்பது இந்த நேரத்தில் ஞாபகப்படுத்தி இன்று வரை இந்த உறவு தொடர்ச்சியாக நிலைத்திருப்பது மனமார வரவேற்கத்தக்கது. வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் வளர்ச்சி இக்காலப் பகுதியில் இருந்ததைப் போன்று தற்போது காணப்பட்டாலும் தொடர்ச்சியாக இதே போன்ற நிலை வேரூன்ற வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாகவும் இன்றைய சமூகத்தின் விருப்பாகவும் காணப்படுகின்றது. "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பது போல அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றினால் பாடசாலை வளர்ச்சி மேலோங்கும். இப்பாடசாலையும் பெருமை கொள்ளும்.

**ஆக்கம்**
**சி.கீர்த்திகா**
**2016 கலைப்பிரிவு**

**சிந்தனைக்கு சில**

*மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளும் அல்ல*

*எந்தக் காரியமாக இருந்தாலும் சரி ஆரம்பத்தில் கஸ்டம், நடுவில் எளிது, முடிவில் இன்பம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்தும் தொலையாமலே

நட்புச் சாரலிலே
நாம் பிரிந்த அந் நாட்கள்
வெள்ளித் தூறல்களாய்
இன்னும் எம் நினைவில்

பள்ளிப் பருவமதில்
பசுமையான நாட்களிலே
பட்டாம் பூச்சிகளாய்

துன்பங்களைத் தொலைத்து
பாசமெனும் சோலைதனில்
கூடியிருந்து கும்மாளம் இட்ட
நாட்கள் இனி வருமா?

கால சக்கரமோ
காற்றாய் சுற்றியது
பசுமையான அந்நாட்கள்
பஞ்சாய் பறந்தனவே!

முகவ்ரி தொலைத்திட்ட
முகில்கள் போலவே
தொலைந்தும் தொலையாத
நட்பைத் தேடுகிறேன்

காலத்தின் சுவடுகளில்
வடுக்கள் ஆயிரமாய்
நட்பின் நினைவுகளில்
வாடாத புது மலராய்
என்றும் உம் நினைவு
இழையோடிச் செல்கிறது

வாழ்க்கையெனும் நூலகத்தில்
வசந்தத்தை நீர் தந்தீர்
எழுதாத பொக்கிசமாய்
என்றும் உம் நினைவாய்
சோகமான வாழ்வு கூட
சுகமாய் தெரிகிறதே......

மலர்கின்ற உம் நினைவை
மறக்கத் தெரியாது
இன்னும் எனக்குள்ளே
தொலைந்தே போகிறேன்.....

**பு.டிசாந்தன்**
**கலைப்பிரிவு 2016**

## பொன்மொழிகள்

உன்னைத்தவிர வேறு யாரும் உனக்கு அமைதியைத் தர முடியாது
-ரால்ப் வால்டோ எமெர்சன்-

அடக்கமே அறிவுடைமையின் சிறந்த அடையாளம்
-ஜெர்மிகாலியர்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறிலிருந்து ஈரெட்டுவரை

கடந்துபோன நினைவுகளை எழுத்துக்களாய் மாற்றிவிடத் துடிக்கின்ற இதயமிது. 13 ஆண்டுகள் பசுமையாக வாழ்ந்த வாழ்வை அசைபோடுகையில் அகப்பட்ட சில தருணங்கள். இயற்கையோடு இணைந்து அழகிய சிறுநகரமாகக் காட்சி தரும் நம் நகரம் கிளிநொச்சி. கிளிநொச்சி நகரிலிருந்து நம் கிராமத்திற்கு இரண்டு வீதிகள். ஒரு வீதி ஆரம்பிக்கும் இடத்தில் போர்க்கால நினைவாய் அடியோடு சாய்ந்திருக்கும் பெரிய நீர்த்தாங்கி, மறு வீதி ஆரம்பிக்கையில் போர் நினைவுச் சின்னமும் அதனோடு இணைந்தாற் போல் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் நீர்த்தாங்கி. தொடரும் பயணத்தில் ரம்மியமாகக் காட்சி தரும் குளமும் அதனைத் தொடர்ந்து நடுவே குளிர்மை நிறைந்த வாய்க்காலும் இருமருங்கே உள்ள வீதியூடான இனிய பயணம்.

சிறிது தூரப் பயணத்தில் மென்சாரற் காற்றும், பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் கண்களிற்கு விருந்தளிக்கும் வயலோரங்களினூடான இனிமையான பயணம். வயல் வெளிகள் நிறைவுறுகையில் வட்டக்கச்சி வரவேற்கிறது என்ற அழகிய பெயர்ப்பலகையும் அதனோடு அமைந்த ஆஞ்சநேயர் கோவிலும், அருகே பாமடி சித்திவிநாயகர் ஆலயமும் பரந்து விரிந்த பண்ணையும் எம் ஊரின் ஆரம்பம்.

கிழக்கே எளிமையான சிறியதொரு சந்தையை எல்லையாகவும் தெற்கே பரந்து விரிந்து நம் அனைவரையும் வாழவைக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இரணைமடு தாயையும், வடக்கு, மேற்கு எல்லைகளாக பசுமை நிறைந்த பரந்த வயல்வெளிகளையும் எல்லைகளாகக் கொண்டு பெயரிற்கு ஏற்றாற்போல் அன்பான குடிமக்களையும், கிராமத்தினூடே பாம்புபோல் வளைந்து செல்லும் தண்மை நிறை வாய்க்காலோரங்களினையும், தென்னோலைச் சிரசரப்புக்களுடன் மனம் மயக்கும் தென்னந்தோப்புக்களையும், வண்டுகள் பாடும் மாமரச்சோலைகளையும், கலைநயம் மிக்க கோவில்களையும் தன்னகத்தே கொண்டு மனம் நிறையும் மாரி காலங்களில் கேட்கும் கலிங்கல் ஓசையும், மாரிகாலங்களில் தனித்தீவாகிவிடும் பசுமை நிறைந்த இயற்கை எழில் கொஞ்சும் மருதநிலமும், முல்லை நிலமும் சேர்ந்த எம் அழகிய பசுமைக் கிராமம் வட்டக்கச்சி. ஊரின் நடுவே வைரமாய் மிளிர்ந்து நிற்கும் எம் அழகிய கலைக்கூடம் வட்டக்கச்சி மத்திய கல்லூரி. சின்னச் சின்னதாய் சில நெரும் நினைவுகள் நினைத்துப் பார்க்கையில் ஏனோ மனப்பாரமாய் இனிக்கும் என் கல்லூரி நாட்களினை மீட்டுப் பார்க்கையில்ஏனோ ஓர் இன்பம்.

விசாலமான பெரிய மைதானத்தையும் மத்தியிலே கல்வித் தெய்வம் சரஸ்வதிதேவியின் ஆலயத்தையும் ஒரு புறத்தே குளிர்மை நிறைந்த வாய்க்கால் ஓரத்தையும், மறுபுறத்தே நமக்குத் துணையான சூசையப்பர் தேவாலயமும், சிறிது தூரத்தில் அழகான வயல் வெளிகளையும், அருகே தபாற்கந்தோர், வைத்தியசாலையையும் கொண்டு இயற்கை அழகுடன் இணைந்து காணப்படும் நம் கல்லூரி.

2003 இல் ஆரம்பித்த என் கல்லூரிப் பயணம் தவளும் தேசம் தாண்டிய அந்த மழலைப் பருவம் முட்டி தாண்டாத என் சட்டை, பெற்றவர் சுமந்தகனவு முதுகில் புத்தகப்பையாய், அதில் சங்கீதம் வாசித்தபடி விளையாடும் என் பென்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டி, மழலை சுதந்திரம் பறிக்கப்பட்ட நாள் என் பள்ளி முதல் நாள். பள்ளியில் காலடி பதித்தோம் முதலாம் வகுப்பு மாணவர்களாய். அறியாத முகங்கள் புரியாத நடைமுறைகள் மழலை மொழி மனதை நிரப்பும் முதலாம் வகுப்பு. எமது முதலாம் வகுப்பு ஆசிரியர்கள் அவர்கள் ஆசிரியர்கள் என்பதைவிட எமக்கு செவிலித்தாய் என்றே கூறலாம்.

அழகிய புன்னகையால் பதில் சொல்லும் நம் இனிய முதலாம் வகுப்பு மதிவதனி ஆசிரியர். அடியாத மாடு படியாது என்ற சொல்லிற்கே இலக்கணமாய் நம் கிருபாலினி ஆசிரியர். பிரதான வீதியருகே உள்ள சேலன் மாமரங்களிற்கு கீழே உள்ள தகரத்தாலான எம் முதலாம் வகுப்பறை. தகரத்தில் விழும் மாங்காய் ஓசை எமக்கு இடியோசை போல் கேட்கும். பழகிப்போன பள்ளியில் பகிரத் தொடங்கினேன் வார்த்தைகளை. வார்த்தைகளோடு உணவும் உணர்வும் பரிமாறிக்கொள்ளத் தொடங்கினேன். பாடசாலை அதிபராக சந்திரராஜா அதிபர். தென்னை மரங்களிற்கும், மாமரங்களிற்கும் இடையே நடைபெறும் நம் காலைப் பிரார்த்தனை. இப்போது போல் அப்போது உடற்பயிற்சிக்கான இசை இல்லை. One, Two, Three சொல்லும் நம் உடற்பயிற்சி. மின்சாரமோ, கைத்தொலைபேசியோ இல்லாத எம் சிறுபராயம் சந்தோஷமாய் எப்போதும் நிறைந்திருக்கும். பாடசாலை முடிவடைந்து செல்கையில் எப்போதும் நம் உடையில் சேரும் கிரவல்மண் தூசி நம் கதையும் எம் வீதியின் நிலையும் சொல்லும்.

கணினி விளையாட்டுக்களே அறியாத நாம் கிளித்தட்டும் கெந்திக்கோடும் எம்மோடு இணைந்திருக்கும் மகிழ்ச்சி நாவல்பழம் உண்ட ஊதா நிற நாக்கு சொல்லும் ஐப்பசி மாத வருகையை. சேற்றுடன் செம்மஞ்சள் நிறமாய் மாறிவிட்ட பாடசாலைச் சீருடை சொல்லும் மாரிகால வருகையை. நாட்கள் கிழமைகளாகி, கிழமைகள் மாதங்களாகி, மாதங்கள் வருடமாகியது. இரண்டாம் வகுப்பில் காலடி பதித்தோம். முதலாம் வகுப்பு வகுப்பறையிலே தொடர்ந்த நம் இரண்டாம் வகுப்பு. இரண்டாம் வகுப்பு ஆசிரியர்களாக சாந்தமே உருவாய் சாந்தி ஆசிரியர். மெல்லிய குரலால் மென்மையாம் கதைகள் பல சொல்லிடும் சிவகௌரி ஆசிரியர். துருதுருவென திரியும் நான் நெருப்பிற்குள் கால் வைத்து நெடுநாட்களாய் பாடசாலை செல்லாமல்.

காலங்கள் உருண்டோடின இரண்டாம் வகுப்பு மின்னி மறைந்தது. E மண்டபம், சில சமயங்களில் பலாமரம், மாமரங்களிற்கு கீழேயும் தொடரும் நம் 3ம் வகுப்பு வகுப்பறை. ஏழாலையிலிருந்து பதைபதைக்க வந்தாலும் எந்தக் களைப்பும் இல்லாமல் அன்பாகப் பாடம் கற்பிக்கும் கீதாஞ்சலி ஆசிரியரும். மென்மையாய் பல கதைகள் சொல்லி வண்ணமாய் வந்திடும் சுதர்சினி ஆசிரியரும் எம் மூன்றாம் வகுப்பு ஆசிரியர்கள். காலங்கள் மின்னி மறைந்தது நான்காம் வகுப்பில் காலடி பதித்தோம். பென்சிலுக்கு விடை கொடுத்து பேனாவைக் கரம்பிடித்தோம். ஓலையால் வேயப்பட்டு தறப்பாளினைச் சுவராகக் கொண்ட எமது நான்காம் வகுப்பு வகுப்பறை. பக்கத்து வகுப்பறையை நோட்டமிட தறப்பாளில் ஓட்டை போட்டிருக்கும் நாம். தான் உண்டு தன் வேலை உண்டு என பாடசாலைக்கு வருகை தந்து திறமையாகப் பாடம் கற்பித்து மெதுவாகப் பல அறிவுரைகள் கூறி நம்மை நல்வழிப்படுத்தும் பரமேஸ்வரன் ஆசிரியரும், அன்பாய் பல கதைகள் கூறி அரவணைத்திடும் வத்சலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரும் நம் 4ம், 5ம் வகுப்பு ஆசிரியர்கள். பாடசாலை தாண்டி முதன் முதலாக வெற்றி பெற்ற நினைவாக கிளித்தட்டுப் போட்டி மாலை நேரங்களில் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்புக்கள். மதியம் பாடசாலை முடிவடைந்ததும் வீடு சென்று வரும் வகுப்பாசிரியர் அதற்குள் நாம் விளையாடும் எண்ணற்ற விளையாட்டுக்கள்.

மாங்காய்கள் காய்த்துக் குலுங்கும் நேரங்களில் உப்புத் தூளுடன் நம்பசி தீர்க்கும். வடக்குப்புறமாய் விசாலித்திருக்கும் சேலன் மாமரங்கள். ஐந்தாம் வகுப்பு சுமையானது எனினும் அதில் ஓர் சுகம் கண்டோம். எமது பாடசாலை அதிபராக கனகராஜா அதிபர். மாலை நேர வகுப்பிற்காக ஆசிரியர் வீடு செல்லும் நாம் அங்கும் மாமரங்களிற்கு கீழே நாம் விளையாடும் விளையாட்டுக்கள். ஒருவாறு புலமைப்பரிசில் பரீட்சை நிறைவடைந்தது. பரீட்சைப் பெறுபேறுகளும் வெளியானது. பரீட்சையில் சித்தி பெற்ற ஐவர். சித்தியடைய ஒருபுள்ளி போதாத அவளும் இரண்டு புள்ளி போதாத நானும் எனக்குத் துணையாக அவளும் அவளுக்குத் துணையாக நானும் மனதைத் தேற்றிக் கொண்ட அந்நாட்கள்.

பண்டிகை நாட்களில் கிழிந்துபோன ஒற்றைத்தாளில் நாம் எழுதும் வாழ்த்துச்செய்தி. 10 வயதில் தொடக்கம் முடிவுற்றது. காலச்சக்கரம் சுழன்றது. ஆரம்பக்கல்வி நிறைவடைந்தது. 6ம் வகுப்பில் காலடி பதித்தோம். கசப்பான கணிதம் தனை கனிவுடன் கற்பித்து பல கதை கூறும் நமை எல்லாம் விட்டுப் பிரிந்த கிருபாகரன் ஆசிரியர் நம் 6ம் வகுப்பாசிரியர். புரியாத புதிர்களாய் புதுப்புது பாடங்கள் புதுமையாய் ஒரு உணர்வு. ஆரம்பக்கல்வி போலல்லாமல் பாடசாலை மணியுடன் மாறும் பாட ஆசிரியர்கள். புதிது புதிதாய் சட்டதிட்டங்கள் வேறு. அனேகமாக விளையாட்டுக்களுடனேயே பொழுதைக் கழிக்கும் ஆரம்பக்கல்வி. விளையாடும் நேரம் குறுகலானது இடைநிலைப் பிரிவில்.

போர் வேறு ஆரம்பித்திருந்தது. பட்டாசு ஓசைபோல் தொலைவாகக் கேட்டுக் கொண்டிருக்கும் பீரங்கிச் சத்தம். ஆரம்பத்தில் வித்தியாசமாக இருந்தாலும் போகப்போக பழகி இருந்தது. கதையாகவே கேட்ட அனைத்தும் நிஜமாகவே நடந்தேறத் தொடங்கியது. கழுகுபோல் அவ்வப்போது வரும் வேவு விமானம் இடையிடையே குண்டுமழை பொழியும் கிபிர் விமானம். ஆரம்பத்தில் அனைத்தும் புதிதாகவும் புதிராகவும் இருந்தாலும் போகப்போக எல்லாமே பழகியாயிற்று. புதிதாக பாடசாலையில் வெட்டப்பட்ட பதுங்கு குழிகள். கிபிர் விமான ஒலி கேட்டாலே நினைக்காதது எல்லாம் நினைக்கத் தோன்றும் மனது கையும் ஓடாது காலும் ஓடாது.

எமது பாடசாலைக்கு புதிதாய் பல பல இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து நம்முடன் இணைந்த பல நண்பர்கள், நண்பிகள். புதிதாய் மடுவலயப் பாடசாலை எம் பள்ளியுடன் இணைந்திருந்தது. சராசரியாக வீட்டிற்கு ஒரு பதுங்குகுழி ஒன்றானது. அவ்வப்போது ஊரில் நடக்கும் இறந்த வீடு சராசரியாக நாளிற்கு ஒன்றானது. மூன்றாம் தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. வழமையாக பட்டாசுச் சத்தம் போல் கேட்டுக் கொண்டிருக்கும் வெடியோசை வழமைக்கு மாறாக மிகப்பெரிய இடியோசையாய், ஊரிற்குள் முதலாவது செல் தாக்குதல் மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தியின் மரணச் செய்தி நடக்கக்கூடாதது என நினைத்த அனைத்தும் நடந்தேறத் தொடங்கியது.

மாரியில் ஆரம்பித்த எம் ஊரின் ஆக்கிரமிப்பு மருத நிலமும், முல்லை நிலமும் பாலை நிலமாகியது. கலகலப்பான எம் ஊர் பகலிலும் நள்ளிரவு போல் மயான அமைதியானது. விடியல் தேடி இருளிலும் தொடர்ந்த எம் பயணம் சிறிது சிறிது நாட்களாக ஒவ்வொரு இடமாக நீண்ட எம் பயணம் பலரை இழந்தோம். எனை விட்டுப் பிரிந்த என் சகோதரனிற்கு இணையான என் உயிர் மாமா. அச்செய்தி பொய்யாக இருக்கக்கூடாதா என்ற ஏக்கம்.

விடியலிற்கான போராட்டம் விடியல் இழந்து போனது. உணவிற்கு அலைய வைத்த நாட்கள். பட்டினியாலும் சிலர் மாண்டனர். வாழ்க்கை என்றால் இதுவும் என அர்த்தம் புரிய வைத்த நாட்கள். கண்முன்னே பிரிந்த உயிர்கள்,எப்போது யாருக்கு என்ன நடைபெறும் என எவர்க்கும் தெரியாது. மாயை ஆகிப்போன வாழ்வு. மரத்துப்போன மனது, காதுகளிற்குப் பழகிப்போன மரண ஓலங்கள், வற்றிப்போன கண்ணீர், இருளில் நடைபிணமான எம் பயணம், விடை தெரியாமல் நீளும் பயணம் முடிவின்றித் தொடர்ந்தது. குடும்பங்களாகப் பலர் மாண்டனர். தொலைந்து போன பல உறவுகள் இன்று வரை தொடரும் காணாமல் போன உறவுகளின் தேடல். இறுதிச் சடங்குகள் நடை பெற்றதாக நினைவில்லை. தலை தூக்க முடியாத செல்தாக்குதல். முதலுதவி செய்ய முடியாமலேயே மாண்டுபோன பலர். சிறுசிறு காயங்களிற்காக கைகால்களை இழந்த பலர்.

எப்போது என்ன நடைபெறும் என்ற பரிதவிப்பு. பயத்துடனேயே தொடர்ந்த வாழ்வு. வெறிச்சோடிப் போயிருக்கும் தென்னஞ்சோலைகள் நிறைந்த ஊர்கள். எந்த சஞ்சாரமோ, சலனமோ இல்லாமல் போன வாழ்வு. மருத நிலத்தில் தொடர்ந்த எம்பயணம் நெய்தலில் முடிவடைந்தது. கண்மின்னி மறைவதற்குள் 4 மாதங்களில் 40 வருடங்களிற்கு மீளமுடியாதவாறு ஆனோம். ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் ஒரே வீடு, ஒரே உணவு என்றாக்கியது யுத்தம்.

பலநாட் பயணமாய் ஒருவாறு இறுதியாக முகாமிற்குச் சென்றோம். வெடியோசைகள் கேட்காத நிம்மதியான உறக்கம். புதிதாய் பல நண்பர்களும், ஆசிரியர்களும் பாடசாலைகள் ஆரம்பமாகின. ஊரிற்கு செல்ல அனுமதி. சொந்த ஊரிற்கு வந்த ஆத்ம திருப்தி மீண்டும் புதிதாய் ஒரு உணர்வு. பற்றைக் காடுகளாய் காணிகளும் வீதிகளும். தரைமட்டமாயிருந்த பலரது வீடுகள், அவ்வப்போது ஒரு பேருந்து. அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு பெட்டிக் கடைகள். பேருந்து தரிப்பிடம் போல் வீதிக்கு வீதி இராணுவக் காப்பரன்கள். வடுவாக மைதானத்தில் பெரிய அரண். வீடுகளில் எல்லாம் சன்னத் துளைகளும், துகள்களும் பலர் இறந்திருந்தனர். பலர் வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தனர். மீண்டும் துளிர்விடத் தொடங்கிய எம் பள்ளி வாழ்வு தரம் 08 இல் ஆரம்பித்தது. பாடசாலை அதிபராக திரு. M.C.L. மனுவல் அவர்கள். புதிது புதிதாய் பல வகுப்பறை யுக்திகள். குழுக்களாலாகிய வகுப்பறை. குழுக்களிற்கான சின்னம் வேறு. வாரா வாரம் வழங்கப்படும் புள்ளிகள். சித்திரத்தில் கைதேர்ந்த வரலாற்றை கண்ணியமாய் சொல்லித்தரும் ஜெகதீஸ்வரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் எம் வகுப்பாசிரியர். மகிழ்வுடன் மின்னிமறைந்தது 8ம் தரம். 9ம் வகுப்பில் காலடி பதித்தோம். அன்பால் கட்டிப்போட்டு பொறுமையாய் பல அறிவுரைகள் கூறி கண்ணியமாய் நல்வழிப்படுத்தும் வகுப்பாசிரியராக நளாயினி ஆசிரியர். நம் வகுப்பறையாக D மண்டபம். தனிக்காட்டு ராஜாக்களாக நாம். வகுப்பில் இருந்த நாட்களினை விட மைதானத்தில் இருந்த நாட்களே அதிகம். உடற்பயிற்சி, வலைப்பந்து, கரப்பந்து, உதைபந்து, எல்லே என எதையுமே விட்டு வைக்காத நாம். கடின உழைப்பால் அனைத்துப் போட்டிகளிலும் மாவட்ட மட்டத்தில் வென்று வந்த அந்நாட்கள்.

அனைத்தையும் மறந்து மகிழ்ந்திருக்கும் அத்தருணங்கள். பெரும்பாலும் விளையாட்டுடனேயே கழிந்த என் 9ம் தரம். காலங்கள் உருண்டோடின மாகாணமட்டப் பரீட்சைகள் நிறைவடைந்து நல்ல பெறுபேறுகளைப் பெற்ற நாம் காலச்சக்கரம் சுழன்றது 10ம் வகுப்பில் காலடி பதித்தோம். பிரதான மண்டபத்தின் மேடைக்கு அருகிலுள்ள நம் வகுப்பறை. பெரும்பாலும் கலகலப்பாகவே கடந்து சென்ற நம் பள்ளி நாட்கள். விளையாட்டுடனே இணைந்திருக்கும் நம் கல்வி. விளையாட்டுப் போட்டிகளில் நாம் பெற்ற வெற்றிகளுக்கு எல்லாம் பக்கபலமாக நம் உடற்பயிற்சி ஆசிரியராக அருந்ததி ஆசிரியர். எம் பள்ளிக்காலம் முழுவதும் மாறாத ஒரே உறவாய் பானு அக்கா.

காலம் மின்னி மறைந்தது. சாதாரண தரத்தில் காலடி பதித்தோம். அனல் பறக்கும் பரீட்சைக்கான போட்டி, போட்டியாய் படிக்கும் அனைவரும். மேடைக்கு அருகிலுள்ள வகுப்பறையிலேயே தொடர்ந்து நம் சாதாரண தரமும். நாளிற்கொரு அறிவுரை கூறும் ஆசிரியர்கள். எம் வகுப்பிலும் இல்லாதவாறு இனிமையாகக் கடந்த எம் சாதாரண தர வகுப்பறை நாட்கள். புதிதாய் நடைபெறத் தொடங்கிய மாலைநேர வகுப்புக்கள். ஆவணி மாத விடுமுறையிலும் நடைபெறும் பிரத்தியேக வகுப்புக்கள். சாதாரண தரப் பரீட்சைக்காக எமக்காய் உழைத்த ஆசிரியர்கள். வழமையாகவே ஆரவாரமாய்க் கற்கும் நமக்கு வித்தியாசமான உணர்வைத்தரும் மயான அமைதி நிறைந்த இரவு நேர வகுப்புக்கள். போட்டி நிறைந்த பரீட்சைகளிலும் கலகலப்பான நம் பள்ளி நாட்கள். கைதட்டிய கலை நிகழ்ச்சிகள், மண்டியிட்ட வகுப்பறை வாசல், கிறுக்கப்பட்ட கரும்பலகை, புரியாத புதிராய் வினாத்தாள், என நவரசம் நிறைந்த பசுமையான நினைவுகள், சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்தது. சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நாம். வெவ்வேறு பாதைகளைத் தேர்ந்தெடுத்து உயர்தரம் என்ற ஊரை நோக்கி வெவ்வேறு பாதைகளினூடாக பயணத்தைத் தொடர்ந்தோம்.

இவ்வாறு என் வாழ்வில் இருந்து பிரிக்க முடியாத அந்த பள்ளிப் பருவத்தில் இருந்த நினைவுகள் என்ற ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு கண்ணீருடன் கரையேறுகின்றேன்.

**குமரதாசன் விதுஷா**

**2016 [உயிரியல்]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இணையம் பேசுகிறேன்

உம்முடன் உமக்காக என்றும் இருக்கும் ஒரே வழிகாட்டி நானே... என்னைப்போல் ஒரு நல்ல நண்பன் இவ்வையகத்தில் யாருமில்லை. "நான் ஒரு பாதை வழிகாட்டியாக, அறிவுக் களஞ்சியமாக, பொழுது போக்கிற்கு நல்ல முறையாகவும், உங்களை நாள் முழுவதும் வைத்திருக்க முடியும்" இது Youtube மேலே சத்தியம் இதற்கு நீங்கள் செய்ய வேண்டிய ஒரே வேலை Data Card ஐ போடுவது தான். உங்களுக்கு ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றி தேடவேண்டும் என்றால் நீங்கள் முதல் எழுத்தை Type பண்ணும் போதே நான் தேட ஆரம்பித்து விடுவேன். நீங்கள் தேவையானதை பெறுவீர்களோ அல்லது வேறொரு விடயத்தில் உங்கள் கவனத்தை செலுத்துவீர்களோ என்பது பிரச்சினை இல்லை. நீங்கள் online இல் தான் இருப்பீர்கள் இது சத்தியம்.

சரி பரவாயில்லை தேடி வந்த விடயத்திற்கு சென்று விட்டீர்களா "அப்பாடா....." சீ..! கொஞ்சம் பொறுங்கோ.... கண்ணைக் கவரும் அளவிற்கு புதிய Links எல்லாம் இருக்கும். Advertisements,Online Games என பல இருக்கும். கொஞ்சம் Boring ஆக இருந்தால் அதை Click பண்ணலாம். அது வெகு சுலபம் "Click Here" "Download" "Play" என போடப்பட்டிருக்கும் அதைத் தொட்டதும் புதிய பக்கத்திற்கு போகலாம். அட! தேடிய விடயம்? "அது பிறகு பார்க்கலாம் தானே"

"இல்லை நான் இப்படியெல்லாம் Link களுக்கு போக மாட்டேன்" என்று சொல்லுவார்கள் பொறுங்கோ! அவர்களுக்கு என என்கிட்ட வேற ஐடியா இருக்கு நீங்கள் Back பண்ணி Front page க்கு போகும் போது You also might Like என நீங்கள் தேடியதுடன் சம்மந்தப்படுத்திய வேறு சில தலைப்புக்களை காட்சிப்படுத்துவேன். "அட அதுக்கும் ஒருக்கால் போய் பார்ப்பம்" என்று அடுத்தற்திற்குள் போய் விடுவீர்கள் ஆம் நான் உங்களை கைவிட மாட்டேன்.

ஆ! இவ்வளவு நடப்பதற்கு ஒரு 15 நிமிடங்களாவது எடுக்கத் தான் செய்யும் அதற்குப் பிறகு என்ன சும்மாவா!! உங்களிடம் "Skype, Whatsapp, Viber, Face Book, Twitter...." இதில் ஒன்றிலாவது சிக்காமலா போய் விடும் ஒரு "Hi" போட்டால் போதும் நீங்களும் பதிலுக்கு "Hi" போடுவீர்கள் அதற்குப் பிறகு என்ன Chatting தான் ஆ..!! சரி சரி கதைக்கிறதுக்கு நிறைய இருக்கும் நான் இடையூறு செய்ய மாட்டேன். அது உங்கட Privacy அதற்கு ஒரு 15 நிமிடங்களாவது போய்விடும். இனி Face Book, Twitter இல் ஏதாவது Upload பண்ணியிருந்தால் வந்த Comments, Likes பார்க்க வேண்டும். அதை விட நீங்களும் Comment, Like பண்ணத்தானே வேணும் இதை விட friend request என அதற்குள் கொஞ்ச நேரம் ஆம் நான் சத்தியத்தை மீறுவதில்லை. என்ன செய்ய? என்ன தான் ஆனாலும், சனி பகவான் உச்சம் கொடுப்பதாலோ என்னவோ? Data முடிந்து விடும். பிறகு என்ன... சரி பரவாயில்லை Night Data இருக்குத் தானே மீண்டும் இரவில் சந்திப்போம் 21ம் நூற்றாண்டின் என்னைப் போல் அரிச்சந்திரன் யாருமில்லை.

**கா. தனுஷா**
**உயிரியல் 2016**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளும் தமிழருக்கான நிழல் அரசும்

ஒரு குட்டி வன்னிக்குள் 7 விமான ஓடு பாதைகள் அப்படியானால் புலிகளிடம் ஒரு நாடு கொடுக்கப்பட்டிருந்தால் நிச்சயம் சொல்லவா வேண்டும் எப்படி இருந்திருக்கும்? மேற்குலகில் போர் வீரர்களை எப்படி நினைவு கூருகிறார்களோ அது போல் ஊரில் துயிலும் இல்லம், கல்லறைகள் ஒவ்வொன்றும் நேர்த்தியுடன் வடிவமைப்பு. வானொலி தொலைக்காட்சி யாவும் தூய தமிழ் உச்சரிப்புடன் இலங்கையின் வானொலி வரலாற்றில் “வோக்கி டோக்கி” உதவியுடன் முதன் முதலாக பாடல் விரும்பி கேட்கும் நிகழ்ச்சியை நடாத்தியதே தமிழீழ வானொலி தான். நம்மில் எத்தனை பேருக்கு இது நினைவிருக்கு, பங்குபற்றி பாடல் கேட்பவர்கள் களமுனை போராளிகள் இன்னும் சொல்ல அதிகம் இருக்கு. இதற்கே ஆச்சரியப்பட்டால் என்ன செய்வது? ஆயப்பகுதி என்று ஒன்றினை உருவாக்கி வைத்திருந்தார்கள். இதன் மூலம் வரி தீர்வை விலக்கு போன்றவற்றினை புலிகள் நிர்வகித்தனர். புலிகள் பகுதிக்குள் இணைய வசதிகள், மின்சார வசதிகள் வந்த பின்னர் இந்த ஆயப்பகுதிக்கு என்றே தனியாக ஓர் இணைய வசதிகள் உருவாக்கி உலகெங்கும் கொண்டு சென்றார்கள் அகதிகளுக்கும் வறுமைக் கோட்டின் கீழ்வரும் குடும்பங்களுக்கும் உதவுவதற்கு என்று புலத்தமிழ் உள்ளவர்களின் உதவியோடு இயங்கும் வகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் தமிழர் புனர்வாழ்வு கழகத்தைக் கட்டியெழுப்பினார். இந்த புனர்வாழ்வு கழகத்திற்குச் சொந்தமான 400 மில்லியுன் கோடி ரூபாவினை இலங்கை அரசு 2006 ம் ஆண்டில் கையகப்படுத்தியிருந்தது.

படகுகளை வடிவமைக்க எம் தேசத்தின் கடற்றொழிலை விரிவாக்க வெளிநாட்டு உதவியுடன் படகுக் கட்டுமானத் துறையினை உருவாக்கியிருந்தார் பிரபாகரன். இது 2002 இல் உருவாக்கப்பட்டது. வெளிநாட்டில் உள்ள தமிழ் அன்பர் ஒருவரின் உதவியுடன் முதன்முதலாக பசுப்பாலை செயற்கை முறையில் இயந்திரங்களின் உதவியுடன் எடுக்கும் முறையினை உருவாக்கினார்கள். பசுப்பால் பதனிடுதல், பக்கட்டில் அடைத்து பாலை விற்றல் ஆகியவை இம்முறை மூலம் செயற்படுத்தப்பட்டது.

இந்த நிறுவனம் கிளிநொச்சியில் தான் முதன்முதலில் அமைக்கப்பட்டது. பெயர் ஞாபகம் வரவில்லை சர்வதேச தரத்திலான ஒரு கிரிக்டிகட் ஸ்டேடியம் அறிவியல் நகர் பகுதியில் நிர்மாணிக்க திட்டம் தொடங்கப்பட்டது. அதுவும் நிர் மாணிக்கப்பட்டிருந்தால் புகழ் பெற்ற மைதானமாக மாறியிருக்கும் போராளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமனே களப் பணிகளில் மாத்திரம் இருக்கக் கூடாது கல்வியிலும் முன்னேற வேண்டும். எனும் நோக்கில் அறிவியல் நகரில் தூயவன் அரசறிவியற்கூடம், லெப் கேணல் நவம் அறிவுக்கூடம், துளசி ராம் இலக்கிய வட்டம், படையத் தொடக்கப் பயிச்சிக் கல்லூரி மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான கணினிக் கலையகம் எனப் பல கல்விக் கூடங்களை தமிழர்களின் தலைவர் உருவாக்கியிருந்தார்.

வன்னிக்குள் சுனாமி வந்த நேரம் தந்திரமாக வெளிநாட்டுடன் பேசி, காலநிலை வானிலையினை அவதானிக்கும் நோக்குடன் "இண்டெல் சாட்" எனும் சாட்டிலைட் (Satellite) சேவையினை வரவழைத்தனர். புலிகள் பின்னர் அதன் மூலம் தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையத்தினையும் வானிலை அவதானிப்பு நிலையத் தையும் உருவாக்கினார்கள். அதன் பிறகு செய்மதியில் இயங்கக் கூடியதாகவும் அனைத்துலகினையும் சென்று சேரக் கூடியதாகவும் தமிழீழ தேசிய தொலைக்காட்சியினையும் உருவாக்கினார்கள்.

தமிழ் மக்களுக்காக தமிழ் பேசும் மக்களால் போராளிக் கலைஞர்களால் நடாத்தப்படும் வானொலி இயங்கிக் கொண்டிருந்தது. பல புதிய தொழில்நுட்ப அம்சங்களுடன் இலங்கை வரலாற்றில் மிகச் சிறந்த ஒளிப்பதிவுடனும் தொழில் நுட்பங்களுடனும் கூடிய படங்கள் வன்னியில் தான் வெளியாகியது. இவற்றை வெளியிட்ட உரிமை தமிழீழ திரைப்பட உருவாக்கற் பிரிவிற்கும், நிதர்சனா நிறுவனத்தினருக்குமே சாரும். அதேபோல ஒலிப்பதிவில் சிறந்த பாடல்களை உருவாக்கிய பெருமை தர்மேந்திராக் கலையகத்திற்கும், நிதர்சனா நிறுவனத்திற்குமே சாரும்.

தமிழீழ மக்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் கல்விக்கழகத்தினை உருவாக்கினார்கள். இதனூடாக வன்னி யில் புலமைப்பரிசில், சாதாரண தரப்பரீட்சை, உயர்தரப் பரீட்சைக்களுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சைகளும், ஆண்டிறுதிகப் பரீட்சையும் நிகழ்த்தப்பட்டன.

இலங்கை வரலாற்றில் முதன் முதல் வெளிநாடுகளில் உள்ளது.போன்று அளவுக்கு மீறிய ஸ்பீட்டில் ஓடும் வாகனங்களை பிடிப்பதற்கான கருவியையும் வேகத்தடைக் கண்காணிப்பினை நிகழ்த்திய பெருமையும் தமிழீழ காவற் துறையினரையே சாரும். இலங்கை அரசால் தமிழர் தம் வரலாறுகள் மறைக்கப்பட்டு இளஞ் சந்ததிக்கு பாட நூல்கள் ஊடாக திரிபுபடுத்தப்படுவதை உணர்ந்த புலிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கழகம் ஊடாக 2000ம் ஆண்டிலிருந்து வரலாற்றுப் புத்தகங்களையும் ஏனைய சில பாட நூல்களையும் அச்சிட்டு வெளியிடத் தொடங்கினார்கள். தரமான போக்கு வரத்துச் சேவையை மக்களுக்கு வழங்கும் நோக்கில் தமிழீழ போக்குவரத்துச் சேவையினையும், போக்குவரத்து கண்காணிப்பு சேவையினையும் உருவாக்கினார்.

இறந்த போர் வீரர்களை என்றுமே எம் இதயத்தில் இருத்தி வைக்கும் நோக்கில் மாவீரர் துயிலும் இல்லங்களில், கல்லறைகளை உருவாக்கினார்கள். அதே போல மாவீரர் விபரங்களை திரட்டிட மாவீரர் பணிமனையினை உருவாக்கியிருந்தார்கள்.

ஊர்கள் தோறும் சனசமூக நிலையம், நூல் நிலையம் ஆகியவை இல்லையே எனும் குறையினை நீக்க மாவீரர் படிப்பகத்தினை உருவாக்கி எம்மவா் கல்விக்கு காப்பரன் இட்டவர் எங்கள் தலைவரே.

கலைகளையும், இலக்கியங்களையும் வளர்க்கும் நோக்கில் தமிழீழ கலைப்பண்பாட்டு பிரிவினை உருவாக்கினார். மக்களுக்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகளை விரிவுப்படுத்தும் நோக்கில் ஊர் தோறும் அரசியல்துறை அலுவலகங்களை நிர்மாணித்திருந்தார்.

பாலர் முன்பள்ளிகள், ஆதரவற்ற சிறுவர்களுக்கு அண்ண னாகவும் மாமனாகவும் தான் இருக்கிறேன் எனும் நோக்கில் அரவணைத்திட காந்தரூபன் அறிவுச் சோலை, செஞ்சோலை, சிறுவர் இல்லம் ஆகியவற்றினை அமைத்து இருந்தார்.

**சு.கோபிதரன்**
(2016 com)

**சிந்தனைக்கு சில**

*சத்தமின்றி சேவை செய்கிறார்கள் சிலர் கூச்சமின்றி விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள் பலர்*

*உடனிருப்பவர்களுடன் ஒருமுறையேனும் கருத்து வேறுபாடு ஏற்படவில்லையெனில் நீங்கள் உங்கள் முகமூடியை மிகச் சரியாகப் பயன்படுத்துகிறீர்கள் என்று அர்த்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவ வயதினிலே

அழகிய பருவமது அம்சமாய் தெரியுமது
வெண்பனிச் சாரலும் மெல்லிசைத் தூறலும்
துள்ளிசைக் காற்றும் சேர்ந்தே அணைப்பது போல
மாரிச் சாரலில் இரண்டாம் வாரத்தில்

பள்ளிப் பருவம் முதல் பதினெண் வயது வரை
கட்டியிழுக்கும் கயிறு அது
காதலிக்க வயதிருக்கு கற்பனைக்கு அளவிருக்கு
கனவிற்கொரு முடிவிருக்கு அத்தனைக்கும் எல்லையிருக்கு

கடந்து விட்டால் சுகம் சிக்கி விட்டால் கஸ்ரம்
ஈராறில் தொடங்கி மூவாறில் முடியும் காதல் பருவக் காதல்
அதைக் கடந்து விட்டால் வருமே பெற்றோரின் பாசக் காதல்
காதல் செய்வதில் தப்பில்லை கற்கும் வயதில்

கல்வியை காதலிக்கா விட்டால் நாளைய சோற்றுக்கு உப்பில்லை
பருவ வயதில் வரும் வெள்ளம் அணை கட்டி விட்டால்
கற்கும் வயதில் விட்ட கல்வியை
காற்றில்லாவிடில் தூற்ற முடியுமா?......

இத்தனையும் தெரியாவிட்டால் இலட்சிய வாழ்க்கைக்கு பாதையில்லை
இன்றைய அத்திபாரமும் நாளைய கட்டடமும்
பருவ வயது மங்கயரில் தம் இளைஞரிலுமே.

**சி.தர்சன்**
**வர்த்தகப்பிரிவு 2016**

**சிந்தனைக்கு சில**

நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார் ஓடுவது முள் அல்ல
உன் வாழ்க்கை
ஒருவனின் காலடியில் வீழ்வதை விட எழுந்து நின்று உயிரை விடுவது
எவ்வளவோ மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறிய பயணம்

இலத்திரனியல் உலகின் உச்சத்தில் இன்றைய சமுதாயம் தம் வாழ்வின் இலக்கை நோக்கி தடம் மாறிய பாதையில் பயணத்தை தொடர்கிறது. தடம் மாற்றத்தின் காரணம் தேடி தோற்றுப்போய் கொண்டே நாம் இருக்கின்றோம். பாதைமாறி செல்லும் தம் பிள்ளைகளை விபரீத உலகிலிருந்து எவ்வாறு மீட்பது எனும் யோசனைகள் இப்போது அனைத்துப் பெற்றோர்கள் மனதிலும் ஓடிக் கொண்டிருக்கலாம். அந்தப் பெற்றோர்கள் அனைவருக்குமே தெரிந்தே இருக்கும் இன்றைய குழந்தைகளுக்குக் கிட்டியிருக்கும் அதீத தொழில்நுட்ப வசதிகளைக் குறித்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை அலைபேசிகள் அதிகமாகப் புழக்கத்தில் இல்லை. கணிணி மையம் என்பது கூட எங்கோ நகரின் வணிகப் பகுதிகளில் ஏதொ ஓரிடத்தில் மட்டுமே நான் கைந்து கணினிகளுடன் காணக்கிடைக்கக் கூடிய ஒரு சிற்றறையாக இருந்தது. அங்கேயும் கூட ஆண்களின் பழக்கமே அதிகமிருக்கும் .உலகத்துடனான மக்களின் ஒரே தொடர்பு சாதனமாக அப்போது இருந்தது. செய்தித்தாள்களும், தொலைக்காட்சியும், வானொலியும் மட்டுமே. இப்படியான சூழலைப் பற்றி இப்போது யோசிக்கக்கூட முடியாது. இப்போது எல்லோருக்கும் உள்ளங்கையில் விரிகிறது உலகம்.

வீட்டுக்கு ஒரு லேண்ட்லைன் அலைபேசிகள் இருப்பதே அந்தஸ்தாக இருந்த காலம் மாறி இப்போது வீட்டுக்கு ஐந்தாறு அலைபேசிகள் வந்தாயிற்று. தனிமனிதர் ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் 3 ஸ்மார்ட் போன்களையாவது வைத்துக் கொள்வது தான் இப்போதைய ட்ரெண்ட் தொழிநுட்ப வளர்ச்சி என்பதும் வசதி என்பதும் இப்போதும் மக்களின் வேலைகளை எளிதாக்க கிடைத்த வரங்களாக அல்லாது அவரவர் அந்தஸ்தைப் பறைசாற்றும் பகட்டு வஸ்துக்களாகி விட்டன. இவற்றில் எதிலொன்றிலும் நமக்கு நிரந்தர திருப்தி என்று எதுவும் கிட்டுவதே இல்லை. பொருட்களை வாங்கி உபயோகித்து மகிழ்வதற்கான ஆயுட்காலம் என்பது வெகுவாகக் குறைந்து விட்டது. ஒரு ஸ்கூட்டர் வாங்கினால் 5 வருடங்களில் புதிதாக மாற்ற நினைக்கின்றோம். ஒரு ஸ்மார்ட் போன் வாங்கினால் அதை மாறிக் கொண்டே இருக்கின்றோம். எலெக்ரோனிக்கல் தொழிநுட்ப வசதிகளுக்கு ஏற்ப வருடம் ஒருமுறை மாற்றினால் என்ன? என்று மனம் புதுப்புதுப் மாடல் ஸ்மார்ட் போன்களை காணும் போதெல்லாம் அலைபாயத் தொடங்கி விடுகிறது. பெரியவர்களின் மனநிலை இப்படி இருக்கையில் குழந்தைகளை அதிலும் வளரிளம் பருவத்திலிருக்கும் குழந்தைகளின் மனநிலையைப் பற்றி என்ன சொல்ல முடியும்?.

அவர்களது உலகத்தில் ஸ்மார்ட் போன்கள் இல்லையேல் குதூகலமே வற்றிப் போய் விட்டாற் போலாகி விடுகிறது. பள்ளிப் பாடச்சுமைகளைத் தாண்டியும் அவர்களால் ஸ்மார்ட் போன்களில் தரவிறக்கம் செய்து கொண்ட ஒன்லைன் விளையாட்டுக்களுக்காய் நேரம் ஒதுக்க முடிகிறது.ஒரு நாளில் ஒரு தடவையாவது ஒன்லைன் விளையாட்டுக்களில் ஈடுபடாத குழந்தைகளைக் காண்பதென்பது இன்று அரிதிலும் அரிதான விஷயம் ஒன்லைன் விளையாட்டுக்களைத் தயாரித்து களமிறக்கும் சம்பந்தப்பட்ட கேம் தயாரிப்பு நிறுவனங்கள் இன்று கோடிகளில் கொழிக்கின்றன. ஆனால் அவற்றைத் தரவிறக்கி விளையாடி, விளையாடி ஒரு காலகட்டத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த விளையாட்டுக்களுக்கு அடிமையாக்கி குழந்தைகள் மற்றும் மாணவர்களின் வாழ்வு தான் பின்னாட்களில் அழிந்து போகிறது.

இன்று நம்மிடையே ஓய்வு நேரம் மொத்தத்தையும் ஒன்லைன் விளையாட்டுக்களில் தொலைக்கும் குழந்தைகளும், மாணவர்களும் அனேகமாயிருக்கின்றனர். அவர்களிடம் கேட்டுப் பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் என்னென்ன ஒன்லைன் விளையாட்டுக்களில் எல்லாம் நேரம் செலவழிக்கிறார்கள் என? சொல்வதற்கு அவர்களிடம் ஒரு மிகப் பெரிய பட்டியலே இருக்கும். உதாரணத்திற்கு கீழே சில ஒன்லைன் விளையாட்டுக்களைப் பாருங்கள்.

போக்கிமேன், ஆங்ரி பேர்ட்ஸ், கோன்டி கிரஷ்சகா, புளுவேல், கிளாஸ் ஆப் கிளான்ஸ், டோக் கிங் டோம், மோஷி மான்ஸ்டர்ஸ், பைரெட் கிங்ஸ், டீன் பாட்டி, றியோ பெட்ஸ், கிளப் பெங்குவின், ஃப்ரீயால்ம்ஸ், ஃபியூஷன் ஃபால, ஸ்டார் வோர், வெபோ ஸர்ஸ் மேற்கண்டவற்றில் பெரும்பாலன விளையாட்டுக்கள் ஏதேனும் ஒரு வகையில் வன்முறையை அடிப்படையாகக் கொண்டவையே! இந்த விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல் தங்களுடைய மன அழுத்தம் குறைவாகவே பல மாணவர்கள் தேர்ந்தெடுத்து விளையாடக் காரணங்கள் என்ன?

வீட்டில் போதுமான கண்காணிப்புக்கள் இன்மை, வயதைப் பொருட்படுத்தாது இணைய வசதிகளைப் பயன்படுத்தக் கிடைத்த சுதந்திரம், என் மகளுக்கு ஸ்மார்ட் போனில் அத்தனை விஷயங்களையும் அத்துப்படி என 3 வயதுக் குழந்தையை பார்த்துக்கூடப் பெருமிதப்பட்டுக் கொள்ளும் பெற்றோர் மனப்பான்மை இளங்கன்று பயமறியது என்பது மாதிரியான பருவத்திலிருக்கும் தங்களது குழந்தைகளை நெறிப்படுத்த போதிய அவகாசமில்லாத பெற்றோர்கள்.

கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தொல்லை செய்யும் குழந்தைகளை அடக்க ஒரே வழி தொலைக்காட்சியும், ஸ்மார்ட் போன் விளையாட்டுக்களுமே என முடிவு செய்து அவற்றைப் பழக்கப்படுத்தும் பெற்றோர் மற்றும் பெற்றோரில்லாத நேரத்தில் குழந்தைக் காப்பாளர்களின் தவறான அணுகுமுறை.

எந்த ஒரு விளையாட்டிலும் "த்ரில்" உணர்வைத்தேடும் மாணவ மனப்பான்மை. முந்தைய தலை முறையைப் போலல்லாது பிள்ளைகள் இம் எனுமுன் அவர்கள் கேட்பதை எல்லாம் வாங்கித் தரும் பெற்றோர்கள். தங்களுடன் அதிக நேரம் செலவளிக்க இயலாத பெற்றோரை எவ்விதமாக மூளைச்சலவை செய்து தமது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். எனும் தந்திரமறிந்து வைத்திருக்கும் பிள்ளைகள் இப்படி அனுமான் வால் போலக் காரணங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன.

மேற்கண்ட காரணங்களால் எப்போதும் குற்றவாளிக் கூண்டில் நிற்பது பெற்றோர்களே!

**பூ.டனிஸ்ரன் யூட்**
**2017 வர்த்தகப்பிரிவு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிவாளம்

நமது உடம்பு எங்கே இருக்கிறது என்பது முக்கியமல்ல, மனம் எங்கே இருக்கிறது என்பது தான் முக்கியம். உடம்பு போகின்ற இடங்களுக்கெல்லாம் மனது வருவதில்லை. உடம்பை ஓரிடத்தில் உட்கார வைத்து விட்டு, மனது எங்கோவெல்லாம் சென்று திரும்பி விடும்.

மனது போகின்ற வேகம் மிகப் பெரியது என்பதாலே தான் வாயு வேகமானோர் வேகம் என்றெல்லாம் நம்முடைய மூதாதையர்கள் வருணித்தார்கள் நன்மைகள் தீமைகள் அனைத்துமே மனத்தின் கண் தான் இருக்கின்றன. அனைத்தும் துறந்தும் கூட கூட வந்த நாயைத் துறக்க முடியாத பத்திரிகையாரைப் போல எல்லாவற்றையம் துறந்தாலும் கூட இந்த மனது செய்கின்ற வேலையைத் துறக்க முடியாமல் நாம் அவதிப்படுகிறோம்.

"காதி பிளையாடி இருகை வீசி வந்தாலும் தாதி மனம் நீர்குடத்தே" என்றார் பட்டினத்தார். என்ன தான் ஆட்டம் போட்டுக் கொண்டு போனாலும், தாதி நீர்க் குடத்திலே தான் மனத்தை வைத்திருப்பாள். தாதி என்றால் வேலைக்காரி தண்ணீர் தூக்கி வருகின்ற வேலைக்காரி என்ன தான் வேடிக்கைப் பேச்சுப் பேசட்டும், விளையாடட்டும், அவள் இடுப்பிலே இருக்கின்ற குடத்தின் மீதும் தண்ணீரின் மீதும் தான் மனது லயித்திருக்கும்.

ஞானிகளுடைய உள்ளமும் அப்படியே தான் ஆனால் சராசரி மனிதன் அவஸ்தைப்படுவதெல்லாம் இந்த மனத்தின் போக்கினாலே தான். ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருப்பவனுக்கு வீட்டுச் சாப்பாடு பிரமாதமாக தோன்றுகின்றது! வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டிருப்பவனுக்கு ஹோட்டல் பலகாரம் மிக அற்புதமாகத் தோன்றுகின்றது.

மாறுபட்ட உணர்வுகளே மனத்தின் லயங்கள். மனிதன் அறியும் படி வைப்பதும் அந்த மனது தான், தன்னை அறிய விடாமல் தடுப்பதும் அந்த மனது தான். நான் எல்லாவற்றையும் விட உயர்ந்தவன் என்ற ஆணவத்தை உண்டாக்குவதும் அந்த மனது தான். நான் எல்லோரையும் விடத் தாழ்ந்தவன் என்ற அறிவை உணர்த்துவதும் அந்த மனதுதான்.

நாம் என்ன தான் உணர்ந்தவர்களாக இருந்தாலும் பணிந்து போக வேண்டும். என்ற பணிவை உண்டாக்குவதும் அந்த மனது தான். ஆகவே தன்னை அறிய வேண்டிய மனிதன் முதன் முதலிலே வெல்ல வேண்டிய பெரிய எதிரி மனது.

உடம்பிலே இரத்தக் கொதிப்பு ஏறுவதற்கு உடம்பு மட்டும் காரணமல்ல. மனத்தின் டென்ஷன் தான் முக்கியமான காரணம் என்று மருத்துவ நிபுணர்களும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோதத்துவ நிபுணர்களும் கூறுகின்றார்கள். உலகிலுள்ள நிபுணர்களில் விஞ்ஞான நிபுணர்களைக் கூடப் பெரிதாக நினைப்பதில்லை. ஆனால் மனோதத் துவ நிபுணர்களையே உலகம் பெரிதும் மதிக்கிறது. காரணம் மனத்தை நன்றாக அறிந்து கொண்டவன் தான் உலகை வெல்ல முடியும் எதையும் வெல்ல முடியும் என்று உலகம் கருதுகிறது. ஒவ்வொரு மனிதனுடைய உள்ளமும் கருதுகிறது.

மனிதன் எதனாலே கெடுகிறான். தன்னை அறியாமலே கெடுகிறான்.உனக்குப் பகைவன் யார் நீயே! உனக்கு மரணம் எது? நீயே! உண்மை எது? நீயே! நீ விதைத்த வினைப்பயனை அறுக்க வேண்டியவன் யார்? நீயே உனக்குத் தொண்டன் யார்? நீயே! எல்லாம் நீயே! எல்லாம் நானே என்பதற்கு மூலம் எது? மனது உடம்பு களங்கப்பட்டிருக்கலாம். ஆனால் மனது களங்கப்படாதிருக்குமானால் அந்த உணர்வு கூடப் பரிசுத்தமாய் ஆகிவிடுகிறது.

முதலில் யார் மீதாவது நீ குற்றம் சாட்ட விரும்பினால் உன் மீதே குற்றம் சாட்டிப் பழகு! நான் குற்றவாளி, நான் தவறானவன், நான் சிறியவன், நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். என்றெல்லாம் உணர உன்னை உணர்ந்து கொள்கின்ற தன்மை என்பது ஒரு லயமாக, ஒரு ராகமாக,ஒரு சுருதியாக, ஒரு பாவமாக, நம் மனத்துக்குள்ளேயே எழுந்து விடுகின்றது.

பச்சை இலை தான் புகையிலை. அது பாடம் செய்து வைத்தால் எவ்வளவு நாட்கள் இருக்கின்றது? ஒரு வெற்றிலையை எடுங்கள்,அதை ஒருபுத்தகத்துக்குள் வையுங்கள், பல காலம் கழித்துப் பாருங்கள், அந்த வெற்றிலையின் நிறம் மாறி, அது காய்ந்து போயிருந்தாலும் கூட அப்படியே, அதன் தன்மை கெடாமல் இருக்கும். இது தான் மனத்தைப் பாடம் பண்ணுகிற முறையாகும். மனத்தைப் பாடம் செய்து கொண்டு விட்டால் தன்னை உணருகின்ற தன்மை மிகச் சுலபமாக வந்து விடும். ஆயிரம் பேர் கூடி நம் மீது குற்றம் சாட்டினால் கூட நமக்குச் சிரிப்பு வரும். பத்தாயிரம் பேர் கூடி நமக்குப் புகழ்மாலை சூட்டினாலும் நமக்கு உடம்பிலே புல்லரிப்பு ஏற்படாது. அதனால் தான் மனத்தைப் பாடம் செய்து கொள்ள வேண்டும் என்றார் ஞானிகள்.

எதற்கும் வளைந்து கொடுக்கிறவன், எதிலும் ஆசை வைக்கிறவன் காட்டுக்கு ஓடினாலும் கூட அவனுடைய ஆசை சுற்றிக் கொண்டே இருக்கும். அந்தக் காட்டிலே இருக்கின்ற மரங்களையும், சுற்றிலும் இருக்கின்ற நிலங்களையும் பார்த்தால் இதில் கொஞ்சம் நமக்கு இருக்கக் கூடாதா என்று தோன்றும். ஓடியது காட்டுக்கு பாடியது துறவறப் பாட்டு ஆனால் தேடியதோ பொன்னாசை மண்ணாசை.

காட்டுக்குப் போனாலும் கூட மனது அப்படி ஆகி விட்டால் அந்த லயத்துக்கு ஆட்பட்டு விட்டால் அது அந்த உடம்பையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போய் விடுகிறது. ஆனால் மனது பக்குவப்பட்டு விட்டால் அவன் காட்டுக்குப் போக வேண்டியதில்லை என்பது தான் சிவவாக்கியர் வாக்கு. அவன் அங்கே இருக்கட்டும் பங்களாவிலே இருந்தாலும், அதைக் காடாக மாற்றிக் கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிலே இருந்தாலும் அதை பங்களாவாக மாற்றிக் கொள்ள முடியும். ஓடுகின்ற வண்டிக்குள் இருந்து கொண்டே ஓடாமல் இருப்பவனே உண்மை சந்நியாசி. உண்மையில் மனத்தை அடக்கியவன் சாப்பாட்டைக் காணும் போது பசி எடுக்காதவன் மனத்தை அடக்கியவன் பணத்தைக் காணும் போதும் இது இருக்கிறதா என்று எண்ணாதவன் மனத்தை அடக்கியவன் அடுத்தவனுடைய வீட்டைப் பார்த்து ஐயோ! இவ்வளவு பெரிய வீடா! என்று எண்ணாதவன் மனத்தை அடக்கியவன்.

எந்த ஞானியைப் பார்த்தாலும் மனத்தை அடக்கு மனத்தை அடக்கு என்று ஏன் சொல்லுகிறார்கள்? சகல துன்பங்களுக்குமே அது தான் காரணம் இந்த மனத்தின் லயத்தினாலே தான் மனிதன் கெடுகிறான்.அதனால் தான் மனஸ் என்ற மூலத்தைக் கொண்டு மனுஷ்யன் என்ற வடமொழி வார்த்தை உருவாயிற்று.

நோயுற்ற ஒருவன் ஒரு வைத்தியரிடம் போனான். ஐயா! எனக்கு இன்ன நோய் அதற்கு ஏதாவது வைத்தியம் செய்யுங்கள் என்று கேட்டான்.அந்த சித்த மருத்துவன் ஒரு லேகியத்தை எடுத்துக் கொடுத்தான். “நல்லது ஐயா! இந்த லேகியத்தை சாப்பிடும் போது ஏதாவது பத்தியம் உண்டா,” என்று கேட்டான். அந்த நோயாளி பத்தியம் வேறொன்றுமில்லை லேகியத்தைச் சாப்பிடும் போது குரங்கை நினைத்துக் கொள்ளக்கூடாது அவ்வளவு தான்! என்று மருத்துவன் சொன்னான். நடந்தது அவ்வளவு தான் பிறகு அவன் எப்போது லேகியத்தை எடுத்தாலும் எதிரே குரங்கு வந்து நிற்பது போல் தோன்றும். கடைசி வரையில் அவனால் சாப்பிட முடியவில்லை.

ஏன் குரங்கை நினைத்துக் கொள்ளக்கூடாது என்று வைத்தியன் சொன்னது அவன் மனத்தில் பதிந்து விட்ட காரணத்தால் லேகியத்தைத் தொட்டாலே அவனுக்குக் குரங்கு ஞாபகம் வரத் தொடங்கிற்று. லேகியத்திற்கும், குரங்கிற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? அவன் அதைச் சொல்லாமல் இருந்திருந்தால் இவன் அதை நினைக்கப் போகிறானா? கிடையாது.

அவன் சொல்லிவிட்ட காரணத்தால் மனது அதைச் சுற்றியே வட்டமிட்டது. லேகியத்தைத் தொடும் போதெல்லாம் “குரங்கு குரங்கு” என்கிற எண்ணமே வந்தது. அதன் விளைவாகக் கடைசி வரை அவனால் அந்த லேகியத்தைச் சாப்பிட முடியவில்லை. சில பேரைப் பார்க்கின்றோம். தவறு செய்து விடுகிறார்கள் “ஏன்டா நீ இந்தத் தவறைச் செய்தாய்” என்று கோபத்தோடு கேட்டால் ஐயோ! நான் என்ன செய்வேன்? என் மனது கேட்கவில்லையே! நான் அங்கே போனேன் என்கிறான்.

மனது எதற்குக் கேட்கும் யாரிடம் கேட்கும் நீ உனக்குள் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால் அடங்கியது மனுஷ்யன்! மனுஷ்யனுக்கள் அடங்கியது தான் மனது. இதுதான் வடமொழியினுடைய சாரம். பெரிய ஞானிகள் எல்லாம் அப்படித்தான் வாழ்ந் தார்கள். அவர்கள் ஏன் நீண்ட காலம் வாழ்ந்தார்கள்? மனத்திலே டென்ஷன் இல்லை, நோயில்லை, நோய்க்கு அவர்கள் மருத்துவம் பார்த்துக் கொள்ளுவதுமில்லை, தனக்கு நோய் இருப்பதாக அவர்கள் உணர்வதும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மனத்தை அடக்குவதற்கு வெறும் பக்தி லயம் மட்டும் போதுமா என்றால் போதாது. இது சாதாரணமாக வரக்கூடிய ஒன்றல்ல. எல்லோருக்கும் வந்து விடாது. எல்லோருக்கும் இது வந்து விடுமானால் ஊரிலே போட்டி இருக்காது, உலகத்தில் போர் இருக்காது.

சில பேருக்கு மட்டுமே இது வருகின்ற காரணத்தால் தான் உலகத்தில் அவர்களுக்கு மிகப்பெரிய மரியாதை இருக்கிறது. அவர்களை ஞானிகள் என்கிறோம், மேதைகள் என்கின்றோம், நாமெல்லாம் மனதுக்குக் கட்டுப்பட்டவர்கள்.

என் மனசாட்சி அப்படிச் சொல்கிறது என் மனது இப்படிச் சொல்கிறது. என்று நாம் அடிக்கடி பேசுவோம். மனது சொன்னதை எது கேட்கிறது மூளையா, கண்ணா காதா? இந்த உடம்பு கேட்கிறது அந்த உடம்பு அதன்படி செயல்படுகிறது.

ஏன் அந்த மனத்தை உன்னுடைய இஷ்டத்துக்கு உன் மூளையினுடைய இஷ்டத்துக்கு ஆட்டி வைக்கக்கூடாது? நான் சொல்கிறபடி கேள் என்று ஊசலாடுகின்ற மனதை உள்ளுக்குள்ளேயே அடக்கி வைத்து, பக்குவப்படுத்தி, பாடம் பண்ணி வாழக் கற்றக் கொண்டு விட்டால், உறவு, பந்தங்கள், இரவு, பகல், இறப்பு, பிறப்பு, எதிலேயும் பற்றும், பாசமும், இன்பமும், கண்ணீரும், புன்னகையும் மாறி மாறி வர வேண்டிய அவசியமே இருக்காது.

கோடை வரலாம், வசந்தம் வரலாம், பனிக்காலங்கள் வரலாம், பருவங்கள் மாறுமே தவிர உலகத்தினுடைய உருவம் மாறினாலும் கூட உன்னுடைய நிலைமை மாறாது. மனதை மட்டுமே உன்னால் அடக்க முடியுமானால்.

**ச.யதுர்சன்**
(2016 Com)

**சிந்தனைக்கு சில**

நல்லது செய்ய வேண்டும் என்பதை கொள்கையாக ஏற்றுக்கொள் அதில் துன்பத்தைச் சந்தித்தாலும் பின் வாங்காதே

இரகசியமாய் ரசித்தக் கொண்டே பகிரங்கமாய் விமர்சிப்பவர்கள் மனிதர்கள்.

ஒவ்வொரு செயலும் வித்துக்கள் போன்றதே அவற்றைக் கவனமாகத் தேர்ந்தெடுங்கள் நாளை அவைதான் முள்ளாகவோ, மலராகவோ வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தந்தை

அன்னை மடியிறங்கி
அன்று நான் அழுத போது
வாரி அணைத்திட்டே
வாஞ்சை முத்தம் தந்தவரே
ஆண் மகவு வேண்டுமென்று
அழுதொழுகும் காலத்தில்
குலம் காக்க குமாரி
பிறந்திட்டாள் என்று
குதுகலித்து மகிழ்ந்தீரே
பத்து திங்கள் முடிந்திடவே - தன்
பாரம் இறக்கி வைத்தாள் அன்னை
அன்று தொட்டு இன்று வரை
என் பாரம் சுமக்கின்றீர்
அடி பிசகும் நேரத்திலும்
நெறி பிசகும் காலத்திலும்
ஆசானாய் இருந்து எனை
நல்வழி சேர்ப்பவரே
துன்பத்தின் பாதையை - நீர்
முன் நடந்தே
இன்பவழி எனக்காய் தந்தீரே
எத்தனை நாள் உங்கள்
தூக்கம் தொலைத்தே.
என் துயர் துடைக்க முனைந்தீரே
உந்தன் வாழ்நாள் அத்தனையும்
எந்தன் வளர்ச்சிக்காய் அர்ப்பணித்தீரே
எந் ஜென்மம் பெற்றிடினும்
நீரே வேண்டும் என் தந்தையாய்



சி. ஜனார்த்தனா
(2016 உயிரியல் பிரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பர்கள் வாழ்வின் உயிர் நாடிகள்

நெஞ்சுக்கு நிம்மதி வேண்டுமா?அதற்கு நண்பர்களின் பங்களிப்பு மிகவும் வேண்டிய தொன்றாக காணப்படுகிறது. நண்பர்களால் நமக்கேற்படும் துன்பங்களை அகற்றவும் முடியும்.துன்பத்தின் மேல் துன்பத்தை கொண்டு வந்து சேர்க்கவும் முடியும். எமக்கு ஒரு துன்பம் வரும் போது நழுவிச் சென்று விடவும் முடியும் எமக்கொரு துன்பம் வரும் போது நழுவிச் சென்று விட்டு இன்பத்தில் மட்டும் இரண்டறக் கலந்து மகிழும் நண்பர்களும் உள்ளனர். இவர்களெல்லாம் நண்பர்களல்லர். அது மட்டுமின்றி எம்மை நெறிப்படுத்துகின்ற செயல்களை எம்மிலிருந்து களைந்து எடுத்துவிட்டு துன்பம் தருகின்ற விடயங்களில் எம்மை இணைத்து வேடிக்கை பார்ப்பவர்களும் உள்ளனர்.

நமது வீழ்ச்சியில் வேடிக்கை பார்ப்பவர்களும் வாய்ப் பேச்சினால் எம்மை வளைத்துப் போட்டுக் கொண்டு வினைகளை விளைய வைப்பவர்களையும் நண்பர்களாக எண்ணிக் கொண்டு அவர்களோடு பயணம் செய்வோமாயின் மீள முடியாத சோகம் தான் எம்மைச் சூழ்ந்து கொள்ளும் முகமலர்ச்சியினை வைத்து நண்பர்களைச் சேர்ந்துக் கொள்ளாமல் உள்ளம் மகிழ வைக்க கூடியவர்களையே நண்பர்களாக தேர்ந்தெடுக்க வேண்டும். எம்மோடு எந்நேரமும் இணைந்திருப்பவர்கள் மட்டும் தான் நண்பர்கள் என சேர்ந்து கொள்ளாமல் எமது சிந்தனைக்கும் உள்ளத்தின் போக்கிற்கும் ஒத்த நிலையினை உடையவர்களையே நண்பர்களாக சேர்த்து கொள்ள வேண்டும். இளைஞர்கள் தமக்குப் பக்கத்துணையாக உறவுக்காரர்களை வைத்திருப்பதை விட அதிகமாக நண்பர்களையே வைத்திருப்பர்.

நம் உயிர் நாடியாக வைத்திருக்கும் நண்பர்கள் துரோகம் செய்து விட்டால் மரணம் எம்மைத் தீண்டும் வரை அதன் ரணம் எம்மை விட்டு அகன்று செல்லாது அதனால் நண்பர்களைச் சேர்ந்துக் கொள்ளும் போது உள்ளத் தூய்மை,அன்பு,பண்பு உடையவர்களையே நாம் நண்பர்களாக இணைத்துக் கொள்ள வேண்டும். நாம் துன்பப்படும் வேளையில் ஆறுதல் கூறுபவனாகவும் உதவுபவனாகவும் நண்பன் இருக்க வேண்டும். எமக்கு துன்பம் வரும் போது தப்பினேன் பிழைத்தேன் என விட்டு விட்டு ஓடும் நண்பர்களை நீயும் கை விட்டு விடு.

நண்பர்களாக எம்மோடு இணைந்திருப்பவர்கள் தீங்கு செய்தாலும் அதை அவர்களின் அறியாமை என அலட்சியம் செய்து விட்டு தொடர்ந்து அவர்களோடு நட்பினைப் பகிர்ந்து கொள்வோமாயின் நமது எதிரி கூட நம்மை புகழ்ந்து பாடுவான். நட்பு வெள்ளத்தில் நீந்திக் கொண்டு இருக்கும் போது இதனை விட்டு விலகிக் கொள்வதென்பது வேதனையான விடயமாகும். ஆனாலும் நீ நல்ல நண்பர்களை தேர்ந்தெடு அப்போது நீ வேதனைப்படத் தேவையில்லை. நாம் மகிழ்வாகவும் சந்தோசமாகவும் வாழ வேண்டுமாயின் நல்ல நண்பர்களை நமதாக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறான நண்பர்களின் மூலம் நாம் வேதனையின்றி இன்பமாக வாழ முடியும். நல்ல நண்பர்கள் நம் வாழ்வின் உயிர் நாடிகளாக திகழ்வார்கள்.

**வ.கஜிந்தா**
**(2017 வர்த்தகப்பிரிவு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் இடைவிலகிய மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல்களின் அவசியப்பாடு

இன்று நவீன யுகமானது பலவாறான முன்னேற்றங்களைக் கண்டுள்ளமையினை நாம் காணலாம். இதில் எமது பாடசாலை மாணவர்கள் இவற்றினை எவ்வாறு எதிர் கொள்கின்றனர் என்பது இங்கு கவனம் செலுத்தப்பட்ட வேண்டிய பிரதானமானதொரு விடயமாகும். குறிப்பாக நாம் இன்று ஒரு பாடசாலை மாணவரிடம் எதற்காக நீங்கள் கல்வி கற்கின்றீர்கள்? எனக் கேட்கும் போது அங்கு பலவாறான விடைகளை நாம் பெற முடியுமாக இருக்கும். எது எவ்வாறாயினும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியதொரு பக்கம் இருக்கிறது. இன்றைய வளர்ந்து வரும் நவீன உலகிற்கு ஏற்ற வகையில் மாணவர்கள் தமக்கானதொரு சிறந்த தொழில் வாய்ப்பினை பெற்றக் கொள்ளல். அல்லது எதிர்கால வேலை உலகிற்கு ஏற்ற வகையில் தம்மை ஆயத்தம் செய்தல் என்ற விடயமே அதுவாகும்.

ஒரு மாணவன் அல்லது ஒரு நபர் தனது அறிவு, திறமை, ஆற்றல் உளச்சார்பு நிலையினை மையமாகக் கொண்ட தொழில் வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றனரா? அல்லது அதனைப் பெறுவதற்கான திறமையான இவர்களை மையப்படுத்திய வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றதா? என்ற கேள்விக்கான விடைகாண விளையும் போது அங்கு பல எதிர்மறையான பதில்களை எம்மால் பெற்றக் கொள்ள முடியுமாக இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

நாம் இவ்வாறு கூறும் போது இன்று இவர்களுக்கான வழி காட்டுதல் எங்கிருந்து கிடைக்கப்பெற வேண்டியுள்ளது. என்ற விடயம் இங்கு தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. நாம் பலவாறான தவறான எண்ணப் பதிவுகளைக் கொண்டுள்ளோம் என்ற விடயமானது மாணவர்களின் வாழ்க்கையில் பிரதிபலிப்பதைக் காண கூடியதாக இருக்கின்றது.

பெற்றோர்கள் தமக்கென்ற சில வரையறைகளை வைத்துக் கொண்டு அதற்குள் சிந்திப்பது தமது நூற்றாண்டுகளுக்குள் நின்று கொண்டு அதற்குள் தமது பிள்ளைகளை வருமாறு நச்சரித்து அல்லது பலவந்தப்படுத்துவது என்ற பலவாறான தவறுகளை இன்றைய நவீன காலத்தில் கூட இணைத்துக் கொண்டுள்ளனர். அதாவது ஒவ்வொரு பிள்ளையினதும் தொழில் வழிகாட்டுதலில் பாடசாலையினது பங்களிப்பானது மிகவும் அவசியமானதொன்றாகும். இதனை இன்றைய கல்வித்திட்டமானது எமக்கு உணர்த்தி நிற்பதனை நாம் நினைவு கூர வேண்டியுள்ளது. ஒரு பிள்ளையினது வாழ்க்கையில் ஒளி வீசும் தொழிலை அவர் தெரிவு செய்து உறுதியாக எதிர்காலத்தில் முன்னேற்றமடைய உழைப்பது என்பதுதான் தொழில் வழிகாட்டல் என்று கூறப்படுகின்றது. இவ்வாறான தொழில் வழிகாட்டலானது நான்கு வகையான கட்டங்களில் இடம் பெறுவதனை நாம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. தாம் விரும்பிய தொழிலைத் தெரிவு செய்தல்.

02. தனது தொழிலை விருத்தி செய்வதற்கான ஆயத்த நிலையினை தமக்கு ஏற்படுத்திக் கொள்ளுதல்.

03. தொழில் வாய்ப்பினைப் பெறுதல்.

04. தாம் தெரிவு செய்த தொழிலில் முன்னேற உழைத்தல்.

## தாம் விரும்பிய தொழிலைத் தெரிவு செய்தல்

இன்று தாம் விரும்பிய தொழிலைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதானது எமது பிள்ளைகளைப் பொறுத்த வரையில் மிகவும் சிரமமானதொரு காரியம் அதற்காக அவர்கள் போராட வேண்டியதொரு நிலையுமே இன்று காணப்படுகின்றது.

அதாவது இன்று ஒரு பிள்ளையின் பிறப்பிற்கு முன்னமே அவர்களை எவ்வாறு மாற்றியமைப்பது என்ற விடயத்தில் அல்லது அவர்களை எவ்வாறு வளர்த்தெடுப்பது என்பதில் பல பெற்றோர்கள் பலவாறான கனவுகளை தம்மில் வளர்த்துக் கொள்கின்றனர். உண்மையில் இது நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமென்றாலும் பல அவதானங்களைச் செலுத்த வேண்டிய விடயமும் ஆகும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் விடயத்தில் கவனம் செலுத்துவது என்பது வேறு அவர்களை தாம் விரும்பும் ஒரு தொழில் வாய்ப்பினை பெறுவதற்கு அனுமதியளிப்பது என்பது வேறு என்ற விடயத்தினை பெற்றோருக்கு அறிவுறுத்தப்படுவதோடு தெளிவுபடுத்தப்பட வேண்டிய நிலையிலும் நாம் இருக்கின்றோம்.

ஒவ்வொருவரும் தனி ஆளிடை வேறுபாடுடையவர்கள். எனவே இவர்களது விருப்பத்திற்கு ஏற்ப தமது தொழிலினை தெரிவு செய்து கொள்வதற்கான வழி காட்டுதல்களை வழங்க வேண்டுமே தவிர தாம் விரும்பும் ஒரு தொழிலினைத்தான் எமது பிள்ளைகளும் கற்க வேண்டும் என்ற பெற்றோர்களின் மனநிலையை மாற்றியமைக்க வேண்டும்.

ஏனெனில் பெற்றோர்களின் வற்புறுத்தலுக்கான தொழிலுக்கு ஒருவர் பயிற்றுவிக்கப்பட்டுவாரேயானால் அதில் அவரது முழு விருப்பங்களும் இடம்பெற மாட்டாது. எனவே அவரது தொழில் முன்னேற்றம் என்பதாவது இங்கு கேள்விக் குறியாகத்தான் காணப்படும். மேலும் மழுங்கடிக்கப்படக் கூடிய நிலை காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமது தொழிலை விருத்தி செய்வதற்கான ஆயத்த நிலையை தமக்கு ஏற்படுத்திக் கொள்ளுதல்

இது தொடர்பில் எமது பாடசாலைகள் கூடியதொரு கவனம் செலுத்த வேண்டியுள்ளமையினை நாம் காணலாம். ஒவ்வொரு பிள்ளையின் வளர்ச்சிக் கட்டத்தின் போதும் அவர்களது விருப்பு, வெறுப்புக்களை ஆசிரியர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இந்த குறிப்பிட்ட மாணவனிடம் காணப்படும் திறமைகளை அவர்கள் ஊடாக இனங்காணச் செய்து அதனை அவர்களுக்குத் தெளிவுப்படுத்தி அதற்கான வழிகாட்டுதல்கள் பாடசாலைகளில் வழங்குதல் வேண்டும்.

இன்று உளவியலாளர்களின் கருத்துப்படி ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானது அவர்களிடம் உள்ள ஆற்றல்களும் தனித்துவமானவையே. எனவே மாணவர்களை சரியாக வழி நடத்துவதன் மூலமாக அவர்களை தம்மிடம் உள்ள ஆற்றல்களையும், திறமைகளையும் உணரச் செய்ய முடியுமாக இருக்கும். மேலும் தொழில் விருத்தியினைப் பொறுத்த மட்டில் ஒருவரிடம் காணப்படும் அறிவுத் திறன், நுண்மதி, அவரிடம் காணப்படும் விருப்பங்கள், எதிர்ப்பார்ப்புக்கள் போன்றவற்றினை கவனத்தில் கொண்டு வழிகாட்டுதலினை வழங்க வேண்டியுள்ளது.

அதாவது ஒருவர் தன்னிடமுள்ள திறமைகள், எதிர்பார்ப்புக்கள், ஆளுமை விருத்திக்கேற்ற வகையிலான தொழிலினைத் தெரிவு செய்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படும் போது அல்லது அதற்கான வழிகாட்டுதல் அளிக்கப்படும் வேளையிலோ அவருக்கு தொழில் திருப்தியினை அளிக்கக்கூடிய வழிகாட்டுதல்களை வழங்க வேண்டியுள்ளது.

## தொழில் வாய்ப்பினை பெறுதல்

இதில் பலவாறாக போட்டித் தன்மைகள் காணப்படுகின்றன. எனவே நவீன தொழில் வாய்ப்பிற்கேற்ற வகையில் எமது தெரிவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டுதல்கள் இங்கு பிரதானமானவையாகும்.

அந்த பிரதேசத்திற்கேற்ற வகையிலோ அல்லது பொருத்தமற்ற தற்போதைய நிலையில் அவசியப்பாடல்லாத தொழிற்துறைகளினை நாம் தெரிவு செய்து கொள்ளும் வேளையிலோ எமக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளுவதென்பது சிரமமானதொன்று என்ற விடயங்கள் மாணவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டியுள்ளது.

## தாம் தெரிவு செய்த தொழிலில் முன்னேற உழைத்தல்

நாம் குறிப்பிட்டதொரு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வோமாயின் அதற்கு அப்பால் சென்று முன்னேற்றமடைவதற்கான வழிவகைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உற்சாகத்தோடு தேட வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் தொழிற்துறை தொடர்பாக சில பிழையான எண்ணப்பாடுகள் எம்மிடம் காணப்படுவதனை பின்வருமாறு நாம் குறிப்பிடலாம்.

* தொழில் வாய்ப்பினைப் பெறுவதற்கான சரியான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்ட போதிலும் அதனை பொருட்படுத்துவதில்லை.

* சமூக கணிப்பீட்டிற்கு ஏற்ற தொழிலைப் பெற வேண்டும் என்ற மனோநிலை.

* பாடத்தெரிவில் பெற்றோரின் அழுத்தம்.

* தன்னிடம் இருக்கும் திறமைகள் சரியாக முறையில் இனங்காணப்பட்டமை அல்லது இனங்காண்பிக்கப்படாமை.

* தொழிநுட்பக் கல்லூரிகளில் படிப்பிற்கு இரண்டாம் பட்ச மனோநிலை.

* அரச நிறுவனங்களில் கிடைக்கும் வாய்ப்பினை சரிவர தெரிந்து கொள்ளாமை.

* கண்ணியமான தொழிலாக அரச தொழில்களை கருதும் மனோநிலை.

* விடுமுறைகள் கிடைக்கும் என்று அரச தொழில் வாய்ப்புக்களை நாடுகின்றமை.

பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களுக்கு அரச நிறுவனங்களில் பல்வகையான தொழில் வாய்ப்புக்கள் கொட்டிக்கிடக்கின்றன. ஆனால் தனியார் நிறுவனங்கள் விளம்பரம் செய்வதற்கு ஒப்பமான விளம்பரங்கள் இவர்களிடம் காணப்படாததன் காரணத்தினால் அவற்றினை நாம் தெரிந்து கொள்வதில்லை.

ஆனால் நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம் பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து ஏதோவொரு காரணத்திற்காக இடைவிலகி விடுவார்களேயானால் இவர்களது எதிர்காலம் அத்தோடு இருண்டு விட்டது என்பதாக. ஆனால் தாம் பெறும் தொழிற்பயிற்சிகளின் ஊடாக பல இலட்சக்கணக்கான ரூபாய்களை பெற்றுக் கொள்ள முடியும். என்பதை நாம் எவ்வளவு தூரம் அறிந்திருக்கின்றோம்.

எனவே அரச தொழில்களில் மாத்திரம் தங்கியிருக்கும் நிலையினை நாம் மாற்றியமைக்க வேண்டும். பாடசாலை இடைவிலகல்களால் ஒருவனது வாழ்க்கையானது இருண்டு விடுவதில்லை. அவர்களுக்கு அரச துறைகளில் பலவாறான தொழில்த்துறைகள் காணப்படுகின்றன. அவற்றினை நாம் தேடி கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**பே.லஜித்**
(2016 Maths)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை இலட்சிய வரிகள்

நீ சிந்தி! பிறரை சிந்திக்க வை!

கண்ணுக்கு தெரிந்த மனிதரை மதிக்கா விட்டால்
கண்ணுக்கு தெரியாத கடவுளை மதித்தும் பயனில்லை

நேரத்தை விணாக்கும் போது கடிகாரத்தை பார்
ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை

இந்த உலகமே உன்னை திரும்பி பார்க்க வேண்டுமென்றால்
நீ யாரையும் திரும்பி பார்க்காதே

பொய் சொல்லி தப்பிக்க நினைப்பாதே உண்மையை சொல்லி மாட்டிக்கொள்
ஏனென்றால் பொய் வாழவிடாது உண்மை சாக விடாது.

கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே - அது உன்னை
கொன்று விடும் கண்ணை திறந்து பார் அதை வென்று விடலாம்.

ஒரு முறை வந்தால் அது கனவு இருமுறை வந்தால் அது ஆசை
பல முறை வந்தால் அது இலட்சியம்.

வெறுப்பது யாராக இருந்தாலும்
நேசிப்பது நீங்களாக இருங்கள்

புகழை மறந்தாலும் நீ பட்ட அவமானங்களை மறக்காதே
அது உன்னை இன்னொரு முறை அவமானப்படாமல் பாதுகாக்கும்.

உன் மனம் வலிக்கும் போது சிரி
பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்க வை.

ஏமாற்றுவதைக் காட்டிலும்
தோற்பதே சிறந்தது.

நம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம்
ஆனால் அனைவரும் திறமையை வளர்த்துக் கொள்ள
ஒரே மாதிரி வாய்ப்புக்கள் உள்ளன.

கட்டளையிட விரும்புபவன் முதலில்
பணிவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும்
நம்பிக்கை இல்லாத இடத்தில்
முயற்சி இருக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்காக காத்திருக்காதே
உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்தி கொள்.

நீ யாரிடம் உன் இரகசியங்களை சொல்கிறாயோ அவனிடம்
உன் சுதந்திரத்தை இழப்பாய்.

உன் மீது நம்பிக்கை இல்லை என்றால்
கடவுளே நேரில் வந்தாலும் பயன் இல்லை.

உலகம் உன்னை அறிவதை விட
உன்னை உலகிற்கு அறிமுகம் செய்து கொள்

அழகை பற்றி கனவு காணாதீர்கள் அது உங்கள் கடமையைப் பாழாக்கி விடும்.
கடமையை பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

சிந்திக்க தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவை இல்லை
துன்பங்களை சந்திக்க தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.

நா. சிந்துஜா
(2017 Com)

**சிந்தனைக்கு சில**

உன் வாய்ப்புக்காகக் காத்திரு அப்படி கிடைக்கையில் வீரன் என்ற சொல்லுக்கும் வெற்றி என்ற சொல்லுக்கும் உண்மை அர்த்தத்தை காட்டிவிடு.

நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது. நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது. நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது.

ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறானோ அப்படி எல்லோரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.

விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லையேல் மரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்க்கைப் பயணம்

சின்ன கிராமத்தில்
அழகாய் ஒரு வீடு
அன்பால் வீடு
நிறைக்கும் என் அம்மா
என் ஆசை பொதி
சுமக்கும் என் அப்பா
எனக்கென தாய் தந்த
முதல் சொந்தம் என் தம்பி
தவழ்ந்து ஓடியது
விழுந்து அழுதது
அவ்வளவு ஞாபகம் இல்லை
அழுகையுடன் தான் ஆரம்பித்தேன்
பள்ளியை.....
துள்ளி திரிந்த பள்ளி
காலமாக மாறியது
வடிந்த கண்ணீரின்
சுவடுகள் கூட
அங்கு நிற்கவில்லை
என் விளையாட்டு
விழாவில் என்னை
ஊக்குவிக்கும் என்
ஆசிரியர்...
என் பரிசு பார்த்து
பெருமைப்பட்ட என் தாய்
பேச்சு போட்டியில் நான்
பெற்ற முதல் தோல்வி
அது தான்
என் தோல்விகளிற்கு
அத்திவாரம் என
எனக்கு தெரியவில்லை
அழகான ஆரம்ப பள்ளி
காலம் ஆயிரம் நட்புடன்
ஊரின் நடுவில் ஒரு
அரசு பள்ளி
கூட்டம் கூட்டமாய்
நடந்து செல்லும்
நாங்கள்..
தோழர்கள் தோழிகள்
என்ற யாருமில்லை
என் உயிர் நண்பன்
ஒருவன் மட்டுமே
உரையாடலில் தூரம்
மறந்த நாட்கள்..
சின்ன சின்ன
எதிர்பார்ப்புக்களின்
அர்த்தம் புரிந்த நாட்கள்
நண்பனாய் அவனை
கண்ட நாட்கள்..
என் தோழனின் தாய்
எனக்கு அனுப்பும் உணவு
விடுமுறையில் ஊர்
உழுத காலம்...
இவ்வாறே காலம் போயின
முதலில் சந்தித்த தேர்வு
புலமைப்பரிசில் பரீட்சை
ஊரின் எல்லையில்
பெரிய பள்ளிக்கூடம்
அங்கே பரீட்சைக்காக
நண்பன் வந்தான்
மகிழ்ச்சியுடன்
உள்ளே சென்றேன்தேர்வு முடிய
மகிழ்வுடன் வெளிவந்த
இருவரும் குழாய்
கிணற்றடியில் நீர்
குடிக்கச் செல்ல சின்ன
சண்டை ஞாபகம்
எனை நம்பி இருந்த
சமூகம் ஏமாந்தது
நானும் கூட
இதில் நான் கண்ட
பெரும் வெற்றி அம்மா
கூட அதட்டவில்லை
எனக்கென ஒரு ஜீவன்
அம்மா....!
6ம் வகுப்பு தொடங்க
அன்னியக் காட்டேறிகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல்கள்
இடப்பெயர்வு தொடர்ந்தது
நண்பனும் அவன்
வீட்டாரும் எங்களுடனே
கொடூரம் என் வாழ்க்கையில்
மறவாத நாள்....
இருட்டு மடு எனும் ஊர்
ஊரின் பெயரிற்கு
ஏற்றாற் போல் இருட்டியது
என் வாழ்வு
கண்முன்னே சற்று
தூரமாக சென்ற நண்பன்
சரிந்தான் கடமைகூட
செய்ய முடியாத நிலை
சஞ்சலமாய் தொடர்ந்தது
பயணம்............
அவ்வாறே கொடூரரின்
கட்டுப்பாட்டில் நாம்....
நிமிர்ந்து நிற்க முடியாத
சோகத்துடன் இராமநாதன்
தடுப்பு முகாமில்
பல நாட்கள் கழித்து
மீண்டும் ஓர் பள்ளி
நண்பன் இல்லை
நான் தனியாக
பலர் இருந்தனர்
நண்பன் போல் இல்லை
நான் படிக்கவில்லை
விளையாட்டுக்களில் ஆர்வம்
அடைபட்ட பட்டிக்குள்
ஆட்ட நாயகன்
பரிசில், புகழ் கிடைத்தது.
விளையாட்டுக்களில் மட்டுமே
அப்போது எல்லாம்
எதுவும் எனக்கு
தோணவில்லை
துடுப்பு மட்டையுடன்
தூங்குவேன் காலம்
கடந்தது விடுதலை..
மகிழ்வுடன் பொதிகள் தயார்
நண்பன் வீட்டாரும்
தொலைதூரம் செல்ல
நான் விட்டுக்கு வந்ததும்
ஊரில் எல்லை வரை சென்றேன்?
நாட்கள் போயின
பள்ளி தொடங்கவில்லை
அப்போது தான்
எனக்கான சொர்க்கம்
படிப்பு எனக்கூறி
வட்டக்கச்சி எனும்
ஊர் என் அகராதியில்
சொர்க்கம்...
தரம் 8 இல் தெடங்கும்
என் கல்வி
வகுப்பில் மூவர் மட்டுமே
சில நாட்கள் கழிந்து
வகுப்பறை நிறைந்தது
கல்வி தொடர்ந்தது
அப்போதும் தொடர்கிறது
நண்பர்கள் எனக்கென இல்லை
பள்ளி முடிய
என் மாமா வீடு
அதை தவிர்த்து
எதுவும் தெரியாது
அவரது முற்றம் என்
ஆட்டத்தில் பங்கெடுக்கும்

மாலை முழுவதும்
விளையாட்டு
காலை பள்ளி
இதுவே என் வழக்கம்
தரம் 9 ம் வகுப்பு
நண்பர்கள் எனக்கு
உனக்கு என என்னோடு
தோள் கொடுத்து
புரட்டினோம்
அப்போதும் நான் படிப்பில்
கவனம் செலுத்தவில்லை
விளையாட்டு
மாகாண பரீட்சை
மட்டையாக போச்சு
கவலையில்லை நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கவே இல்லை
பெண்ணொருத்தி வாழ்க்கையில்
எனக்காக கஷ்டப்பட்டா
கொஞ்சம் டீசண்டு வந்தது
இருப்பினும் பொருக்கு
கொண்ட கால் கையுடன்
சுற்றி வருவேன்
காலம் கடக்கின்றது
கண்டாலே படபடக்கும்
நெஞ்சம் ஏன் என்ன
என்று தெரியாது
பக்குவமாய் பழகுவாள்
எனக்கு படபடக்கும்
அப்போதே ஆரம்பித்தது
போலும்
நண்பர்கள் தொடங்கினர்
பட்டம் சூட்ட..
"5, 10" புள்ளிகள்
ஆனால் பட்டம் கிடைத்தது
எனக்காக பரமார்த்தகுருவும் சீடர்களும்
மகிழ்வுடன் சென்றது
வாழ்வு
பள்ளியில் ஒரே
ஒரு எதிரி
வெளியில் யாரும் இல்லை
என் பேச்சிற்கு எதிர்பேச்சு
கூறாத உயிர் ஒன்று
நீ என்றால் நான்
நான் என்றால் நீ
யாரும் பிரிக்க முடியாத
உறவு
கல்விச்சுற்றுலா வந்தது
மகிழ்ச்சி ஏன் என
தெரியவில்லை
சுற்றுலா சென்றோம்
தாவரவியல் பூங்கா
நான் மறவாத சம்பவம்
சில நாட்கள் கழித்து
சுற்றி முடிய வீடு
புறப்பட தயார்
புறப்பட பேருந்தில்
நண்பர்கள் ஆட்டம்
பாட்டத்துடன்
அமைதியாக நானும்
எனது நண்பனும்
ஒரே இருக்கையில்
சாதாரண பொதுதராதரம்
சனிக்கிழமையில்
கூடுதல் வகுப்பு
தினம் எழுதி தீர்த்த
தேர்வுகள் முன்னோடி
ஒரு பாடத்தில் மட்டும்
கூடும் மதிப்பெண்
நம்ப முடியாத தேர்வு முடிவு
பொது சாதாரண தர
பரீட்சை செல்ல முன்
அவளிடம் இருந்து ஓர்
பேனா கிடைத்தது
மிக்க மகிழ்ச்சி...
பரிட்சை முடிய
அவளிடம் களவாடிய
கைக்கடிகாரம்...
பொதுப்பரீட்சை முடிந்தது
எல்லோரும் சென்றனர்
அவள் தான் நினைவாக
நின்றாள்....
முடிவுகள் வர
கனவாய் முடிந்தது
பள்ளி வாழ்க்கை
என எண்ணி.....
கோபத்துடன்
அம்மா அதட்டவில்லை
அழுதாள்
எனக்கு அன்றும் புத்தி
வரவில்லை
யாழ்ப்பாணம் நோக்கி
என் தேரில் புறப்பட்டேன்
எனக்கு அடைக்கலம் கொடுக்க
ஓர் பேர் அன்னை...
சமாதான பேச்சு வார்த்தை
கூறினார்....
படி என கணித பாடம் உடனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடனும் பேசாமல்
கொலைக்காரன் போல்
இருந்தேன்..
காலை 5 மணி கணிதம்
கற்க ஆசிரியரிடம்
சென்றேன்......
முதல் நாள் கணிதம்
புதிதாக இருந்தது
ஓர் நாள் அவள்
ஆறுதலாக
8,9 மாதங்கள் வேறு
எதுவும் இல்லை...
அவ்வப்போது அவள்
பேசுவாள்
நான் படிக்கவில்லை
கனவுகள் பல
பித்தன் போல் நான்
புரியாமல் இருந்தது
இருந்திருக்கலாம் புரிந்தது
என் முதற் காதல் மகிழ்ச்சி
அவளிடம் மெதுவாக கூற
அவளும் கதைப்பதை
குறைத்து கொண்டாள்
நானும் என்னை
அறியாமலே எனை
இழந்து விட்டேன்
இரண்டாம் தடவையும்
முடிந்தது பரீட்சை
நான் எனது
சொர்க்கத்தில் இருந்து
சென்றேன்
யாழில் தெரிவு செய்த
அரசு கல்லூரி
கனகரட்ணம் ம.வி
சிறையில் தனியான நான்
என்னை விட்டு நெடு
தூரம் சென்ற அவள்
எப்போது பேசுவாள் என
காத்திருக்கும் நாட்கள்
கண்ணீரை பரிசாய்
பெற்ற என் கன்னங்கள்
கண்ணீர் பட்டு கரைந்து
ஓடிய என் கவிதைகள்
படுக்கையில் முன்
நிண்ட கனவுகள்
வீதியில் செல்லும்
போதெல்லாம் உடன்
வந்த ஒருத்தி அவள்
எனக்கென பேசும்
ஒருத்தி அவள்
இவள் மட்டும் தான்
அங்கு நான் பெற்ற
என் சந்தோசம்
மெதுவாக என்
சொர்க்கத்தில் உள்ள
பாடசாலைக்காக
கனகரட்ணம் ம.வி
கனவாய் முடிந்தது
பல இன்னல்களின் மத்தியில்
வந்தடைந்தேன்
முதல் ஆண்டு கல்லூரி
என்ன தவம் செய்ததோ
ரசிக்க முடியாத என்
பயணம் தொடர்ந்தது
தூரத்தில் அவளைப்
பார்த்ததும் எனக்கு
படபடக்கும்
கண்ணாமூச்சி ஆட்டம்
அந்த நாட்கள்
சிறிதாக அவள் எனை
கேள்வி கேட்க பல .
நாட்கள் கழித்து
உள்ளத்தை சொன்னேன்
ஓஓஓ என ஒப்பாரி
மறுத்தாள் நம்பவில்லை
பல நாட்கள் கடந்தது
என் முதல் விருந்துபசாரம்
பறி போனது
என் உயிர் ஒன்று
குல மானம் காத்த என்
அன்னையை இழிவு
படுத்தி ஏசியவனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் பார்க்க
செய்தேன்
வெளியில் ஓர் எதிரி
மறுபடியும் இருண்ட காலம்
தொடர் தோல்வியில்
துவண்ட காலம்
29 நாட்கள் முனங்க
கூட மடியாத
நரகமதை சந்தோஷமாக
கழித்து வந்தேன்
ஒவ்வொரு முறையும்
தேற்றிய என் நண்பன்
கூட வரவில்லை
கூட்டத்தில் தனியாக
உணர்ந்த நாட்கள்
முதல் கிடைத்த சந்தோசம்
நீண்ட என் பேருந்து
பயணங்கள்.....
வாழ்க்கைக்காக நானும்
ஓட ஆரம்பித்த நாட்கள்
என்னுடனேயே தங்கி
விட்ட என் தனிமை
அங்கு ஆரம்பித்த
எனக்கான தேடல்
அடுத்தடுத்து மாறியது
அனுபவம் தந்தது
அனைத்துமாய் மாறிய
என் நினைவுகள்
ஏதோ சாகணும் என்று
தோணும் ஒரு
சந்தோசம் எனக்கென
யாரும் இல்லையே
என்ற வருத்தம்......
நான் நிறைவேற்றிய
என் தந்யையின்
கனவுகள்
என் மகன் என
கர்வமாக என் அப்பா
கூறிய நிமிடங்கள்
கம்பி எண்ணி விட்டு
வந்து பாடசாலை
சென்ற போது எனை
கொலை காரனாய்
பார்த்த விழிகள்
மறவேன் சாகும் வரை
அவள் ஒருத்தி
வருத்தப்பட்டாள்
கூறினார்கள்
தொடர்கிறது
மேலும் மேலும்
எனது வாழ்வும்
முடிந்தது பள்ளியில்
மாணவர் தெரிவு
சிறையில் அடைக்கப்பட்டார்
என கூறித்திரிந்த கூட்டம்
சிறைக்கைதிகளுக்கு பதவி இல்லை
என நான் கேட்காத
ஒன்றை கூறி
எனை கொன்றனர்
அவளும் ஆறுதலாக பேச
முடிவு பண்ணி விட்டேன்
காலம் கடக்கின்றது
கவிதைகளாய் என்
முகப்புத்தகம்
இதற்கிடையில் பணம்
பணம் என வாழும்
கூட்டம்
பணத்தினை வாரி இறைக்கும்
எண்ணம் வேறு
அவமானம் நான் செத்து
கொண்டிருந்தேன்
அத்துடன் என் காதலை
துரோகம் என
பெயர் சூட்டினாள்
முடிந்தது இரண்டாம்
தடவையும் ஒன்று கூடல்
நான் எதிர்பாராத ஒன்று
என் காதலா காதலியா
கோபத்துடன் அழுகையும்
அடாவடியாக கொடுத்து
அனுப்பினேன்
அவள் கேட்ட வாழ்வு தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் கூட முடியாத
நரகமதை
கொண்டிருந்தேன்
தொடர்ந்தும் நான்
பள்ளி செல்ல
எனை கொன்ற
பாடசாலை சமூகம்
மகிழ்ச்சி இருந்தது
இருந்தும் கூட படிக்கவில்லை
இன்னும் கூட நடுக்கம்
மாறவில்லை
என் காதலை புரியாத
அவளும் அவள் நட்பை
புரியாமல் நானும்
தொலைபேசி துணைக்கருவிகள்
இருந்தும் கூட
பயனில்லை
தலையணை நனையும்
நன்றியுள்ள ஹரீஸ்
சொல்லும் என்கதி
சில கொடூரமான
அவமானங்கள் மறைக்கப்பட்டுள்ளது
காலம் கடக்கின்றது
சொந்தமாக ஒரு பைக்கு
வாங்கினேன் என் முதல் வெற்றி
அடுத்தவன் காசில்
ஆட்டம் போட்டவன்
காணாமல் போனான்
மறுநாள் மகிழ்ச்சியான நாள்
தொடர்ந்து சில நாட்களில்
நண்பனாக வந்த
அண்ணன் இறக்கின்றான்
பழைய நினைவுகள்
திரும்பி வந்து
கொடூரமான நாள்
தொடர்ந்து சண்டையிடும் அவள்
விரைவில் கதைப்பாள்
வழக்கமாக இருந்தது
நீண்ட நாட்கள் போயின
எதுவும் இல்லை
எவ்வாறாயினும் பரீட்சைக்கு
முன் கதைப்பாள் என
என்னை நானே தேற்றி
அதுவும் புஸ்பானமா போச்சு
பரீட்சை தொடர்ந்து
அவமானம் கூடவே
இதிலும் தோற்று போவேன்
அஸ்திவாரம் அப்பவே போட்டாச்சு
தோல்வி தான் வழக்கமாக
இருந்தது சில மாதங்களுக்கு
பின்னர் தொடரும்........

**ச.கிசாந்தன்**
(2017 Arts)

**சிந்தனைக்கு சில**

*எல்லோரையும் நம்புவது அபாயகரமானது ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது*

*தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியமும் அவற்றை திருத்திக் கொள்வதற்கான பலமும் தான் வெற்றிக்கான வழி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலானது முதலுதவி

உயிர் காக்கும் செயல்களிலே அடிப்படையானது முதலுதவி. முதலுதவி என்பது திடீர் விபத்து அல்லது நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வைத்திய உதவி கிடைக்கும்வரை பயிற்றப்பட்ட முதலுதவியாளரால் சூழலில் உள்ள பொருட்களைக் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைக்கமைய செய்யப்படுகின்ற உதவியாகும். இது விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்டவருக்கும், அனர்த்தம் ஒன்றினால் பாதிக்கப்பட்டவரிற்கும், நோயினால் பாதிக்கப்பட்டவர்க்கும் உடனடியாக வழங்கப்படுகின்றது. முதலுதவி செய்வதன் மூலம் உயிரை காப்பாற்றுதல் பாதிப்பின் தீவிரத்தன்மையை குறைத்தல், குணமடைய உதவி செய்தல் என்பவற்றை மேற்கொள்ள முடியும்.

**முதலுதவி வழங்கலின் சம்பவ மதிப்பீடு**

* நிலைமையை மதிப்பீடு செய்தல் - A
* சம்பவ இடத்தை பாதுகாப்பானதாக மாற்றல் - M
* அவசர உதவி - E
* உதவி கோரல் - G
* சம்பவத்திற்கு பின் - A

சுருக்கமாக (AMEGA in English)

**முதலுதவி வழங்குனரின் 1 ம் நிலை கணிப்பீடு**

* பாதுகாப்பாக அணுகவும் - Danger
* பிரதிக்கிரியை பரிசோதிக்கவும் உதவிக்கு சத்தமிடவும் - Response
* சுவாசப்பாதையை திறக்கவும் - Airway
* சுவாசத்தை பரிசோதித்தல் - Breothing
* சுற்றோட்டத்தை பரிசோதிக்கவும் - Circulation

சுருக்க வடிவம் (DRABC)

**சுவாசத்தை பரிசோதிக்கும் போது நோயாளி ஒருவரின் ஆரம்பக் கட்ட மதிப்பீட்டினை மேற்கொள்ளும் முறை**

* அபாயத்தை கண்டறிதல் மதிப்பீடு செய்தல்.
* அபாயத்தை உறுதி செய்தல்.
* நோயாளியின் தொலையில் இருந்து சத்தமிட்டு அழைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நோயாளியின் அருகில் முழங்காலில் இருந்து தோள் பகுதியை அசைத்து சத்தமிட்டு கூப்பிட்டு சுய உணர்வை பரிசோதித்தல்.

* சுய உணர்வு இல்லை எனில் அயலவர் உதவி கோரல்.

* சுய உணர்வு இல்லாத நோயாளியின் நெற்றியில் கையை வைத்து தலையை பின்னோக்கி சரித்து தாடையை உயர்த்தி சுவாசப்பாதையை திறத்தல்.

* கைகளை பணிவதையும் சுவாசிக்கும் சப்தம் கேட்பதையும் கன்னத்தில் சூடு படுதல் உணர்தலையும் IOS பரிசோதித்து சுவாசம் உள்ளதா? இல்லையா? என உறுதிப்படுத்தவும்.

* சுவாசிப்பாராயின் மயக்க மீள்நிலைக்கு திருப்பவும் இல்லை என்றால் Ambulanceஐ அழைக்கவும்.

* CPR ஐ ஆரம்பிக்கவும்.

### சுவாசிக்கும் நோயாளியை மயக்க மீள் நிலைக்கு திருப்புதல்

* நோயாளிக்கு அருகில் தோள் பட்டைக்கும் நெஞ்சிற்கும் இடையில் கீழே முழங்காலில் இருக்கவும்.

* முதலுதவி வழங்குபவரின் பக்கத்தில் உள்ள கையை $90^0$ இல் வைக்கவும்.

* குருதிப் பெருக்கு உள்ளதா என பரிசோதிக்கவும்.

* தனது பக்கத்தில் நோயாளியின் தலை அக்குள் தொடங்கி பாதம் வரை புறங்கையால் தடவுதலின் ஊடாக நோயாளியின் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய ஏதாவது உண்டா என பரிசோதித்தல்.

* நோயாளியின் எதிப்பக்கக்கையின் புறங்கையை உமது பக்கத்தில் உள்ள கன்னத்தில் வைத்துப் பிடித்துக் கொள்ளவும்.

* எதிப்பக்கக்காலின் முழங்காலை வெளிப்பக்கமாகப் பிடித்து பாதம் நிலத்தில் படும் வரை மடிக்கவும்.

* முழங்காலை அவ்வாறே பிடித்துக் கொண்டு நோயாளியை தனது பக்கத்திற்கு மெதுவாக திருப்பவும்.

* மடித்த காலை L வடிவில் வைக்கவும்.

* திறந்த சுவாசப்பாதையை மீண்டும் சீர் செய்யவும்.

* சுவாசம் உள்ளதா என 5 - 10S மீண்டும் பரிசோதிக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நிலையை சரி செய்ததும் நோயாளியின் உயிர் ஆதார செயற்பாட்டினை நிமிடத்திற்கு ஒரு முறை பரிசோதிக்கவும்.

* அவதானிக்கவும்.

* வைத்திய உதவியை பெற்றுக் கொடுக்கவும்.

**இதய சுவாச மீள உயிர்ப்பித்தல்**
**CRP/ Card Pulmonaty Resuscitation**

* நோயாளியின் அருகில் தோளிற்கும் நெஞ்சுக்கும் இடையில் முழங்கால்களை ஓரளவு அகற்றி கீழே முழங்காலிடவும்.

* தனது வளமான கையை அதன் மேல் வைத்து விரல்களை விரல்களுக்கு இடையில் இறுக்கமாக பின்னிப்பிடித்துக் கொள்ளவும்.

* கைகளை நோயாளியின் நெஞ்சில் நேராக வைத்துக்கொள்ளவும்.

* 2 - 2.5 ஆழமாக நெஞ்சை 30 தடவை அழுத்தவும்.

* சுவாசப்பாதையை திறக்கவும்.

* மூக்கின் மெல்லிய பகுதியை அமர்த்தி பிடித்துக் கொண்டு வாய்க்கு வாய்சீர் செய்யவும்.

* இரண்டு தடவை சுவாசம் கொடுக்கவும் (ஒவ்வொரு சுவாசத்திற்கு பின்பும் மூக்கை பிடித்திருக்கும் இரு விரல்களையும் தளர்த்தவும்)

* 30:02 என்ற வகையில் உதவி கிடைக்கும் வரை நோயாளி மீள் நிலைக்கு திரும்பும் வரை (PR பெற்றுக் கொடுக்கவும்)

* உதவி கோரவும் விரைவாக வைத்திய உதவியை பெற்றுக் கொடுக்கவும்.

* ஒவ்வொரு சுவாசத்திற்காகவும் 1S நேரத்தை பயன்படுத்தவும்.

* முதலாவது சுவாசத்தின் போது நெஞ்சுப்பகுதி மேல் நோக்கி உயராவிட்டால் நோயாளியின் வாயை பரிசோதித்து பிறபொருள் இருக்குமாயின் அகற்றவும்.

* தலையும் தாடையும் சரியான முறையில் உயர்ந்து இருக்கின்றதா? என்பதை அவதானிக்கவும்.

**பி. தினோஜன்**
**வர்த்தக பிரிவு (2016)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்ப மறுக்குது ஈழம்.........

பொங்கிடும் எறிகணை
கால்களில் வீழ்ந்தது
வந்திடும் நாடுகள் வாசலில் சரிந்தது
செந்தணல் தாங்கிய வீரர்கள்
எழுந்ததும் பைந்தமிழ் வீரம் பாருக்கு வந்தது

செங்கள முனைகளில் இஸ்ரவேல் வந்தது
மங்களம் பாடிட கனரகம் கொடுத்தது
வெங்களம் மோதியே இந்தியம் தோற்றது
சிங்களம் மட்டும் எப்படி வென்றது

நிரை நிரை வீரர்கள் நிமிர்ந்து கொள்ளவே
குனிந்த தலைகள் நிமிர்ந்து கொண்டது
வரி வரி உடல்கள் வதைக்கும் வேளையில்
வெற்றியின் தேவி வாசலில் வந்தது

பாருக்கு தமிழன் வீரம் தெரிந்ததும்
ஊருக்குள் அழித்திட திட்டம் நடந்தது
போருக்கு உந்திய சிங்களம் வந்து
பாசறை வீரத்தின் கால்களில் வீழ்ந்தது

சண்டை முடிந்து சமாதானம் என்றே
வந்தது நாடுகள் வகை வகையாக
மண்டை பத்திரம் சிங்களம் என்றுமே
சொல்லிச் சென்றது சீனா உட்பட

வட்டமும் சதுரமும் வகை வகையாகவே
பேசிடும் திட்டங்கள் போட்டு அழித்தது
சமாதான தூதினை எமக்கு அனுப்பியே
சண்டைக்கு ஆயுதம் தீட்டியும் கொண்டது

எல்லைகள் குறுகிய ஈழப் பூமியில்
எப்படி புலியணி இப்படி வளர்ந்தது
மண்டையை பிய்த்தனர் மாட்டிக் கொண்டது
வல்லரசு உட்பட வளர்ந்த நாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கின் வளர்ச்சியே புலிகளைக்
கொல்லும் தாக்கம் புரிய காரணம் ஆனது
ஆக்கமும் அழிவும் அறிந்த தலைமை
போரியல் முறையை மாற்றிக் கொண்டது
உலகினை வெல்லும் நோக்கம் எமதில்லை
எல்லைகள் நீட்டும் வேகமும் இல்லை
வரைந்த ஈழம் மட்டுமே கேட்டோம்
வகுத்த போரில் எப்படி தோற்றோம்

எழுந்த கனவு புதைந்து போனது
முடிந்த போது விடிவு நகர்ந்தது
அழுது அழுதே விழிகள் கரைந்தது
ஈழம் எப்படி எங்களை மறந்தது

எங்களின் வீரம் எல்லோர்க்கும் தெரியும்
ஓர்மத்தின் வேகம் எதிரிக்கும் புரியும்
வந்த பகைக்கு எம் வக்கிரம் தெரியும்
எப்படி எங்களை வென்றிட முடியும்

இன்னுமே ஒன்றை நம்ப மறுக்குது
எங்களை எப்படி சிங்களம் வென்றது
வீரத்தின் வேர்கள் எப்படி வீழ்ந்தது
வெங்களம் எப்படி வீழ்ந்து கொண்டது.

**மு. சுகிர்தன்**
(2017 Com)

**சிந்தனைக்கு சில**

நீ எந்த அளவுக்கு உயர்ந்தவனாக வேண்டுமென நினைக்கிறாயோ அந்த அளவுக்கு கடுமையான சோதனைகளைக் கடந்து செல்ல உன்னைத் தயார் செய்து கொள்.

எதுவுமே புரியாத போது வாழ்க்கை ஆரம்பம் ஆகிறது. எல்லாம் புரியும் போது வாழ்க்கை முடிந்து விடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்காலம் தொடக்கம் தேசியத்தில் தடம் பதித்தது வரை...

வயல் நிலங்கள் புடைசூழ பச்சைப் பசேல் என காட்சி தரும் இயற்கை அன்னையின் கொடையாம் வட்டக்கச்சிதனில் திரு. திருமதி செல்வாநாதன் தம்பதிகளுக்கு பிறந்தோம். நான் "ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்திருத்தல் ஆகாது பாப்பா" என்ற பாரதியின் பாப்பா பாட்டிற்கு இணங்க எனது அன்ரி முகமட் முன்பள்ளி ஆசிரியை என்ற காரணத்தினால் அவருடன் எல்லா விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கும் சென்று பார்வையிட்டு மகிழ்ந்தேன்.

தொடர்ந்து எனது ஆரம்பக் கல்வியை கிளி/ வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தேன். இக்காலத்தில் நீளம்பாய்தல், ஓட்டம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பாடசாலை மட்டத்தில் தெரிவானேன். தரம் 5 கல்வி கற்கின்ற காலத்தில் நீளம்பாய்தல், ஓட்டம் போன்ற நிகழ்வுகளில் கோட்ட மட்டத்தில் பங்கு பற்றினேன். எனினும் வெற்றி பெற முடியவில்லை. எனினும் நான் தளரவில்லை முயற்சி எப்போதும் வெற்றி பெறும் என்பதை நம்பினேன்.

எமது நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு கோர யுத்தத்தின் காரணமாக எமது கல்வி மட்டுமல்ல அனைத்து விடயங்களிலும் பின்னடைவுகள் ஏற்பட்டன. மீண்டும் எமது வட்டக்கச்சி மகாவித்தியாலய அன்னையின் மடியில் தவழு தரம் 7 இல் இணைந்தேன். "உடற்கல்வி மூலம் நாட்டிற்கு நற்பிரசைகளை உருவாக்கலாம் இது பாடசாலைகளில் அத்திவாரமிடப்பட வேண்டும்." என்கிறார். சுனில் ஜயவீர இவரின் கூற்றுக்கு இணங்க பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறுகின்றன.

15 வயதுப் பிரிவில் பாடசாலைமட்ட விளையாட்டுப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டேன். தொடர்ச்சியாக பாடசாலை விளையாட்டுப் போட்டியில் வெற்றிகளை பெற்றேன். எனது 15 வது வயதுப் பிரிவின் இறுதியில் என்னுடைய சுவட்டு நிகழ்ச்சிகளை மைதான நிகழ்ச்சிகளுக்கு "குண்டு, தட்டு, ஈட்டி" என மாற்றினேன்.

"Time is Short Play Hard" என்ற வாக்கிற்கு இணங்க எனது முயற்சியினாலும் விடா முயற்சியினாலும் 2014 ஆம் ஆண்டில் (17 வயதுப் பிரிவில்) தட்டு, குண்டு, ஈட்டி ஆகிய நிகழ்ச்சிகளில் மாவட்ட நிலையில் முதல் இடத்தினைப் பெற்று சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டேன். என்னுடைய இந்த வெற்றிக்கு என்னுடைய முயற்சி, பெற்றோரின் ஒத்துழைப்பு எனது உடற்கல்வி ஆசிரியர் திருமதி கணேசலிங்கம் அருந்ததி அவர்களின் பயிற்சிகள் மற்றும் முயற்சியின் காரணமாக 04 வருடங்கள் கலந்து கொண்டும் எனக்கு வெற்றி வாய்ப்பு கிட்டவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017 ஆம் ஆண்டு இம் முறை நான் 20 வயதுப் பிரிவில் இறுதியில் காலடி எடுத்து வைத்துள்ளேன். இம் முறையோடு பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற முடியாது. எனது க.பொ.த உயர்தரப் பரீட்சை காலத்தில் படிப்போடு விளையாட்டுப் பயிற்சியையும் தொடர்ந்தேன் இம் முறையாவது மாகாண மட்டத்தில் ஓர் இடமாவது கிடைக்க வேண்டும் என்ற இலக்கோடு செயற்பட்டேன்.

இம்முறை மாவட்ட நிலை அதாவது கிளிநொச்சி வலயத்தில் குண்டு, ஈட்டி முதலாம் இடத்தினையும் முப்பாய்ச்சலில் மூன்றாம் இடத்தினையும் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவானேன். மாகாண மட்டத்தில் ஈட்டி எறிதலில் 25.65 m தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தினை பெற்றுக் கொண்டேன். என்னுடைய இலக்கு தேசிய போட்டியில் கால்பதிப்பது அது நிறைவேறியதில் நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். இவ் வெற்றிக்கு ஆரம்பகால உடற்கல்வி ஆசிரியர் திருமதி.கணேசலிங்கம் அருந்ததி அவர்களும். இன்றைய எமது கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் திரு. இராசேந்திரம் விஜிதரன் அவர்கள் தந்த கடுமையான பயிற்சிகள் பல அறிவுரைகள் என்பவவையே காரணமாகும்.

நான் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் மாகாண மட்ட போட்டிகளில் கலந்து கொண்டும் ஒரு பதக்கத்தையாவது பெற முடியாமல் போனது எனக்கு மிகுந்த மன வருத்தத்தையே தந்தது. பல முறை நான் வீடு திரும்பியிருக்கிறேன். "முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்" என்ற வாக்கிற்கு இணங்க எனது முயற்சி எனக்கு பதக்கத்தை தந்திருக்கின்றது.

எனக்குத் தனி விளையாட்டுக் களில் மட்டுமன்றி வலைப்பந்து, எல்லே, வொலிபோல், உதைப்பந்து போன்ற குழு விளையாட்டுக்களிலும் எனது திறமைகளை வெளிக்காட்டி இருக்கின்றேன். எனது இவ் இலக்கை அடைவதற்கு பல சவால்கள் காரணமாயிருந்தன. அந்த வகையில் போதிய பயிற்றுவிப்பாளர் இல்லை, விளையாட்டு முக்கியத்துவம் இல்லாமை, பாடசாலை மட்டத்தில் போட்டிகள் குறைவாகக் காணப் பட்டது என்பவற்றை கூறலாம். இனிவரும் காலங்களில் எமது மாணவர்கள் விளையாட்டுக்களில் பங்கு கொண்டு தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டி வட்டக்கச்சி அன்னைக்கு வெற்றிகளை குவிக்க வேண்டும் என கேட்டு விடை பெறுகின்றேன்.

"சமநிலை ஆளுமையும் அமைதியும், அறிவும் நிரம்பிய இளம் தலை முறையினரை உடற்கல்வியூடாக உருவாக்க முடியும்." சாள்ஸ் பியூகர் - நாஷ்

**செல்வநாதன் நிதுஜா**
**(2017 Com)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்கு முன்

பரீட்சைக்கு அனுமதி அட்டை கிடைத்ததும் நேர அட்டவணை பற்றி கலந்துரையாடி தமது பாடங்களையும் நேரத்தையும் குறித்து வைத்து கொள்ள வேண்டும்.

நேர அட்டவணைக்கு ஏற்ப பயிற்சி பாடங்களை மீட்டல் செய்யும் போது உங்களிடம் உள்ள பயிற்சி புத்தகங்கள் குறிப்பெடுத்த விடயங்கள் யாவற்றையும் புரட்டி பார்க்க வேண்டும் அவ்வாறு செய்தால் மனதில் பாடம் பற்றிய திருப்தி ஏற்படும்.

பரீட்சை எடுக்கும் மாணவர்கள் ஒவ்வொருவரினதும் மனதிலும் பயத்தோடு கூடிய மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். பதற்றம், ஏக்கம் என்பவற்றை தவிர்க்கவும். பரீட்சை தொடங்குவதற்கு முன்னரே விடைத்தாள்கள் தரப்படும் ஒவ்வொரு விடைத்தாளிலும் சுட்டிலக்கத்தை தவறாது இட்டு மீண்டும் சரி பார்த்துக் கொள்ள வேண்டும்.

பரீட்சை ஆரம்பமாகியதும் எடுத்தவுடன் விடை எழுத முற்பட வேண்டாம்.வினாத்தாள்களை நன்றாக வாசித்து கிரகித்தல் வேண்டும். கட்டாய வினாக்களை நேரத்தை வகுத்து தவறாது செய்தல் வேண்டும். மேலதிக வினாக்களை விடையளிக்கின்ற தகுதிக்கும் புள்ளிக்கும் ஏற்ப தெரிவு செய்தல் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கட்டாய வினாக்களை செய்த பின்பு மேலதிக வினாக்களுக்கு விடையளிக்கும் திறனுக்கு ஏற்ப மாற்றி செய்யலாம் ஆனால் வினா இலக்கங்களை தவறாது செய்தல் வேண்டும்.

அமைப்பு வினாக்களை எடுத்துக் கொண்டால் வினாக்களுக்கு உரிய இலக்கங்களை தெளிவாக இட்டு ஒவ்வொரு புதிய பக்கத்திலும் ஆரம்பித்தல் வேண்டும். அவ்வாறு செய்வீர்களானால் விட்ட மிகுதியை நேர மிதிக்கு ஏற்ப தொடர நல்ல சந்தர்ப்பமாக அமையும்.

எத்தனை வினாக்கள் செய்தல் வேண்டும் என்பதை தெளிவுப்படுத்திய பின்னர் விடையளித்தல் வேண்டும். அளவுக்கு மேலதிகமாக செய்வதை தவிர்த்தல் வேண்டும். அத்துடன் பொருத்தமில்லாத விடயங்களை கீறுவது எழுதுவதை தவிர்த்தல் நன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாணவர்கள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு முன்னரே விடை எழுதிவிட்டு எப்போது பரீட்சை முடியுமென அங்கலாய்த்துக் கொண்டு இருப்பார்கள் அவர்கள் பரீட்சையைநன்றான செய்யவில்லை என்பதை உணர வேண்டும்.

பரீட்சையின் போது உங்களுக்கு தேவையான விடைத்தாள்களை பயமின்றி மேஜையில் தட்டி பெற்றுக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு விடைகளை ஆரம்பிக்கும் போது நேரத்தை தவறாது பார்த்துச் செய்தல் வேண்டும்.அத்துடன் எழுதியவற்றை குறிப்பெடுத்து எழுதுவது சிறந்தது.

பரீட்சைக்குரிய அதிகாரிகள் விடைத்தாள்களை கட்டும்படி அறிவிக்கும் போது சகல விடைத்தாள்களையும் இணைத்துக்கட்டி விட்டு பின்னர் தொடர்ந்து எழுதலாம். ஏற்கனவே நடந்த முதற்பாடம் பற்றி வீணாக நினைத்துக் குழம்பாமல் அடுத்து நடைபெறும் பாடத்தை பற்றிச் சிந்திப்பது பயனுடையதாகும்.

**ஞா.சிற்சபேசன்**
**(கலைப்பிரிவு - 2016)**

### சிந்தனைக்கு சில

மனித நாக்கு எலும்புகள் இல்லாதது தான் ஆனாலும் அது ஒரு இதயத்தை உடைக்கும் அளவிற்கு வலிமை கொண்டது.

பறவை மரத்தின் கிளையில் அமரும் போது அது எந்தநேரத்திலும் முறிந்து விடும் என்ற பயத்தில் அமர்வதில்லை. ஏனெனில் பறவை நம்புவது அந்த கிளையை அல்ல அதன் சிறகுகளை.

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே அது உன்னைக் கொன்றுவிடும் கண்ணை திறந்துபார் நீ அதை வென்று விடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டதீபம் முதல் பிரதி வெளியீட்டின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பள்ளி போகலாமா?

இறந்த பின் தான்
சொர்க்கம் என்று
இருக்கும் போதே
கடவுள் தந்த பரிசு
பள்ளிக்காலம்......

பதின்மூன்று வருடங்கள்
இல்லாத சோகம்
புரிந்தது அன்று முதன்முறை
பள்ளியின் கடைசி நாளன்று

கரங்களில் பூவேந்தி வந்த - நாம்
கண்களில் நீர் சிந்த
பிரிந்து செல்கின்றோம்
பள்ளியை விட்டு.....

வகுப்பறை செல்லும் பாதைகளெல்லாம்
ஏக்கமாய் பார்க்கிறது
மீண்டும் நம் பாதச்சுவடுகள்
பதியுமா என்று...

வகுப்பறை மேசையில்
நாம் போட்ட கிறுக்கல்கள் - இன்று
இரத்தம் வடிக்கின்றன
மீண்டும் தீண்டுமா எங்கள்
பேனாக்கள் என.....

நண்பனின் தோளில் சாய்ந்து
நாம் உண்டு மகிழ்ந்த
உணவுச்சாலை கூட பிரிய மறுக்கின்றது.....

முதன்முறை பிரிவு என்ற சொல்லின் அர்த்தம்
அன்று தான் புரிந்தது
இப்படி வலிக்கும் என்று

கடவுள் வந்து கேட்டால்
கேட்க வேண்டும் ஒரு வரம்
மீண்டும் பள்ளிக்கு போவதற்கு...

**சி. கேசிகன்**
**கலைப்பிரிவு 2017**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு, நாடு சிறப்படைய பெண்கல்வி அவசியம்

பெண்கள் கல்வி கற்றுப் பெருமை பெற்றுப் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக விளங்குதல் வேண்டும். அப்பொழுதுதான் வீடும், நாடும் சிறப்படையும்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்று பல்லாண்டுகளுக்கு முன்னே பாரதியார் பாடியுள்ளார். ஒவ்வொரு குடும்பமும் ஒரு பல்கலைக்கழகமாக விளங்க வேண்டுமென்றால் அக்டும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணும் கல்வி கற்றிருத்தல் வேண்டும். மங்கையராகப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா என்றார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை. பெண்கள் இந்நாட்டின் கண்கள். பெண்குலம் உயர்வு பெற்றால் தான் உலகம் உய்யும். பெண்மை - தாய்மை - இறைமை என்று பெண்ணின் பெருமையைப் போற்றுவார். வெற்றி பெற்ற ஒவ்வொரு ஆணுக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள். ஒரு வீட்டில் ஒரு பெண் நல்லவளாக இருந்தால் தான் அவ்வீடு சிறப்படையும்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்
உள்ளதென இல்லவள் மாணாக் கடை"

என்று வள்ளுவர் குடும்புத் தலைவியின் சிறப்பைக் கூறுகிறார். சங்க காலத்தில் ஆண்களுக்கு இணையாகப் பெண்கள் கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். ஔவையார், நச்சென்னையார், ஒக்கூர்மாசாத்தியார் போன்ற பெண் புலவர்கள் வாழ்ந்துள்ளனர். ஔவையார் அதியமானுக்காக தூது சென்றார் என்ற செய்தியையும் புறநானூற்றில் காண்கின்றோம். இடைக்காலத்தில் பெண்களை அடிமைப்படுத்தினர். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்று அறிவிற் சிறந்த பெண்களை இழிவுபடுத்தினர். உடன்கட்டை ஏறுதல், கைம்மை நோன்பு போன்ற மூடப்பழக்க வழக்கங்களெல்லாம் பெண்களுடைய நிலையை இழிவுபடுத்தியது.

ஆங்கிலேயர் காலத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கம் ஒழிக்கப்பட்டது. பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் கல்வி கற்கத் தொடங்கினர். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இருந்தே பெண்கள் பலதுறையிலும் கல்வி கற்றுச் சிறப்புறத் தொடங்கினர். பெண்கள் உயர்கல்வி கற்றுச் சிறப்படைந்தனர். பெரும் பதவிகளைப் பெற்றனர். நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றனர். பெண்கள் கல்வி கற்றால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நாடு சிறப்படையும். கல்வியில்லாத பெண்கள் களர் நிலம். அங்கே புல்விளையலாம். நல்ல புதல்வர்கள் விளைவதில்லை என்று கூறுகிறார் கவிஞர் பாரதிதாசன். ஒரு குடும்பத்தில் ஓர் ஆண்மகன் கல்வி கற்றால் அவனுக்கு மட்டுமே அக்கல்வியால் பயனுண்டு. ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் அக்குடும்பம் முழுமைக்கும் பயன்படுகிறது. குழந்தைகளை நன்றாகப் பேணி வளர்க்கவும் பயன்படுகிறது. கல்வி கற்ற பெண் தன் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கிறாள்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே அது நல்லவர் ஆவதம்
தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே"

என்பது போல குழந்தைகளை தலை சிறந்த குடிமகனாக்குவது கல்வியறிவு பெற்ற பெண்களால் தான் இயலும். பெண்களுக்கு எதிரான சமூகக் கொடுமைகளை எதிர்க்கும் ஆற்றலும், துணிவும் கல்வியறிவு பெற்ற பெண்களுக்கு ஏற்படுகிறது. பெண்கள் கல்வி கற்றுப் பெருமை பெற்றுப் பாரதிகண்ட புதுமைப் பெண்ணாக விளங்குதல் வேண்டும். அப்பொழுதுதான் வீடும், நாடும் சிறப்படையும்.

**ஞா.சாலினி**
(2017 Com)

**பொன்மொழிகள்**

*இயல்பாக அதிகாலையில் எழுந்திருப்போர் ஏதேனும் ஒரு துறையிலாவது மேலோர் ஆவது உறுதி*

*- பெர்னாட்ஷா-*

*நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்*

*-அன்னைதெரசா-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் தாயகம்

வட்டக்கச்சி எனும்
வளம் மிகு பிரதேசத்தில்
எல்லா புகழுடனும் நாம் வாழ
எம்மை வழிப்படுத்தும் ஆலயம் - தாண்
எம் வட்டக்கச்சி மத்திய கல்லூரி

அன்பான அதிபர் ஆசிரியர்களையும்
பண்பான மாணவச் செல்வங்களையும்
தன்னுள் அடக்கிய தாயே
எம் வட்டக்கச்சி மத்திய கல்லூரி

கால்கோள் விழா அன்று
காலடி எடுத்து வைத்தோம்- நம் பள்ளிக்குள்
அம்மா... அப்பா...என்று
பின்னே அன்றே ஓடினோம் பள்ளியை விரும்பாமல்

படிப்படியாய் வளர்ந்தோம்
1ம், 2ம், 3ம் வகுப்பு முடிந்தவுடன்
வந்தது புலமைப்பரிசில் என்னும்
பரிசோதனை பரீட்சை

ஒரு மாதிரி அதனையும் முறியடித்து
இடைநிலைக் கல்வியில் களமிறங்கினோம்
ஏற்றமாய் படித்து க.பொ.த
சாதாரணதரத்திற்கு வந்தோம்

தடைதாண்டல் பரீட்சை நெருங்கியது
மனம் படபடக்க கல்வி கற்று
பரீட்சையை எதிர் கொண்டோம்
பின் பரீட்சை பெறுபேறு வெளியானது

ஐயோ! என கதறிய முதல்
அன்றைய நாள் நம் வாழ்வில் என்றும்
மறக்க முடியாது எம் நட்புக் கூட்டத்தில்
பல பறவைகள் பாடசாலையை
விட்டு வெளியேறினார்கள்
ஜீன்ஸ், சேட் என்று ஒரு
பெருமித எண்ணத்துடன் க.பொ.த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரத்தில் கற்க ஆரம்பித்தோம்
உயர்தரம் என்றவுடன் குதூகலம்
பட்டாம் பூச்சியாய் சிறகடித்து பறந்தோம்

அந்நேரம் அரிய சந்தர்ப்பம் - எமக்கு
கிடைத்த அந்த பொன்னான நேரம் தான்
இளமைத் தென்றலின் துடி துடிப்பான
சுற்றுலாப் பயணங்கள்
எப்படிச் சொல்வது நம்
வாழ்வின் இன்பத்தை - ஒன்றாய்
மாணவர்கள் நாம் துன்பங்களை
மறந்து இடைவேளை என்றவுடன்
களவாக சிற்றுண்டிச்சாலை சென்று
உண்டதைச் சொல்லவா?

விளையாட்டு வீரர்களாக போட்டிக்கு
சென்று விளையாடிய நினைவுகள் சொல்லவா
ஆங்கில பாட ஆசிரியர் வகுப்பிற்கு
வரும் போது நூலகத்திற்குள் ஓடியதை சொல்லவா?
அதிபரை கண்டவுடன் படிப்பது போல்
புத்தகத்தை கையில் ஏந்தி
நடித்ததைச் சொல்லவா?
இல்லை
ஓராயிரம் பக்கங்களும் போதாது
நாம்அனுபவித்த அந்த அழகிய
தருணங்களை கவியாக வடிப்பதற்கு

என்ன தான் பிறப்பு
என்ற ஒன்று இருந்தால் இறப்பும்
உண்டு அம்மரணத்தை விட கொடுமையானது
அந்த கணத்தில் உயர்தர பரீட்சை
முடிந்து கல்லூரி விட்டு
கலைந்து போன உணர்வுகள்

அ.விதுஷா
(கலைப்பிரிவு 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையே வெற்றியின் அடித்தளம்

இன்று பலருடைய மனக்குழப்பங்களுக்கும் கவலைக்கும் முக்கிய காரணம் தன்னம்பிக்கை இன்மையே. நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நம்மை பற்றி நாம் வைத்திருக்கும் கருத்துக்கள் அனைத்தும் பிறர் நம்மை பற்றிக்கூறிய கருத்துக்கள் தான் நம்பிக்கையாகும் எனவே வாழ்வில் சாதித்தவர்கள் அனைவரும் தம்மைப் பற்றி சுய கணிப்பு செய்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

வாழ்வில் தோல்வியடைந்தவர்கள் தம்மிடம் நிறைகள், குறைகள் குறித்து சுய ஆய்வில் ஈடுபடாதவர்களே என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் அத்தனை பெரிய பலமுள்ள யானையை சிறிய மரத்தில் கட்டி வைத்திருப்பார்கள் யானைக்கு அந்த சங்கிலியை உடைத்தெறிய முடியும். ஆனால் அவ்வாறு செய்யாமல் இருப்பதற்கு காரணம் யானைக்கு அதன் சுயபலம் தெரியாமையே ஆகும். இது போன்று தான் நம்மில் பலரும் தன்னுடைய சுயபலம் தெரியாமல் மற்றவர்கள் அவர்களைப் பற்றிக் கூறிய கருத்துக்களை வெறுமனே நம்பிக் கொண்டு தன்னிடமுள்ள குறை நிறைகளை பற்றிய அக்கறை இல்லாமல் இருக்கின்றோம்.நம்மைப் பற்றி நமக்கு முழுமையாகத் தெரிந்தால் தானே நமது பலம் எது பலவீனம் எது என்பதை உணர்ந்து செயலில் ஈடுபட முடியும்.

பொதுவாக உங்கள் நண்பர்களிடம் உங்களின் பலம், பலவீனம் பற்றி கூறுங்களே என்று கேட்டுப் பாருங்கள் 90% சதவீதமானவர்கள் வெறுமனே சிரிப்பார்கள். இதற்கான காரணம் இவர்களை பற்றி முழுமையாக அவர்களுக்கே தெரியாது. நம்மை சரியாக நமக்கே முழுமையாக தெரியாவிட்டால் வேறு யாரும் நம்மை சரியாக புரிந்துகொள்ள மாட்டார்கள்.

பொதுவாக பார்வையில் தன்னம்பிக்கை அற்றவர்களை பார்க்கும் போது கோளைகளாக தெரிகின்ற போதிலும் உளவியல் பார்வையில் அவர்கள் தம்மை பற்றிய சுய மதிப்பீடு அற்றவராகவே கருதப்படுகின்றனர்.வாழ்வில் எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்ற நிலையில் கூட நமது வாழ்க்கை நமது கையில் தான் இருக்கின்றது. நாம் வாழ்வில் வெற்றியடைவதற்கு தன்னம்பிக்கை மட்டும் எஞ்சியிருந்தால் போதும் இழந்த அனைத்தையும் பெற்று விடலாம் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். வாழ்வில் பல இன்னல்களையும் போராட்டங்களையும் தாண்டி வெற்றியடைந்தவர்களில் சுயசரிதையை வாசித்துப் பாருங்கள் புரியும் அவர்கள் எந்தளவிற்கு தங்களை பற்றிய சுய ஆய்வில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பது.

அது போன்று எப்போதும் நமது பலம் பலவீனம் எது என அறிந்து நம்மிடமுள்ள நிறைகளை வளர்த்துக் கொண்டு குறைகளை நீக்க முயற்சிக்க வேண்டும்.

**உ.அஸ்விகா**
(2017 Bio)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்த உண்மைகள்

காற்றினில் கலந்த எம் கந்தகப் புகையின்
கனவினை மறந்ததுவும்
விடியலின் விளிம்பில் வெற்றியை தந்த
வீரத்ததை மறந்ததுவும்

தீயினை தின்று தேகத்தை விட்ட
எம் காலத்தை மாற்றியதும்
கழுத்தினில் கட்டிய கடுவிடம்
விட்டு ஈழத்தை இழந்ததுவும்

வேழத்தை கொன்ற வீரத்தை விட்டு
பாதத்தை பணிந்ததுவும்
தாகத்தை நெஞ்சினில் ஏற்றிய போதும்
வேகத்தை விட்டதுவும்

மடியினில் உறங்கிய மாதவ
வரத்தின் மார்பு பிளந்ததையும்
பூவையர் கற்பினை புண்ணுடை
நரிகள் அள்ளி ருசித்ததுவும்

தேடிய பொழுதில் வாடிய பயிரென
ஓடி ஒழித்ததுவும்
மூடிய கதவு இடைவெளி தன்னில்
ஊனம் வடிந்ததையும்

ஆடிய போரில் கூடவே
மண்ணில் ஆட மறந்ததுவும்
முடிவினை வந்ததும் முட்டியால் நின்று
மூச்சு இரைத்ததுவும்

கட்டிய ஆடைகள் கழரும் வரையில்
அவன் கருவிகள் தேடியதும்
விட்ட நொடியினில் கூடவே எம்மவர்
காட்டிக் கொடுப்பினையும்

வெள்ளைக் கொடி தன்னை சிவப்பினால்
மாற்றி சிரித்து மகிழ்ந்ததும்
ஒரு நாடு ஒன்றாக என்று
ஒட்டிட வந்ததுவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டவெளி தன்னில்
கொட்டி எமை விட்டு
கூத்துக்கள் போட்டமையும்

உற்ற வறுமையில் எம்மவர் அங்கே
பிச்சை எடுத்தமையும்
கொடுத்தவர் செங்கரம் கொடு பொருள் இன்றி
குறுகியே நின்றமையும்

விட்ட நொடி முதல் வீதியில்
வந்து கொட்டில் போட்டமையும்
யுத்த பகுதியில் தட்டியே விட்ட நாம்
சட்டிகள் சேர்த்தமையும்

வளமுடன் வாழ்ந்தவர் வறுமையில் இருந்தவர்
சரிநிகர் ஆனதுவும்
சண்டைகள் முடிந்தும் நம் சத்தியம் அறுந்து
சாதியம் வந்ததுவும்

காலையில் மாலையில் கையினால்
என்றும் கஞ்சா வந்ததுவும்
பீடி சிகரெட் பான்பராக் என்று வீதியில்
பற்றி எறிந்தமையும்

கூடுவார் உடன் கூடி கூத்துக்கள்
மற்றும் நாட்டியம் போட்டமையும்
அடக்கிட ஆண் மகன் இல்லை எனும்
சொல்லால் ஆணவம் கூடியதும்.

வெங்கள வீரத்தை வெறி என எண்ணி
வாளுடன் திரிந்தமையும்
சம்பளம் இன்றியே எம்மவர் உடல்களை
வெட்டியே சரித்தமையும்

நாட்டியம் போடும் நடிகரின் மட்டைக்கு
பாலினை வார்த்தமையும்
மூடிய வண்ணம் திரிந்த நம்
பெண் குல முட்டி தெரிந்ததுவும்

கட்டிய சேலையில் ஒட்டிய ஆடையில்
ஓட்டைகள் வந்ததுவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி கண்ட நம்புத்தம் புதிய பெண்
நித்தமும் கண்டமையும்
செத்தவர் உடலினை மேவி மேல் நின்று
செல்ஃபிகள் எடுத்தமையும்

வட்டிக்கு வாங்கி நம் வாசல் பணத்தில்
வாகனம் வாங்கியதும்
சட்டையும் சைக்கிளும் கஞ்சாவும் அபினும்
எம் சுதந்திரம் ஆகியதும்

விடுதலை என்பது இதை விட ஏது என
தறுதலை ஆகியதும்
மொத்தமும் எல்லாம் சுத்தமாய் மறந்து
வீம்புக்கு வாழ்வதுவும்

மறைந்தவை என்றும் உறங்குவதில்லை
மாண்புடன் எழுந்திடும் காண்

**செல்வராசா டானியல்**
**(2017 வர்த்தகம்)**

## பொன்மொழிகள்

நமது அறிவு என்பது எறும்பு என்றால் வாழ்க்கையும் இந்த உலகமும் யானையைப் போன்றது

-சுவாமி சுகபோதானந்தா-

இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்திக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை

-மகாகவி பாரதியார்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது உடலில் புதைந்துள்ள இரகசியங்கள்

01. நன்கு வளர்ந்த ஒரு மனிதனின் உடலில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. ஆனால் அவன் குழந்தையாக இருக்கும் போது அவனது உடலில் 300 எலும்புகள் இருக்கும் அவன் வளர வளர அவற்றின் 94 எலும்புகள் மற்ற எலும்புகள் இணைந்து விடுகின்றது.

02. நாம் 6 விநாடிக்கு ஒரு முறை கண்களை இமைக்கிறோம். சாதாரணமாக வாழ்நாளில் சுமார் 25 கோடி முறைகள் கண்களை இமைக்கிறோம்.

03. நமக்கு 2 கால்கள், 2 கைகள், 2 கண்கள், 2 காதுகள் போன்றவை ஒரே அளவாக இருப்பதில்லை. காரணம் கருவில் சிசு வளரும் போது அதன் உறுப்புகள் ஒரே சீராக வளர்வதில்லை. இந்த மிகச் சிறிய வித்தியாசம் தான் நம்மை அழகுப்படுத்திக் காட்டுகிறது.

04. நம் உடலில் சுமார் 20 லட்சம் வியர்வை சுரப்பிகள் இருக்கின்றன. அவை ஒரு நாளில் சராசரியாக 05 லீற்றர் முதல் 06 லீற்றர் வரை வியர்வையை வெளிப்படுத்துகின்றன.

05. நமது விரல்களில் நகம் வேகமாகவும் கட்டை விரலின் நகம் மெதுவாகவும் வளர்கின்றன. நம்முடைய உடற் பாரத்தால் கை விரல் நகத்தை விட கால் விரல் நகம் மெதுவாக வளர்கிறது.

06. நாம் இரவில் தூங்கும் போது அசையாமல் தூங்குவதில்லை சுமார் 40 முறை அந்தப்பக்கம் இந்தப்பக்கமாக புறண்டுபடுக்கிறோம்.

07. மண்டையோடு மனிதனின் 80 வயது வரை வளர்கிறது.

08. மனித முகங்களை மொத்தம் 520 வகைகளுக்குள் அடக்கி விடலாம்.

09. மனித நாக்கின் நீளம் 10 cm ஆகம்.

10. நாம் படுத்திருக்கும் போது ஒரு நிமிடத்திற்கு 9 லீற்றர் மூச்சுக் காற்று உட்கார்ந்திருக்கும் போது 18 லீற்றர் மூச்சுக் காற்றும் நடக்கும் போது 27 லீற்றர் மூச்சுக் காற்றும் தேவைப்படுகின்றது.

11. மூளையின் மடிப்புக்களில் அறிவு கூர்மையைதீர்மானிக்கும்.

12. மனித உடலில் இருக்கும் இரத்தம் 30 அடி தூரம் வரை பீய்ச்சியடிக்கும்.

13. மனித உடலில் 33 முள் எலும்புகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. நமது உடலிலுள்ள செல்கள் பிரிந்து இரண்டாகும் தன்மையுடையது. ஒரு நாளைக்கு நம் உடலில் 60 கோடி செல்கள் இறந்து புது செல்கள் பிறக்கிறது.

15. தலைமுடி 2 வருடங்களிலிருந்து 4 வருடங்கள் வரை வளர்கிறது. அதன் பின் மூன்று மாதம் வளராமல் இருந்து உதிர்கிறது. பிறகு புது கேசம் வளர்கிறது.

16. நாம் ஒரு பொருளை இறுக்கிப் பிடிக்க கட்டை விரலிலுள்ள 03 தசைகள் தான் பெரும் பங்களிக்கிறது. மனிதனை ஒத்த உருவங்கொண்ட சிம்பன்ஸி குரங்கிற்கு இந்த 03 தசைகள் கிடையாது.

17. ஓர் அடியெடுத்து வைப்பதற்கு உடலெங்கும் 54 தசைகள் பணிபுரிய வேண்டியுள்ளது.

18. மூளை அதிகமாக வேலை வாங்கும் மனித உறுப்பு கட்டை விரல்கள் ஆகும்.

19. மனித மூளை 80 முதல் 85 சதவீதம் தண்ணீரை கொண்டதாகும்.

20. நாட் எடைலின் மொத்த எடையின் 12 சதவீத பங்கு இரத்தம் உள்ளது.

21. மனித உடலில் மிகப் பெரிய உறுப்பு தோல்.

22. நமது தலையின் எடை 3175 கிராம்.

23. மூளையின் 100 கோடி நியூன்களை நமக்கு 4 வயதுக்கு கிடைத்து விடும்.

**தே. சர்சிகா**
**(2017 Com)**

### பொன்மொழிகள்

*கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும்.*

*-முகம்மது நபி-*

*இந்த உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே*

*-ஹிட்லர்-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையால் மாறும் பாதை

மக்கள் மத்தியில் நல்ல விடயங்களை விடவும் தீய விடயங்களே அதிகம் கவரப்படும் என்பது எழுதப்படாத விதிமுறையாகும். அந்த வகையில் நல்ல மாற்றங்களை விடவும் தீய மாற்றங்களை மக்கள் அதிகம் விரும்புகின்றனர். என்பதற்கான நல்ல உதாரணமாக இன்று போதைப் பொருள் பாவைனைக்குள் இளம் சமுதாயம் அடிமையாகி வருகின்றமையைக் குறிப்பிடலாம்.

உலகளாவிய ரீதியில் மொத்த சனத்தொகையில் 15 - 64 வயதுக்கு இடைப்பட்ட 243 மில்லியன் மக்கள் இன்று போதைப் பாவனைக்கு அடிமையாகி உள்ளனர்.என்ற ரீதியில் போதைப்பொருள் பாவனைக்கு உலக சனத் தொகையில் 200 பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் அடிமையாகின்றனர். இந்தத் தொகையில் 20% போதைப்பொருள் அடிமையாளர்கள் பெண்களாவர். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் போதைப்பொருள் பாவனையால் மாத்திரம் சுமாராக 6 லட்சம் பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த நிலையில் நாளுக்கு நாள் உலகளாவிய ரீதியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் கொண்டே செல்கின்றதே தவிர இவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கையாள்வது மிகவும் கடினமானதொரு காரியமாகவே மாறி விடுகிறது. அதே போல் இன்று போதை உற்பத்தியை மேற்கொள்ளும் நாடுகளில் மத்திய கிழக்கு நாடுகளே முன்னிலையில் உள்ளன. குறிப்பாக உலகளாவிய ரீதியில் போதைப்பொருள் உற்பத்தியில் ஆப்கானிஸ்தான் முதன்மை நாடாக உள்ளது.

போதைப்பொருள் உருவாக்குவதற்காக போப்பி செடிகள் ஒரு லட்சத்து 54 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் செய்கை செய்யப்படகிறது. கடந்த ஆண்டில் மாத்திரம் ஆப்கானிஸ்தானில் 2 இலட்சத்து 9 ஆயிரம் நிலப்பரப்பில் போப்பி செய்கை பண்ணப்பட்டுள்ளது. அதே போல் மியன்மார் போதைப்பொருள் உற்பத்தியில் இன்னொரு முக்கிய நாடாக உள்ளது. நாட்டில் வருவாயைத் தரும் கொக்கெயன் வகையிலான போதைப்பொருள் பிரசித்தி பெற்று வருகின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் நடைபெறும் பல குற்றச் செயல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு போதைப் பாவனையே முக்கிய காரணமாய் அமைந்துள்ளது. சாதாரண மதுப்பாவனை, சிகரெட் என்பவற்றிற்கு அப்பால் பல வகையிலானப் போதைப் பொருட்கள் பல நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதே போல் இளம் சமூகத்தினர் அதிகளவில் போதைப்பொருளுக்கு அடிமைகளாக மாறியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் உலகளாவிய ரீதியில் பரவி வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் வகையில் 1987ம் ஆண்டு ஆனி மாதம் 26 ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபையினால் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தடுப்பு தினமாக பிரகடனம் செய்தது. அன்று தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் ஆனி 26ம் திகதி போதைப்பொருள் ஒழிப்புத் தினமாக கடைப்பிடித்து வருகின்றனர். இலங்கையிலும் போதைப்பொருள் பாவனையும் அதனால் சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் தாக்கமும் அண்மைய காலங்களில் மிகவும் அதிகரித்து வருகின்றன. இலங்கையில் கடந்த 3 தசாப்த கால சூழலில் நாட்டில் ஆயுதப் போராட்டத்தை காரணம் காட்டி இலங்கையில் போதைப்பொருள் வியாபாரம் இடம்பெற்று வந்தது. ஆனால் யுத்தத்திற்குப் பின்னரான கடந்த 07 ஆண்டு காலமாக இலங்கையின் போதைப்பொருள் பாவனை இரண்டு மடங்கு அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

இலங்கை சனத்தொகையின் ஒரு இலட்சம் பேருக்கு 322 பேர் என்ற ரீதியில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை என்ற குற்றத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இலங்கையில் போதை வஸ்துக்களுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கையில் 50 விதமானோர் திருமணமாகாதோராவார் அதேபோல் திருமணமாகாதோர் வீதத்தில் 69 வீதமானோர் பாடசாலை மாணவர்கள் ஆவார். என்றொரு அதிர்ச்சித் தகவலையும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது. 71 வீதமான போதைப்பொருள் அடிமையானவர்களை கொழும்பு மாவட்டமும் 22 வீதமான போதைப் பாவனை வளர்ச்சியை கம்பஹா மாவட்டமும் கொண்டுள்ளது. அதே போன்று யுத்தத்திற்கு பின்னர் வட மாகாணம் இன்று போதை அச்சுறுத்தலில் சிக்கியுள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. மேற்கத்தைய கலாசார மோகம் இன்று வேகமாக நம் நாடுகளிலும் வெகுவாக பாதித்து வருகின்றது. என்பது இன்று நன்றாக உணரக்கூடியதாக உள்ளது. குறிப்பாக 16 தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் இப் போதைப் பொருள் சிக்கலுக்குள் எதிர் கொள்வதாக இலங்கையில் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

போதை வஸ்துக்களை ஊசிகள் மூலம் ஏற்றிக் கொள்வதன் மூலம் எயிட்ஸ் தொற்றும் அபாயம் அதிகமாகவே உள்ளது. இலங்கையில் ஒட்டு மொத்த எண்ணிக்கை 1845 ஆகும். இன்று போதைக்கு அடிமையான மக்களால் தமது சொந்த உறவுகளே சீரழிக்கப்பட்டுள்ளன. கொலை, கற்பழிப்பு ஏனைய தாக்குதல் சம்பவங்கள் அனைத்திற்கும் இந்த போதையே வழிகாட்டியாக உள்ளது. ஆகவே போதைப்பொருள் பாவனை நாட்டில் சமூகங்களுக்கிடையில் மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படத்தி வருகின்றது. போதைப் பாவனை வெறுமனே ஒரு விதமான இன்பத்தை ஏற்படுத்தும் எனக் கருதி மக்கள் இந்தப் போதை வஸ்துக்கு அடிமையாகின்றனர். ஆனால் இதன் மூலம் எண்ணிலடங்காத நபர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்படுகின்றனர். பல உயிர்கள் பறிக்கப்படுகின்றன. குடும்பங்களிடையே நிம்மதியின்மை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இருந்து நாட்டில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல வழிமுறைகளை கையாண்டும் அவை சாத்தியமாவில்லை.

2013 ஆம் ஆண்டு இலங்கை பொலிஸ் திணைக்களம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில், மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு, மதுவரித் திணைக்களம் முப்படை போன்ற அரச நிறுவனங்கள் போதை ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்களின் தலையீட்டுடன் போதைத் தடுப்புச் சட்டங்களும் அமுல்ப்படுத்தப்பட்டு வந்தன. ஆயினும் ஆண்டுக்கு ஆண்டு போதைப்பொருள் பாவனையாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றதே தவிர மக்களிடையே போதைப்பாவனை கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக எந்த அறிக்கையும் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆகவே மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் இணக்கமான நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இளம் சமூதாயத்தை இந்த நாசக்காரப் பாதையில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். இளம் சமூதாயம் ஆரோக்கியமானதும் தெளிவான சிந்தனையிலும் உருவானால் மட்டுமே வளமான நாட்டை கட்டியெழுப்ப முடியும் இன்றைய சூழலில் இளைஞர், யுவதிகள் மத்தியில் ஏற்பட்டு வரும் குற்றச் செயல்கள் அனைத்திற்கும் பின்புலத்தில் ஏதோவொரு வகை போதைப்பொருள் காரணமாக உள்ளது. இந்த விடயத்தில் இளம் சமூகம் அதிகம் சிந்தித்து செயற்பட வேண்டியது கட்டாயமானதும் ஒவ்வொருவருடைய பொறுப்புமாகும். நாட்டினை போதையற்ற ஒரு இடமாக மாற்றுவது நம் ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும்.

**றொ. பினோல்ட்**
**வர்த்தகப்பிரிவு 2016**

**பொன்மொழிகள்**

*உன்னை தாழ்த்தி பேசும் போது ஊமையாய் இரு, உயர்த்திப் பேசும் போது செவிடனாய் இரு, வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்*

-சுவாமி விவேகானந்தர்-

*நீ மகிழ்ச்சியாக இருக்கும் போது நீ யாரை விரும்புகிறாயோஅவரை நினைத்துக் கொள்வாய்! நீ துயரத்தில் இருக்கும் போது என்னை யார் விரும்புகிறாரோ அவரை நினைத்துக் கொள்வாய்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHALLENGE

The word is filled with little men,
Content with where they are, and what they are
A few scared to face and meat challenger
But a few determined to rise above


Yet in this world there is a need
Formed to lead the rose
To rise above the "average" life
By giving of their best!

Would you be one, Who dares to try
When challenged by the task!
To rise to height you are never seen
Or is that too much to ast?

This is your day.....a world to win
Aggrade purpose to achieve
Accept the challenge of your goals
Andie your self believe!

You will be proud of what you are done
At the close of day
You took back on your battles won
Content you came this way!!!!!


V.Thivagar
(2017 Com)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவர்களின் எதிரி பார்த்தினியம் பேசுகின்றேன்



எனது வாழ்வானது முதன் முதலாக வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு இயற்கை நீகழ்வே எனினும் நான் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்து பல சாதனைகளையும் கண்டுள்ளேன். ஏன் என்றால் என் எதிரிகள் சிலர் தான் போராடினார்கள் சிலர் என்னை கண்டு கொள்ளவே இல்லை. இப்படியே இருந்ததால் என் புகுந்த வீடான வவுனியாவில் இருந்து மெல்ல நகர்ந்து யாழ்ப்பாணம் சென்றேன். அங்கும் என் முடியாட்சியே இடம் பெற்றது.

உங்களுக்கு ஓர் முக்கியமான விடயம் தெரியுமா? என்னை வடமாகாணத்தில் கண்டறியப்பட்டு இற்றைக்கு 18-19 வருடங்கள் ஆகின்றன. இதற்கு நான் காரணமாக முடியாது ஏன் என்றால் என் பிறவிக்குணமே இதுவாகி விட்டது நான் என் செய்வேன் இதற்கு காரணம் என் எதிரிகளே நான் பூத்துக் குலுங்கி மகிழும் வரை மனிதர்கள் சீண்டுவதில்லை இடையிடையே என்னை அழிப்பதற்காக சிலர் ஒன்று கூடுவார்கள் ஆனாலும் என்னுடன் மோதி தோற்று விடுவார்கள் என்றே கூற முடியும்.

முதலில் வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் இருந்த நான் எனக்கு கிடைத்த வசதி வாய்ப்புக்களைக் பெற்றுக் கொண்டு பல இடங்கள் சென்றேன். என் பரம்பரையானது முதலில் வவுனியாவிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் முக்கோணப் பாத்திகளாக பருத்தித்துறை பாதை கே.கே.எஸ் பாதை, புத்தூர் சந்தியில் இருந்து வரும் பாதை என்பவற்றில் அதிகமாகக் காணப்பட்டேன். ஆனாலும் இப்போது நான் செம்மணி வீதியாலும் பருத்தித்துறை பாதை, கே.கே.எஸ் பாதை, புத்தூர் சந்தியில் இருந்து வரும் பாதை என்பவற்றில் அதிகமாகக் காணப்படுகின்றேன். ஆனாலும் இப்போது நான் செம்மணி வீதியிலும், பருத்தித்துறை வீதியிலும் இன்னும் தீவகம் பகுதியிலும் விரைந்து பரவிக் கொண்டிருக்கின்றேன்.

மேலும் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் வளரத் தொடங்கியிருக்கின்றேன். அதில் வீறு நடையும் போட்டு வருகின்றேன். வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் கனகராஜன் குளம், முல்லைத்தீவில், ஒட்டு சுட்டானிலும் மேலும் பல்வேறு இடங்களிலும் பரவ முயற்சிகள் எடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பரம்பலானது காற்றினாலும், வாகனங்களினாலும் விலங்குக் கழிவுகளான எருக்கள் மூலமும் பரவுகின்றேன். நான் உருவாக்கும் விதையானது 10-12 வருடங்கள் வரை முளைத்திறன் சக்தியுடன் காணப்படுகின்றது. ஒரு மழை பெய்தால் போதும் என் விதைகள் முளைத்து விடும். பின் என் சாம்ராச்சியம் தான் நிலை பெறும்.

என்னைப் பற்றி வேறு ஒன்று கூறவா? அது முக்கியமான விடயம் இதை அவதானியுங்கள் என் காற்றானது சுவாசத்தினூடாக உட் செல்லும் போது ஒவ்வாமை ஏற்படும் அல்லது வாந்தி, மயக்கம் ஏற்படும். என்னை உண்டால் சில சமயங்களில் மரணமும் ஏற்படலாம். நான் வளரும் இடங்களில் உள்ள ஊட்டச்சத்துக்கள் அனைத்தையும் நான் பெற்று விவசாய நிலத்தை தருசு நிலம் ஆக்கும் சக்தி எனக்குண்டு. இவ்வளவு தான் என் புகழ்.

எதிரிகளே நீங்கள் என்னை எதிர்ப்பீர்களா? இல்லை என்னை மேலும் பரவ வழிவகுப்பிர்களா? நீர் என் எதிரியாக இருந்தாலும் இந்நாட்டுக்கு என் பங்கு வேண்டும் என்பதற்காக என்னை அழிப்பது பற்றி கூறுகின்றேன். என்னை முளைத்தவுடன் பிடுங்குங்கள், எரித்து விடுங்கள் இதன் மூலமே என்னை அழிக்க முடியும். நான் கூற வேண்டிய அனைத்து விடயங்களையும் கூறிவிட்டேன் உங்களிடம் இருந்து விடைபெறும் நான் விவசாயியின் எதிரி பார்த்தீனியம்.

"விவசாயத்தைக் காப்போம்
நாட்டை கட்டியெழுப்புவோம்."

**நா. பபிசலா**
**(கலைப்பிரிவு 2016)**

### பொன்மொழிகள்

*அறிவுள்ள மனிதர்களுடன் உரையாடு, அறிவில்லாத மனிதர்களோடு உறவாடு, ஆனால் பண்பில்லாதவனைக் கண்டால் ஒதுங்கிடு.*

*ஒரு வினாடியில் நாம் செய்யும் தவறு வாழ்க்கை முழுவதும் வேதனையைத் தேடித் தருகிறது.*

*அயலவனை நேசி அதற்காக அவனையும், உன்னையும் பிரித்து வைக்கும் வேலியைப் பிடுங்கி விடாதே*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி நாட்களில்...

பொன் வானப் பொழுதுதனில் புதுப்புதுக் கோலங்கள்
என் மன வானில் சிறகடிக்கும் எண்ணங்கள்
நேற்றைய வாழ்வு தனை மீட்டிப் பார்க்கிறேன்
இற்றைத் திங்கள் எனைக் கலங்க வைக்கிறதே

பள்ளி தோழமையில் பாங்கான நினைவுகள்
பாதி ரொட்டிக்காய் பத்துப்பேர் பங்கிட்டோம்
பட்டப்பேர் சொல்லி மூண்ட சண்டையும்
பத்தே நிமிடத்தில் கலைந்திடுமே!

எத்தனையோ பொய் சொல்லி
அம்மாவை நம்ப வைத்து
அத்தனை சிநேகிதரும் ஒற்றுமையாய் சேர்ந்து
சாத்தானை கூட சிரிக்க வைத்து
உல்லாசமாய் பாடி வந்தோம்

வீட்டிலே சண்டையென விம்மி விம்மி வந்தோம்
மட்டில்லா ஆனந்தமாய் மறு நொடியில் மாறி
ஏட்டிலே கவனமுடன் கற்று வர
காட்டியே நின்றவர் நம் தோழர்

பாடத்துக்கு வாத்தியார் இல்லையென்றால்
பக்கத்து மாமரமும் கன்றீனும் நமதே
புளிப்பான பழங்கள் எல்லாம்
இனிப்பாய் இருக்க எத்தனையோ விளையாட்டை
இன்பமாய் செய்து குதூகலித்து இருந்தோம்

பாங்கான வாழ்வுதனை பாதியிலே விட்டு
ஏங்காத நாளும் இன்னும் தொடர்கிறதே
மீண்டும் ஒரு நாள் பள்ளி வாழ்வு வாராதாவென
ஏக்கமுடன் இன்னும் வாழ்கிறோம்.

நன்றி

**கௌ. விதுஷன்**
**(2017 வர்த்தகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய தகவல்கள் உங்களுக்காக!!

01. நைல் நதியின் மேல் செல்லும் நீரோட்டத்தை விட அதன் அடிமட்டத்தில் பாயும் நீரின் வேகம் 6 மடங்கு அதிகமாக இருக்கும்.

02. ரோலர் கோஸ்டரில் பயணம் செய்பவர்களுக்கு மூளையில் இரத்த அடிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது.

03. நீல நிறக்கண்கள் உடையோர்க்கு மற்றவர்களை விட இரவில் பார்வைத் திறன் துல்லியமாக இருக்கும்.

04. காகிதப் பணம் தயாரிக்கப்படுவது காகிதம், பருத்தி ஆகியவற்றின் சிறப்பான கலவைகளால் தான்.

05. தேளை கொல்வதற்கு எளிய வழி, சிறிதளவு மதுபானத்தை அதன் தோளின் மீது ஊற்றினால் போதும் உடனே அது இறந்து விடும்.

06. வெங்காயம் உரிக்கும் போது கண்ணீர் வராமல் இருக்க சூயிங்கம் மென்றால் போதும்.

07. உலகில் பயன்படுத்தப்படும் பெற்றோலில் 29% அமெரிக்காவில் பயன்படுத்தப்படுகின்றது. அதுபோல் உலகின் பயன்படுத்தப்படும் மின்சாரத்தில் 33% வீதம் பயன்படுத்தப்படுவது அமெரிக்காவில் தான்.

08. வலது கைப்பழக்கம் உள்ளவர்கள் இடது கைப்பழக்கம் உடையவர்களை விட சராசரியாக ஒன்பது வருடங்கள் வாழ்கிறார்கள்.

10. ஒரு புன்னகை புரிவதன் மூலம் குறைந்த பட்சம் 30 தசைநார்களுக்கு பயிற்சி கிடைக்கிறது.

11. நமது மூக்கு நமது உடலில் ஒரு குளிர்சாதனப் பெட்டி போல் இயங்குகிறது இது உடலுக்குள் செல்லும் குளிர்காற்றை வெப்பப்படுத்தி அனுப்புகிறது. சூடான காற்றை குளிரச் செய்து அனுப்புகிறது.

12. நமது மூளையானது சக்தி வாய்ந்த கணினியை விடபல மடங்கு சக்தி வாய்ந்தது மூளை 100 பில்லியன் நரம்பு செல்களால் உருவானதாகும்.

13. மனிதன் இறக்கும் போது முதலில் அவனின் கேட்கும் திறனையே இழக்கிறான்.

14. ஓரிகான் என்ற இடத்தில் 2400 வருடங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் காளான் ஒன்று உள்ளது.

15. நமக்கு மகிழ்ச்சி அளிக்கும் செயல்களை பார்க்கும் போது நமது விழித்திரையானது சாதாரண நிலையைவிட 45 சதவிகித அளவில் விரிந்து விடுகிறது.

ச.தர்சிகா
(2016 உயிரியல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டக்கச்சியின் விருட்சம் நீயே!

காலங்கள் பல கடந்தும் - எமை
காரிருள் சூழ்ந்திருந்த வேளை - நடத்தைக்
கோலங்கள் தனை மாற்றி - எமை
கோபுரமாய் உயரவைத்து
ஞாலங்கள் போற்றும் நன்மக்களாய்
நாம் பாரினிலே சிறந்து ஓங்கிட
பாமரராய் இருந்த எமை மாற்றி
சீர்மையுறு கல்வியினை சிறப்புடனே தந்த
வட்டக்கச்சியின் விருட்சம் நீயே.


யாவரும் கற்றுயர் வெய்தி மகிழ்ந்திட ஏற்றம்
பெறும் கல்விதனை எமக்கூட்டி
தாயினும் நல்வழி காட்டி எமை
தயவுடன் பேணிக்காத்து
ஒப்பிலாப் பண்புகள் புகட்டி
ஓங்கி வளர்ந்திட்ட பள்ளியே
இப்புவி தன்னிலே என்றும்
எல்லையில்லாப் புகழ் உனக்கே அதனால்
என்றும் வட்டக்கச்சியின் விருட்சம் நீயே

ஒழுக்க நெறிகளை ஊட்டி எமையிந்த
உலகினில் உயர்ந்தவர் ஆக்கி என்றும்
அழுக்காறு அவா வெகுளி
இன்னாச் சொல் நான்கையும்
எம் அகத்தினில் சேராது காத்து
மனித விழுமியப் பண்புகள் தந்து எமை
வையகத்தில் மானிடராக்கி என்றும்
புனிதன் எனும்படி வாழத் தடையான
பொல்லாத குணங்களைப் போக்கும்
வட்டக்கச்சியின் விருட்சம் நீயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிய கல்லூரியே உனைப் போற்றும்
திவ்விய மாந்தர் நாமே என்றும்
பாரிலே நல்வழி காட்டும் உன் புகழ்
பாடிப்பரவுவோம் நாமே
பல்துறை வித்தைகள் தந்து எம்
பண்பு விருத்தியைக் கூட்டும்
செந்தமிழ் கல்வியை ஊட்டி
எமை இத்தேசத்தில் ஓங்கிடச் செய்யும்
அந்தமில்லா அன்னையே உன்னை
அன்புடன் கூப்பி வணங்குவோம் இருகையால்
ஆகையால் வட்டக்கச்சியின் விருட்சம் நீயே

**யோ.நளாயினி**
**(2016 வர்த்தகப்பிரிவு)**



### பொன்மொழிகள்

துன்பங்களை உன்னிடத்தில் குடி வைக்காதே அது உன்னை இறுதியாய் அழித்துவிடும்.

யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னை நீ திருத்திக் கொள் பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டு விடு.

உட்பகையை விட வெளிப்படையாகக் கடிந்து கொள்வத நல்லது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்கள் பற்றி என்ன சொன்னார்கள்

இந்த வாழ்வின் ஆகச் சிறந்த கேளிக்கை கொண்டாட்டம் ஓசையின்றி நடக்கிறது... அது தான் புத்தக வாசிப்பு.

-எமர்சன்-

ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது ஒரு நூலகம் கட்டுவேன் என்றவர்.

-மார்க் டிவைன்-

நல்ல புத்தகங்களை வாசிக்காத ஒருவன் வாசிக்கவே தெரியாதவனை விட உயர்ந்தவன் அல்ல.

-சிக்மண்ட் பிராய்ட்-

எவ்வளவோ கேளிக்கைகளை குழந்தைகளைக் கவர ஏற்படுத்தினேன். எல்லாவற்றையும் விட அதிக புதையல் புத்தகங்களிலே உள்ளன.

- வோல்ட் டிஸ்னி-

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக்கொள்ளும் போது வரும் முற்பணத்தில் முதல் நூறு டொலருக்குப் புத்தகம் வாங்குபவர்.

-சார்லி சாப்லின்-

ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படும்.

-விவேகானந்தர்-

வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும்.

-நெல்சன் மண்டேலா-

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்.

-அல்பர்ட் ஜன்ஸ்டீன்-

புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே.

-லெனின்-

எங்கே நல்ல புத்தங்கள் எரிக்கப்படுகின்றனவோ அங்கே விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள்.

-சேகுவாரா-

போதும் என நொந்து புதிய வாழ்வைத் தேடுகிறீர்களா....ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்.

-இங்கர்சாஸ்-

உண்மையான வாசகர் வாசிப்பை முடிப்பதே இல்லை.

-ஆசகார் வைல்ட்-

ஓர் எழுத்தாளன் ஒரு புத்தகத்தை தொடங்கி வைக்கிறான் வாசகன் அதை முடித்து வைக்கிறான்.

-சாமுவேல் ஜோன்சன்-

**கி. சுஜீர்த்தனா**
**(2017 கலைப்பிரிவு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல வேடிக்கை மனிதரை போல வீழ்வேன் என்று நினைத்தாயோ....

வெஞ்சினம் கொண்ட மண்ணை
அந்நியன் ஆள விட்டு
துஞ்சிடும் நரிகளை போல்
அஞ்சியே ஒழிவேன் என்றும்

பெண்மையின் கற்பை அள்ளி
பேதையை சீரழித்து கொன்றிடும்
ஆண்மைக்கஞ்சி ஆமை போல்
வாழ்வேன் என்றும்

சாதியப் பேயை விட்டு சந்ததி
அழிக்கும் உந்தன்
ஆதிக்க பேய்வெறிக்கு
அமைதியாய் போவேன் என்றும்

கும்பிடா எந்தன் கரமும்
கூத்தாடி முன்பு நின்று
பாலினை ஊற்றி மண்ணில்
பஜனைகள் செய்வேன் என்றும்

கட்டிய மனையாள் விட்டு
காமத்தை எண்ணிக் கொண்டு
காரிருள் வேளை தன்னில்
கதவினைத் தட்டி
எந்தன் இச்சைகள் தீர்ப்பேன் என்றும்

வாக்கினை வாங்கிக் கொண்டு
வளமுடன் வாழ்ந்து விட்டு
பேச்சிலே வீரம் சொல்லும்
பேடியாய் வாழ்வேன் என்றும்

பெற்றவள் கண்ணீர் மண்ணில்
பெருகிட செய்யும் அந்த பிள்ளைகள் போல்
மண்ணில் புழுவென வாழ்வேன் என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையில் போய் வாழ்ந்து
பாதையை தவற விட்டு
வாலிபம் இழந்து நிற்கும்
வயதினன் ஆவேன் என்றும்
பெண்ணினை அடிமை கொண்டு

காலடி வீழ்த்தி விட்டு
ஆண்மையே அது வென்றோதும்
அரக்கனை போலே நானும் அவர்
குணம் கொள்வேன் என்றும்

கனவிலும் நினைத்திருந்தால்
கனவையே கலைத்திடுங்கள்
நினைவிலும் விடிவை எண்ணி
நிமிர்வுடனே வாழ்வேன் நானும்

வெல்வது உறுதி போலே
வீழ்வதும் உறுதி என்ற
நம்பிக்கை துணை இருக்க
வஞ்சகம் விலக்கி வாழும்
வயதினை அடைந்து விட்டேன்.

**ச. நிதுஷாந்**
**(2016 Com)**

## பொன்மொழிகள்

ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு இதமளிக்கும் ஒரு நல்ல வார்த்தை மேலானது

தமக்கு நல்லது என்று கருதாததை பிறருக்குச் செய்யாமல் இருப்பவரே சான்றோர் ஆவார்.

மற்றவர்களை கீழே தள்ளிவிட்டு நீ மட்டும் ஏணியில் ஏற முயற்சிக்காதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது கதையல்ல உண்மை

வீரசிவாஜியின் படைகள் ஒருமுறை ஒரு பிராந்தியத்தை கைப்பற்ற நடைபெற்ற போரில் சுல்தான் ஒருவனை தோற்கடித்தனர். அவனது கோட்டையையும் கைப்பற்றினர். அப்போதெல்லாம் யுத்தத்தில் வெற்றி பெற்றால் சம்பந்தப்பட்ட பட்டத்து இளவரசிகளையும் ராணிகளையும் கவர்ந்து சென்று விடுவார்கள். வெற்றி பெறும் மன்னனோ சுல்தானோ விரும்பினால் அவளை அடிமையாக்கி விடுவார்கள். இங்கே சிவாஜியின் படை வெற்றி கொண்ட சுல்ததானின் மனைவி பேரழகி. அவளது அழகு அந்த பிராந்தியத்திலேயே மிகவும் பிரசித்தம். எனவே சிவாஜியின் படைத்தளபதி மற்றும் வீரர்கள் தம் மன்னனின் மனமும் உடலும் குளிரட்டும் என்று எண்ணி அவளை சிறைபிடித்து கடுங்காவலுக்கிடையே பல்லக்கில் ஏற்றி அவளைக் கொண்டு வந்து அவள் தப்பிக்க முடியாதபடி சிவாஜியின் அந்தப்புரத்திற்கு வெளியே விட்டுவிடுகின்றனர். அன்றிரவு தூங்கச் செல்லும் சத்திரபதி சிவாஜி தனது அறைக்கு வெளியே பல்லக்கு இருப்பதை பார்த்த பல்லக்கில் இருப்பது யார்? என்று தனது தளபதியிடம் கேட்க மன்னா! இவள் அழகை கண்டு மயங்காதவர்களே இந்த பிரதேசத்தில் இருக்க முடியாது. எனவே இவளை உங்களுக்கு அடிமையாக்கலாம் என்று கூறுகிறான்.

சிவாஜி நேரே பல்லக்கு அருகே செல்கிறார் பல்லக்கின் திரைச்சீலையை விலக்கிப் பார்க்கிறார். ஏற்கனவே அச்சத்தில் இருந்த சுல்தானின் மனைவி மருண்ட வழிகளோடு சிவாஜியை பார்க்கிறாள்.

சிவாஜியோ "அம்மா நீங்கள் மிகவும் அழகு தான் உங்கள் வயிற்றில் ஒரு வேளை நான் பிறந்திருந்தால் நானும் அழகாக பிறந்திருப்பேன்" என்று கூறுகிறார். சிவாஜியின் தளபதி முதல் படை வீரர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிகின்றனர். சுல்தானின் மனைவி அந்த வீரமகனை கையெடுத்து கும்பிடுகிறாள்.தனது தளபதியை சினந்து கொண்ட சிவாஜி பெண்கள் நம் நாட்டில் தெய்வமல்லவா? இப்படி ஒரு காரியத்திற்கு எப்படி துணிந்தீர்கள்? பொன்னாசை மண்ணாசையை விட கொடியது பெண்ணாசையோ மாபெரும் சாம்ராஜ்ஜியங்களையே தரைமட்டமாக்கியிருக்கிறது. இனி இப்படி ஒரு இழி செயலை கனவிலும் செய்யத் துனியாதீர்கள். முதல் வேலையாக இவர்களை கொண்டு சென்று இவர் விரும்பும் இடத்தில் விட்டுவிட்டு வாருங்கள் என்று கட்டளையிடுகிறார்.

இந்த உலகில் உள்ள மக்கள் பெரும்பாலானோர் இரண்டே இரண்டு வகைகளில் அடக்கிவிடுவார்.


01. கெட்டவர்கள் மற்றும் நல்லவர்கள்.
02. சந்தர்ப்பம் கிடைக்காத நல்லவர்கள்.

எந்த சூழ்நிலையிலும் குணம் மாறாது நல்லவர்களாக இருப்பவர்கள் மிக மிக அரிது. எந்த சூழ்நிலையிலும் குணம் மாறாது, நெறி பிசகாமல் இருப்பவரே உண்மையான நல்லவர் ஆவார். நாம் என்றும் எந்த சூழ்நிலையிலும் நல்லவராகவும் வல்லவராகவும் இருப்போம்.

ம.சாருஜன்
(2017 Com)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலம்



ஆண்டுகள் தான் பல கழிந்து
அடையாளமின்றி போனாலும்
காலங்கள் கடந்தாலும்
மறக்க முடியுமோ - எம்
வட்டக்கச்சி தாயே

சின்னஞ்சிறு வயதினிலே
கல்வி என்னும் உளி கொண்டு
சிற்பமாக செதுக்கினாயே - தாயே
நாம் பள்ளி தனை வந்துள்ளோம்
சிறு பாலகனைப் போல

கட்டடங்கள் மாற்றினாலும்
மரங்கள் தான் வளர்ந்தாலும்
ஆண்டுகள் பல கழிந்தாலும்
வட்டக்கச்சி தாயே அழிக்க முடியுமோ - உன்னை
எங்கள் மனதில் இருந்து

குட்டிக் குட்டிக் குறும்புகள் செய்து
குனிந்து நின்ற நாட்கள் எல்லாம்
உன் அருமை தெரியவில்லை- இன்று
அதற்காக ஏங்குகிறேன்.

பாடசாலை வளாகத்திலே - எமது
வகுப்பறையில் பந்தடித்து
அதிபரிடம் பேச்சு வாங்கி - கலகலப்பாய்
இருந்த நாட்களெல்லாம் - ஏன்
இன்று கனவாகிப் போயினவோ?

நண்பர்களுடன் சிரித்துப் பேசி
சின்னச் சின்ன கோபம் கொண்டு
அன்பாக பேசிடும் ஆசிரியர்கள்
முகம் தான் பார்க்க இனிக் கூடிடுமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் ஆலோசனையை
அலட்சியமாய் எண்ணிய நாட்கள்
அப்போது அதன் அருமை புரியவில்லை
அந்த வாய்ப்பை மீண்டும் தருவாயா?

சிறு பிள்ளையின் மனம் படைத்த - அதிபரை
சின்னச் சின்ன குறும்புகள் செய்து
சினங் கொள்ள வைத்த நாட்களெல்லாம்
சிந்திக்க தோணுகிறதே- இந்த
சிறிய காலத்தில்

பிரியாவிடையில் பிரிந்து சென்ற
நண்பர்களை மீண்டும்
நேரில் காண - எமக்கு
வாய்ப்பளித்த பள்ளியே - எங்ஙனம்
நாங்கள் கைகூப்பி நிற்கின்றோம்.

ந.அனுசா
(2017 Arts)



## பொன்மொழிகள்

உனது எதிரியை அச்சுறுத்தும் வலுவான ஆயுதங்கள் உன் மௌனமும் பொறுமையும் தான்

பிறருக்கு நன்மை செய்ய பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைப் பெண்கள்

**ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க**
உலகின் முதல் பெண் பிரதமர் பாதுகாப்பு பலவீனமான நிலையில் இருந்த நேரத்திலும் ஒரு ஆயுத கிளர்ச்சியை 1971ல் அடக்கி ஒடுக்கியவர்.

**ஷிரந்தி ராஜபக்ஷ**
ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்புலமாக அவர் மனைவி இருப்பாள் என்ற கூற்றுக்கு அச்சொட்டாக பொருந்தும் முதல் பெண்மணி

**சுசந்திகா**
இலங்கையின் தங்கப் பெண்மணி போராடி வெற்றி பெற்ற வீராங்கனை

**சந்திரிக்கா**
தாயாரைப் போலவே பிரதமராகவும் பின்னர் இரண்டு முறை நாட்டின் ஜனாதிபதியாகவும் திகழ்ந்தவர்

**பேரியல் அஷ்ரப்**
இலங்கை அரசியலில் பிரவேசித்த முதல் முஸ்லிம் பெண்மணி

**மாலினி பொன்சேகா**
சிங்கள சினிமாவின் இராணியாகத் திகழ்பவர் ருக்மணிதேவிக்கு பின் பேசப்படும் பெண் நட்சத்திரம்

## *இந்திய உபகண்டம்*

**இந்திராகாந்தி**
இந்தியாவின் இரும்புப் பெண்மணி என்று பெயரெடுத்தவர் சக்தி வாய்ந்த உலகத் தலைவராக திகழ்ந்தவர்.

**சோனியா காந்தி**
இந்து இந்தியாவினால் இத்தாலிய கிறிஸ்தவ பெண்ணான இவரை பாரத மாதாவாக ஏற்றுக் கொள்ள முடிந்தது என்றால் இதைவிட வேறு என்ன சிறப்பைக் குறிப்பிட முடியும்.

**ஜெயலலிதா**
துணிச்சலுக்குப் பெயர் பெற்ற தமிழக அரசியல்வாதி. சளைக்காமல் போராடும் குணம் இவரது விசேட தன்மை.

**கே.பி. சுந்தராம்பாள்**
ஔவையார் என்றால் சுந்தராம்பாள் எனும் அளவுக்கு பாத்திரத்துடன் ஒன்றிப் போன மிகச் சிறந்த கணீர் குரல் பாடகி. பாடிய பாடல்கள் காலத்தால் அழியாதவை.

**அன்னை தெரேசா**
திக்கற்றவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவர்.

**கல்பனா சாவ்லா**
விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெனாசிர் பூட்டோ**
உலகிலேயே ஒரு நாட்டின் தலைவியாகப் பதவியேற்ற முதல் பெண்மணி வசீகரமான தலைவி மட்டுமல்ல நெஞ்சுரம் கொண்டவரும் கூட

**எம்.எஸ்.சுப்புலட்சுமி**
கர்நாடக இசைக்கு புத்துயிரளித்த கீதகோகிலம்

**ஐஸ்வர்யாராய்**
பாம்பாட்டி நாடு என்ற இமேஜை உடைத்து தேவதைகளின் நாடு என்ற எண்ணத்தை உருவாக்கிய ஹிந்தி நட்சத்திரம்

**பத்மினி**
நாட்டியம், நடிப்பு என இரு தளங்களில் பெரும்பங்களிப்பு செய்த நாட்டிய பேரொளி

**சரோயினி நாயுடு**
கவிக்குயில் எனப் பெயர் பெற்ற காந்திஜிக்கு நெருக்கமாக போராட்டக் களத்தில் துணை நின்ற சுதந்திர போராட்ட வீராங்கனை.

**பூலான்தேவி**
சம்பல் பள்ளத்தாக்கு கொள்கைச்காரியாக இருந்து எம்பியாக உயர்ந்த ஒரு சாதாரணப் பெண் துணிச்சலின் சின்னம்.

***உலகெங்கும்***

**மார்கரட் தட்சர்**
விக்டோரியா மகாராணியின் பின்னர் இரும்புச் சீமாட்டி என உலகளவில் பெயர்பெற்ற பிரிட்டிஷ் பிரதமர். போர்க்லண்ட் யுத்தத்தை எதிர்கொண்டவர்.

**வெலன்டினா தெரஸ்கோவா**
அடுப்பங்கரைதான் லாய்க்கு என்ற கருத்தை உடைத்து விண்வெளியில் பூமியை வலம் வந்த முதல் (ரஷ்ய) பெண்மணி

**எலிசபெத் மகாராணி**
மேன்மை, கம்பீரம், கௌரவம், மிடுக்கு என்பவற்றுக்கு அடையாளம். மகாராணி என்றதும் நினைவுக்கு கட்டாயம் வரும் பெயர்.

**ஆன்சாங் சூகி**
பர்மிய இராணுவ ஆட்சிக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் ஜனநாயகப் போராளி

**குரசோனோ அக்கினோ**
மார்க்கோஸ் என்ற பிலிப்பைன்ஸ் சர்வாதிகாரியை மக்கள் புரட்சி மூலம் வெளியேற்றிய வீரப் பெண்மணி. பிலிப்பைன்சின் முதல் பெண் அதிபர்

**ஜீலி என்றூஸ்**
புகழ்பெற்ற ஹொலிவூட் நட்சத்திரம் Sound of Music படத்தில் அவர் ஏற்றிருந்த பாத்திரம் மறக்க முடியாதது

நே.நர்மதா
(2016 உயிரியல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# COMPUTER IN INTERNET IN EDUCATION

Education is an investment for the future. Education is a life long proess that involves different change accourding to the advancement of Science and Technology. Education mores the world forward introduction of computer education and providing the school with internet facilities accelerate the progress of our world. This leap forword planned by the school curriculum developers is praise worthy because with out computer and internet in the new school curriculum we stangnate with out any progress in education.

Education is a process of expioration, engagement, experimentation arriving at conclusions and evacation with the supportof compare the said process can be made fruitpal and xuccessful exploration of new knowledge via internet is quite easy and the whole world is at out fonger tips. The new knowledge we acquire from the internet can used be to do experiments and this can be done with the engagement of a group of Students. Collective activities or group work is essential in active learning knowledge gained by the internet and our previous knowledge on the subject will help us to arrive at better conclusions. This is vwry impoetant in an education similary. Computer is a store of knowledge we can save data we collect for farther use.

Computer is a good supporter in education. It is a good servant and can be a bad master. There fore we have to be careful in handing. The computer especially the internet our knowledge on the computer Literacy broadens our harizons and helps us find good job opportunities with smart salaries. There fore computer and internet not only help in education but also in future propects.


**K.Kanistamery**
**2016 (Arts)**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு நீர்த் தேக்கம்



இ ர ணை ம டு க் கு ள ம் இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கம் ஆகும். இரணைமடு என்ற பெயர் அது இயற்கையாக கனகராயன் ஆறு பண்டைக் காலத்தில் இரு குளங்களாக இருந்ததன் அடிப்படையில் வந்தது. மடு என்பது நீர்த்தேக்கம் சிறந்த ஒரு வண்டல் வெளியான இரணைமடுப்படுகை தொல்லியல் மையமாகவும் உள்ளது. 300 ஆண்டுகள் தொன்மையான தொல்பொருட்களும் இரணைமடுப் படுகையில் உள்ளன.

| | |
|---|---|
| அமைவிடம் | - வடமாகாணம் |
| ஆற்று மூலகங்கள் | - கனகராயம் ஆறு |
| மேலாண்மை முகவை | - Depurtment of Irrigation (tlkhfhz rig) |
| கட்டியது | - 1921 |
| ஆள் கூறு | - A/19 (8.35X6.57) |
| மொத்த நீர் கொள்ளளவு | - 106.500 ஏக்கர் அடி |
| நீரேந்து பரப்பு | - 906 சதுரKm |

## வரலாறு

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இரணைமடுப் படுகையில் கனடா பிரித்தானிய அதிகாரியான சேர் ஹென்றி பாட், 1885 இல் அப்போதைய பிரித்தானிய அரச அதிபர் டேக்கிற்கு இரணைமடு நீர்த்தேக்கத்தை அமைக்கும் ஆலோசனையை முன் வைத்தார்.1866 இல் பிரித்தானிய நீர்ப்பாசன பொறியியலாளரும் தொல்பொருள் தேடலாளருமான ஹென்றி பாக்கர் என்பவர் இரணைமடு நீர்த்தேக்கத்துக்கான திட்டத்தை வரைந்தார். அவரின் திட்டத்தில் இரணைமடுவின் கீழ் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ளலாம். எனக் குறிப்பிட்டிருந்தது. 1900 ஆம் ஆண்டில் நீர்பாசன பிரித்தானியப் பொறியியலாளர் W. பிரவுண் வரும் வரை இரணைமடுக் கட்டுமானம் வரைபு மட்டத்திலேயே இருந்தது. பொறியியலாளர் பிரவுண் அப்போதிருந்த கரைச்சிப் பகுதியில் வாழ்ந்த வெற்றிவேலு என்பவரைச் சந்தித்து இரணைமடுப்படுகை காட்டை முழுமையாக ஆராய்ந்தார். இரணைமடு கட்டுமானத்தை மேற்கொள்ள பெரும் மனித வலு வேண்டும். என்பதற்காக ஒரு குடியிருப்பை நிறுவும் முயற்சியில் முதலில் பிரவுண் ஈடுபட்டார். இவர் தற்போதைய கிளிநொச்சி நகரிலுள்ள "ரை ஆறு" என்ற தேக்கத்தை உருவாக்கி அதன் கீழ் மக்கள் குடியிருப்பை உருவாக்கினார். இந்த "ரை ஆறு" குடியிருப்பு குஞ்சுப்பரந்தன் மக்களைக் கொண்டே இரணைமடு கட்டுமானம் ஈழத்தமிழரின் முழுமையான வியர்வையால் கட்டத் தொடங்கியது.1902 இல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1920 இல் 19 லட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் இரணைமடு முதல் கட்டமாக முழுமையாக்கப்பட்டது. அப்போது இரணைமடுவின் கொள்ளளவு 44 ஆயிரம் ஏக்கர் அடி, ஆழம் 22 அடி.1954ல் இரண்டாம் கட்டக்கொள்ளளவு அதிகரிப்பு நடைபெற்றது. அப்போது கெள்ளளவு 82 ஆயிரம் ஏக்கர் அடியாகும். இதன் மூலம் குளத்தின் நீர் மட்ட ஆழம் 30 அடியாக உயர்த்தப்பட்டது. 3 ஆம் கட்டமாக கொள்ளளவு அதிகரிப்பு 1975 ல் நடைபெற்றது. 1977 ல் மூழுமையடைந்த அக் கொள்ளளவு அதிகரிப்பின் போது இரணைமடுவின் கொள்ளளவு 1 லட்சத்து 6500 ஏக்கர் அடியாக அதிகமானது. ஆழம் 34 அடியாகும்.

1977 இல் இப்பணி முழுமையடைந்தது. 1977 ல் தான் இப்போதுள்ள வான் கதவுகள் கொண்ட தோற்றத்தை இரணைமடு பெற்றது. 227 சதுர மைல்கள் நீரேந்தும் பரப்புக் கொண்ட இரணைமடு கனகராயன் ஆறு, கரமாரி ஆறு என இரு ஆறுகளின் மூலம் நீரைப் பெறுகின்றது. 9 Km நீளம் கொண்டது. இதன் அணை 2 Km நீளமுடையது. இதன் மூலம் 20882 ஏக்கர் நிலப்பரப்பு பயன்பெற்றது. மொத்தம் 32.5 மைல்கள் நீள வாய்க்கால்கள் மூலம் இரணைமடு கிளிநொச்சியை வளப்படுத்துகின்றது. இரணைமடு மூலமே கிளிநொச்சியில் பெருமளவில் குடியேற்றங்கள் நடந்தன. இவ்வாறான பழமைகளைக் கொண்ட இரணைமடு நீர்தேக்கத்தை பேணி பாதுகாக்க வேண்டியதும் அதனை பராமரித்துப் பயன் பெற வேண்டியதும் அனைவரினுதும் தலையாய கடமையாகும்.

**ஜெ. ஜெனனி**
**(2016 உயிரியல்)**

**சிந்தனைக்கு சில**

*கோபம் வாயைத் திறக்கும், கண்களை மூடிவிடும்.*

*அதிஸ்ரக்காரன் வீட்டில் சேவல் கூட முட்டையிடும்.*

*மாறுதல் கண்டவுடன் மாறும் அன்பு அன்பாகாது.*

*நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்

நாணலாக எல்லாவற்றுக்கும் வளைந்து கொடுப்பதால் தமிழனை
இழிவாக நினைத்து விடாதே
தமிழ் காத்து தமிழ் மண் காத்தது
தமிழன் தான் என்பதை
மறந்து விடாதே

தமிழன் என்றால் அடிபணிய பிறந்தவனா? - இல்லை
அடக்கி ஆளப்பிறந்தவன்
குட்டக்குட்ட குனிவதற்கு
எட்டப்பன் கூட்டமல்ல
பண்டார வன்னியன் வழிவந்த மரபடா

சிறுபான்மை என்றாலும் - நாம் ஆண்ட பரம்பரை
எதிரி முன் மண்டியிடுவதா
சிந்தித்து பார் தமிழா

பெட்டிக்குள் அடைக்கப்பட்ட பாம்பா?- தமிழன்
அடங்கி போவதற்கு
அமைதியாக இருப்பதால் - நீ
அலட்சியமாக இருந்து விடாதே

மூச்சிழந்த போதும் - தமிழன் வீரம் இழப்பதில்லை
தமிழனாய் பிறந்து விட்டோம்
புழுவாய் துடிப்பதற்கு அல்ல
புதுயுகம் படைப்பதற்கு
ஈனப்பிறவிகள் முன் தன்மானத் தமிழன்
தலை குனிவதா?
ஒரு போதும் இல்லை.





செ.வினுசன்
(2017 வணிகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடிக்கொடுத்த சுடர்கொடி ஆண்டாள்



பெரியாழ்வார் என்று நாமம் கொண்ட சித்தர் வாழ்த்திருந்தார். பூப்பறித்து மலர்மாலை தொடுத்து பெருமாளுக்கு சூட்டுவது இவரது நித்திய வேலை. தனது நந்தவனத்தில் துளசிச் செடிக்கருகில் ஒரு நாள் மண்வெட்டியால் கொத்திக்கொண்டிருந்தார். அப்போது ஒரு அழகிய பெண்குழந்தை அவருக்குக் கிடைத்தது அன்று கலி 98 ஆவது நாள் வருடம் ஆடி மாதம் சுக்லபட்ஷ சதுர்த்ததியும் பூர நட்சத்திரமும் கூடிய நல்ல நாளாகும். கொள்ளை கொள்ளும் சிரிப்புடன் தவழ்ந்த அக்குழந்தையை தனது மகளாகவே கருதினார்.கோதை என்று பெரிட்டு அளவற்ற பாசத்தோடு வளர்த்தார். கோதை நாச்சியார் என்றும் சூடிக்கொடுத்த சுடர்கொடி என்றும் அழைக்கப்பட்ட ஆண்டாள் பிராட்டியே அக்குழந்தை பூமித்தாயின் திரு அவதாரமாக கருதப்பட்டவர்.

கோதைக்கு வடபெருங்கோயிலுடையான் பெருமையையும் வைணவ தர்ம சாராம்சத்தையும் சொல்லிக் கொடுத்து வளர்த்து வந்தார். விஷ்ணுசித்தர் துளசியானது இயற்கையாகவே அளவற்ற நறுமணத்தோடு இருப்பது போல கோதையும் பெருமானின் மேல் பெரும் பக்தியும், காதலும் கொண்டாள். தன்னை பெருமானுடன் ஒப்புவித்துக் கொள்வாள். கண்ணாடி முன்னால் நின்று தன்னையே அவராக நினைத்துக்கொள்வாள். விஷ்ணுசித்தர் பகவானுக்காக தொடுத்து வைத்திருக்கும் மாலையை தான் முதலில் அணிந்து அழகு பார்ப்பாள். தந்தைக்குத் தெரிந்தால் ஆபத்து என்பதனால் அவர் வீட்டில் இல்லாத நேரத்தில் இப்படி நடப்பாள்.

ஒரு நாள் விஷ்ணு சித்தர் கோதையை மாலையுடன் பார்த்து விட்டார். இதுவரை இவள் சூடிய மாலையை பெருமானுக்குச் சாத்தினோமே அபசாரம் புரிந்தோம் என்று துவண்டு விட்டார். தந்தையின் நிலையை எண்ணி கோதையும் துயரடைந்தாள். தனது தவறை உணர்ந்தார். அன்று ஆலயத்திற்குச் செல்லாமல் வேதனையோடு படுத்து விட்டார். விஷ்ணு சித்தர் தொடுத்து வைத்திருந்த மாலையும் அப்படியே இருந்தது. அன்றிரவு அவரது கனவில் எம்பெருமாள் தோன்றினார். இன்று நீ ஏன் எனக்கு மாலை சூட்ட வரவில்லை? என்று கேட்டார். தனது மகள் மாலையை சூட்டி விட்டதையும் வேறு மாலை தொடுத்து கொணர்வதாகவும் கூறினார் சித்தர். ஆனால் பகவானோ "உனது மகள் சூடிய மாலையைத்தானே" இதுவரை அணிந்தேன். "நீ தொடுத்ததிலும் பார்க்க அதிக நறுமணமுள்ளதாக அது இருந்ததே அது தான் எனக்கு வேண்டும்" என்றார். இதனால் மகிழ்ந்த விஷ்ணுசித்தர் கோதையின் தெய்வீகத்தை எண்ணி வியந்தார். கோதையும் சூடிக்கொடுத்த நாச்சியாராக மார்கழி நீராடி மாதவனை எண்ணி நோன்பு நோற்று திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய பிரபந்தங்களைப் பாடி அருளினார்.

த.நிருஜா
(2016 கலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையடக்கத் தொலைபேசிப்பாவனையின் சாதக பாதக விளைவுகள்

வையகத்தில் வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் விந்தைகள் எண்ணிலடங்கா விஞ்ஞானத்தின் தொழில் நுட்பமும் உலகமயமாதலும் இன்னும் உலகினை இணைத்தும் அதன் எல்லைகளைச் சுருக்கியும் உள்ளன. இவ்வாறானதொரு விஞ்ஞான வளர்ச்சியில் ஒன்று தான் தொலைத்தொடர்பு சாதனங்களில் ஒன்றான கையடக்கத் தொலைபேசி. பல்வேறு பெயர்களினாலும் பல்வேறு வகைகளிலும் பல்வேறு வடிவங்களிலும் மக்கள் மத்தியில் அத்தியாவசியமான ஒரு பொருளாக உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

இன்று பாலர் முதல் விருத்தர் வரையிலும் இதன் பாவனை தெரிந்தவர்களாக பயன்பாட்டை அறிந்தவர்களாகக் காணப்படுகின்றனர். பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உறவினர்கள், உத்தியோகத்தர்கள் என்று அனைவருமே இதன் பாவனையில் நாட்டம் செலுத்துகின்றனர்.

அனைவருக்குமே அத்திவாசியப் பொருள் போன்று விளங்கும் இக்கையடக்கத் தொலைபேசிகளில் கணிப்பொறி, கமரா விளையாட்டுக்கள், இணையம், இசை போன்ற விடயங்களும் அடங்கியிருப்பதனால் பல வகையான பயன்பாட்டுக்கு இதனைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறான கையடக்கத்தொலைபேசிகளினால் சாதக விளைவுகளும் உண்டு. அதே வேளையில் பாதகமான விளைவுகளும் உண்டு. சாதகமான விளைவுகளை நோக்குமிடத்து எவரும் எவ்விடத்தில் இருந்தும் எவ்வேளைகளிலும் எவருடனும் தொடர்பு கொள்ள முடியும்.இது ஒரு பாதுகாப்பும் கூட தாங்கள் எங்கிருக்கின்றோம் என்பதையயும் தெரியப்படுத்த உதவுவதாகும். உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டில் உள்ளவர்களுடனும் இருந்த இடத்தில் இருந்தே தொடர்பு மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பைத் தருகின்றது.

முன்னைய காலத்தில் தொலைபேசியொன்றைப் பெற்றுக் கொள்வதென்பது இலகுவானதல்ல ப்ணச் செலவும் உண்டு. அதனைப் பெற்றுக் கொள்வதில் பல கஷ்ட நஷ்டங்களும் உண்டு. ஆனால் இன்று மிகக்குறைந்த விலையிலும் தவணைக் கட்டண அடிப்படையிலும் யாவரும் எங்கும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் உள்ளதனால் மக்களுக்குச் சாதகமாக உள்ளது. எவரும் தங்கள் கையடக்கத் தொலைபேசியைக் கொண்டு செல்வதனால் தங்கள் குடும்பத்தினருடனோ தங்கள் அலுவலகத்தினருடனோ அல்லது தங்களுக்கு நெருக்கமானவருடனோ உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியும்.

முன்னைய காலங்களில் ஒரு தொலைபேசி அழைப்பை பெற வேண்டுமானால் தபாற் கந்தோருக்குச் சென்று காத்திருக்க வேண்டும். அதற்கான போக்குவரத்துச் செலவு வேறு. ஆனால் கையடக்கத் தொலைபேசிகளோ செலவும் குறைவு போக்குவரத்து அலைவுகளும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளதனால் தங்கள் உறவினர்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. கையடக்கத் தொலைபேசிகளினூடாக செய்திகளை பரிமாறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதனால் தமக்கு வாய்ப்பான நேரங்களில் அதனை வாசித்தறியலாம்.மேலும் சில கையடக்கத் தொலைபேசிகளில் பேசுவோரின் உருவம் வெளிப்படுவது ஓர் இறுக்கமான தொடர்பை இத் தொலைத்தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது.

பல வகையான கையடக்கத் தொலைபேசிகளில் விளையாட்டுக்கள்,இசை என்பனவும் அடக்கப்பட்டிருப்பதனால் சிறந்ததொரு பொழுது போக்குச் சாதனமாகவும் பயன்படுத்தப்படுவதும் ஒரு சாதகமான நிலையேயாகும்.

சில கையடக்கத் தொலைபேசிகளில் இணையம் அமைந்திருப்பதும் பயன் அளிக்கக்கூடியதொன்றாகும். பல கொள்ளைச் சம்பவங்கள், கொலைச் சம்பவங்கள் பயங்கரவாதச் சம்பவங்கள் என்பவற்றை கண்டுபிடிக்கத்தக்க கையடக்கத் தொலைபேசிகள் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

இவ்வாறான பல சாதகமான விடயங்கள் கையடக்கத் தொலைபேசிகளினால் கிடைக்கப்பெற்ற போதும் பல பாதகமான விளைவுகளும் உள்ளன. என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நிலையிலே ஒரே வீட்டில் பலருடைய கைகளில் ஆளுக்கொன்றாக வைத்திருக்கின்ற நிலைமைகளைக் காண்கின்றோம். இதனால் பெருந்தொகையான செலவைத்தாங்கிக் கொள்ள வேண்டிய நிலைமையினால் பொருளாதாரச்சுமை ஏற்படுகின்றது.

பாடசாலைகளில் பலருடைய கைகளிலும் இவை காணப்படுவதனால் அழைப்புக்கள் வருமிடத்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. மேலும் மாணவர்களின் தவறான பாவனைகளால் பாடசாலைகளில் ஒழுங்கீனங்களும் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது. பொது இடங்களிலும் போக்குவரத்துச் சாதனங்களிலும் ஆலயத்திலும் இக்கையடக்க் தொலைபேசிகளின் பாவனை பொதுமக்களுக்குத் தொல்லையைத் தருவதாக அமைந்திருப்பதனைக் காணலாம். இளவட்டத்தினரின் தவறான பாவனைகள் பல பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதோடு வதந்திகள் பரவுவதற்கும் காரணங்களாகவே இன்றைய உலகில் அமைகின்றன.

**சி.விதுசா**
**(2016 வர்த்தகம்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகங்களின் மடியில்

பாடசாலை வீதியின் பக்கம் எங்கிலும் வாகனங்களை நெரிசலும் பஸ்களின் இரைச்சலும் வீதியால் நடை பயணிகள் செல்ல முடியாமல் வழமையான நாட்களை விட அன்று சற்று விறுவிறுப்பாக காணப்பட்டது. இதற்கு காரணம் என்னவென்றால் அன்றைய தினம் ஆசிரியர் தினத்தை அந்தப் பாடசாலை கொண்டாட இருக்கின்றது. பாடசாலையின் வாயிலில் பான்ட் வாத்தியங்களுடன் மாணவர்கள் முன் நிற்க அதனை அடுத்து ஆசிரியர்களை வரவேற்கும் மாணவர்களை ஒழுங்குபடுத்தி நிற்க வைக்க மாணவத் தலைவர்கள் பரபரப்பாக செயற்பட்டு கொண்டிருப்பதை அவதானித்து கொண்டான் சுரேஷ்.

சுரேஷ் அப்பாடசாலையின் பழைய மாணவன் இப்பாடசாலையின் ஆசிரியர்களை வரவேற்பதற்காக மாணவர்கள் தயாராக நின்ற வேளையில் அந்த வீதியை சுரேஷ் கடக்க நேர்ந்தது. அவ்வேளையிலே சுரேஷிற்கு கற்பித்த ஆசிரியர்கள் முகங்கள் தான் படிக்கும் போது பல ஆசிகளை வழங்கிய அதே முகங்களை கண்டு வியந்தான். கடந்த கால பாடசாலை வாழ்க்கையினை ஞாபகப்படுத்த முடிந்தது.

அன்று ஒரு திங்கட்கிழமை பாடசாலையில் சரஸ்வதி பூசை நடைபெற்ற காலப்பகுதி. மறுநாள் எமது வகுப்பு பூசை என அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே நானும் எனது வகுப்பு நண்பர்கள் என ஒரு கூட்டமே குருத்தோலை வெட்டுவதற்காக சென்றிருந்தோம். ஒரு வீட்டில் பல தென்னை மரங்கள் நிற்பதை கண்டு அங்கு சென்று குருத்தோலை வெட்டுவதென அனைவரும் முடிவெடுத்து திருட்டு தனமாக அவர்களின் காணியில் புகுந்து குருத்தோலை வெட்டிக் கொண்டிருக்கும் வேளையில் வெட்டும் சத்தம் கேட்டு வீட்டுக்காரர் வந்து சுற்றி வளைக்க தென்னை மரத்தின் வட்டுக்களில் புகுந்து ஒழிந்து அன்று இரவு மட்டும் பதுங்கி இருந்து இரவோடு இரவாக இறங்கி அனைவரும் அம்மா, அப்பா வீட்டாரிடம் திட்டு வாங்கிய சம்பவங்கள் ஏராளம்.

காலைப் பிராத்தனை ஒன்றின் போது பிராத்தனைக்கு செல்லாமல் மாடியில் இருந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்த வேளை அதிபரிடம் கையும் களவுமாக பிடிபட்டு பாடசாலை மாணவர்களுக்கு முன்னிலையில் அவமானப்பட்டு அடிவாங்கி அன்றைய தினம் முழுவதும் வகுப்பிற்குள் செல்லாமல் வெயிலில் நிற்க வைத்து மறுநாள் பெற்றோரை அழைத்து வரச் சொல்லி பெற்றோரிடம் அடிவாங்கி காயப்பட்ட தளும்புகள் கூட இன்னும் கால்களில் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தினம் ஒன்றிலே என்னை திடீரென பாடுவதற்காக அறிவித்த போது நானும் மேடையில் ஏறி அனைவரையும் பார்த்து பயத்தால் நடுங்கி வேர்த்து விறுவிறுத்து உடுப்புக்கூட நனையும் அளவிற்கு வேர்வை பாடலை படித்த போது பாட்டுக்கூட கவிதையாக வர மாணவர் மத்தியில் கேலியும் கிண்டலும் அவமானங்களும் அதிகரித்து மேடையில் இறங்கிய பொழுதுகளில் ஆசிரியர்கள், நண்பர்கள் கூறிய ஆறுதல் வார்த்தைகள் விழாவின் இறுதியில் ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்கம் போது அவர்களின் சுபாவங்கள் நடத்தைகளுக்கு ஏற்ற வகையில் சந்தோசத்தில் மிதந்த அந்த தருணங்கள் மறக்க முடியாதவை.

ஒவ்வொரு நாளும் பாடசாலையில் ஒரு பிழையாவது செய்து வகுப்பு ஆசிரியரிடமும், அதிபரிடமும் பேச்சு வாங்கிய நாட்கள் எமது வகுப்பு மட்டும் பேச்சு வாங்கி பழக்கப்பட்ட வகுப்பாக அனைத்து ஆசிரியர் மாணவர்களாலும் கூறப்பட்டது.

இவ்வாறு நின்ற இடத்திலேயே ஆசிரியர்களிடம் பேச்சு வாங்க முடியாத நிலை பாடசாலை கதிரை மேசைகளில் இருந்து ஆசிரியரிடம் கல்வி பயில முடியாத நிலை பாடசாலையில் நான் செய்த சேட்டைகள் என்னை கவலைகள் என்னை சூழ பாடசாலையை கடந்து சென்றேன்.

**சிவலிங்கம் தமிழினி**
**(கலை 2017)**

**சிந்தனைக்கு சில**

எவ்விதம் இறந்தான் என்பது கேள்வியன்று, எவ்விதம் வாழ்ந்தான் என்பதே கேள்வி

வீழ்வது வெட்கமல்ல, வீழ்ந்து கிடப்பது வெட்ககரமானது.

கவலைப்படாதீர்கள், கவலையினால் எந்த ஒரு நன்மையும் கிடையாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியில் பயன்படுத்தப்படும் RAM என்பதன் பயன்

கணினியின் முக்கிய பயன்பாடுகளில் ஒன்று பெருமளவிலான தகவல்களை சேமித்து வைத்துக் கொள்ளும் வசதி இவ்வாறாக சேமிக்கப்படும் தகவல் கிடங்கில் இருந்து எந்த ஒரு குறிப்பிட்ட தகவலையும் நொடிப் பொழுதில் எடுத்து விட கணினி உதவுகிறது. இவ்வாறாக தகவலை சேமித்து வைப்பதற்காக கணினிகளில் இரண்டு வகையான் நினைவகங்கள உள்ளன. அவை

தற்காலிக நினைவகம் - Temporary memory area

நிலையான நினைவகம் - Permanent memory area

என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் நிலையான சேமிப்பு கருவிகளாக நாம் Card Disk, Floppy Disk, CD ROM போன்றவற்றைப் பயன்படுத்துகிறோம். இவற்றில் சேமிக்கப்படும் தகவல்களை எப்போழுது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு நிலையானவை. கணனியில் நாம் எந்த ஒரு வேலையைச் செய்ய வேண்டுமென்றாலும் அவ்வேலையைச் செய்வதற்கு என ஒரு மென்பொருளைப் பயன்படுத்த வேண்டுமென்பது உங்களுக்கு தெரியும். எடுத்துக்காட்டாக நான் ஒரு கடிதம் தயார் செய்ய வேண்டும் என்றால் என்னிடம் Ms- Word போன்ற மென்பொருளும் படம் வரைய Paint போன்ற மென்பொருள் என ஒவ்வொரு வேலைக்கும் ஒரு மென்பொருள் அவசியமாகிறது. இத்தகைய மென்பொருள்களும் நமது கணினியில் நிலையாக Hard Disk என்னும் சேமிப்புக் கருவியில் நிறுவி வைக்கப்பட வேண்டும். அப்போது தான் நாம் வேண்டிய நேரத்திற்கு அவற்றை உபயோகிக்க முடியும்.

இத்தகைய மென்பொருள்கள் நாம் ஒரு கட்டளையை கணினிக்கு இட்டால் அது இவ்வேலையை எப்படிச் செய்ய வேண்டும் என்ற தகவல்களைத்தந்து உதவுகிறது. பொதுவாக இத்தகைய மென்பொருள்களைக் Hard Disk என்னும் சேமிப்பு கருவியில் தான் சேமித்து வைக்கிறோம். நாம் தரும் ஒவ்வொரு கட்டளைக்கும் கணினி தேவையான தகவல்களை Hard Disk கில் இருந்து எடுத்துக் கொண்டிருக்க முடியாது. அவ்வாறான அது ஒவ்வொரு கட்டளைக்கு Hard Disk ஐப் பயன்படுத்தி அதனுள் இருந்து எந்த கட்டளைக்கு என்ன செய்ய வேண்டும் என்ற தகவலை எடுத்து அதன்படி நடக்க வேண்டும் என்றால் இது மிக அதிக நேரம் எடுத்துக்கொள்ளக் கூடியது. ஏனெனில் Hard Diskல் தட்டுக்களில் சேமிக்கப்படுகின்றன. அவற்றை எடுப்பதற்கு அந்த தட்டுக்கள் சுற்றப்பட்டு அதில் சரியான தகவல் சேமிக்கப்பட்டுள்ள பகுதியில் சென்று தகவலை எடுத்துத்தர கூடுதல் நேரம் எடுத்துக்கொள்ளும் கணினியும் மிக மெதுவாகவே செயல்படும். இத்தகைய சிரமங்களைத் தவிர்த்தல் பொருட்டு நாம் எந்த மென் பொருள்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோமோ அந்த மென்பொருள் மொத்தத்தையும் வேறு ஒரு மின்னணு பதிவுக் கருவிக்கு தற்காலிகமாக சேமித்து வைத்துக் கொண்டு எப்பொழுதெல்லாம் தகவல் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் கணினி அந்த மின்னணுக் கருவியிலிருந்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது. அத்தகைய மின்னணுக்கருவி நமது கணினியின் Micro Processor களின் வேகத்திற்கு ஈடுகொடுத்து தன்னுள் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களைத் தரவல்லவை. இக்கருவியே RAM என்று அழைக்கப்படுவதாகும்.


ச.தர்சனா
(2016 Com)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# ஒரு விவசாயின் ஏக்கம்



"எணை அம்மா உவர் எங்கட மானத்தை வாங்காமல் இருக்க மாட்டாராமோனை" மோட்டார் வண்டியை விட்டதும் விடாததுமாய் எனது இளைய மகனின் வார்த்தைகள் என்னைக் குறிவைத்தன. "ஏன்டா நடு இராத்திரியில் பே மாதிரி உருவம் எல்லாம் அலைஞ்சு வந்து சிவனே என்றிருக்கிற அந்த மனிசனை வம்புக்கிழுக்கிறாய்" என்னடா பிரச்சினை? என்ன நடந்தது, எனது மனைவியும் தன் பங்கிற்கு கேள்வியை அரக்கினான். "உன்ற மனிசனுக்கு வேலை என்ன? அதுகள் சுளை சுளையா பணம் அனுப்புதுகள் செலவு செய்து கொண்டு சும்மா இருக்கிறதுக்கு குளத்தடி ஆலமரத்திற்கு கீழ இருந்து புலம்பல்" இவருக்கு சிநேகிதங்கள் வேலை ஆமாப் போட்டுக் கொண்டு பக்கத்தால போனவங்கள் கேட்டிட்டு வந்து நக்கலடிக்கிறாங்கள்.

மதியம் மரத்திடியில் சிநேகிதர்களுடன் நான் பேசினதை எவனோ கேட்டுக்கொண்டு போய் பத்தவைச்சிட்டான். என்ற வேதனையைப் புரிய யாருமே இல்லை இப்ப அமைதியாய் இருக்கிறது தான் எனக்கு நல்லது. "ஏன்டா அவா புலம்பினதுக்கு எனக்கும் என்ன சம்பந்தமாடா? "ஓமனை ஓம் உன்ற மனிசன் பெரிய உழைப்பாளி, விவசாயி அவருக்கு படங்களை கொடுத்துக் கொண்டே போகலாம் அந்த விவசாயம் எத்தனை நாள் எங்களுக்கு வயிற்றிற்கு அரை வயிற்றுச்சாப்பாடு போட்டது அவரால் சும்மா இருக்கேலாதாம் ஓடியாடி வேலை செய்த உடம்பாம் சும்மா இரு என்டா சாக்குப்பத்திப் போச்சாம் கால் வயிறு கஞ்சி குடிச்சாலும் குனிஞ்சு நிமிர்ந்து உழைச்சுக் குடிக்கிறது போல வராதாம்" பிள்ளையள் அனுப்பிறதில சாப்பிட கூசுதாம் கேளன் பின்னர் அவனவன் உழைச்சுத்தார அளவில்லையே என்று அழுகிறான் இவருக்கு சும்மா இருந்து சாப்பிட முடியேல்லை ஆடுக்கிக்கொண்டே போகிறான் மகன் சின்ப்பிள்ளை என்று செல்லம் கொடுத்தது தப்பாய்ப் போச்சு காணாததிற்கு தமக்கை தமையன் என்று வெளிநாட்டில் இருந்து காசனுப்ப கண்டபடி பேசவும் வெளிக்கிட்டான் தகப்பன் கிள்ளுக்கீரையாய் போயிட்டன்.

"அட பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுது போல... சரி மோனை நீ வா சாப்பிட" அத்தோடு என்ற மனைவி அமைதியாகி விட்டாள். நாளையிண்டைக்கு தைப்பொங்கல் நான் ஒரு விவசாயி என்ற நிலத்தில் ஏர் எடுத்து மாடு பூட்டி உழுது தான் எங்கள் குடும்பம் வாழ்ந்தது. அது தான் எங்கள் முக்கிய தொழில் எனக்கு ஐந்நூறு பிள்ளைகள் எனது உழைப்பு குடும்ப செலவிற்கே சென்று வீரம் வறுமை தான் யாருக்கில்லை? கஸ்டப்பட்டுத்தான் வளர்த்தனான். எவ்வளவு கஸ்டப்பட்டாலும் படிப்பை நிறுத்தவில்லை. கால் வயிறு கஞ்சி கொடுத்து புத்தகம் வாங்கிப்படிக்க வைத்திருக்கிறன். அப்படி எல்லாம் தாழ் வாய்ப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் இன்று என் பிள்ளைகளுக்கு மதிப்பற்ற ஒன்றாகி விட்டது. இவை எல்லாம் ஒரு நேரம் என்னெடா கூட நின்று பாத்தி கட்டின ஆக்கள் இப்ப சேறு காணதவை போல எட்டி நடக்கினம். எனக்கோ வயிறு பத்தியெரியுது. எனது மூத்த மகளிற்கு வெளிநாட்டில் இருந்து வந்த சம்பந்தத்தால் அடுத்தடுத்த பிள்ளைகளும் வெளிநாடு செல்லும் அளவிற்கு எங்களுக்கு நிலமை மாறி விட்டது. மகிழ்ந்தேன் எங்கள் வாழ்க்கை முறை மாறியது சாதாரண மண் குடிசையில் வாழ்ந்த நாங்கள் 5 : 6 அறையில் வீடு கட்டினோம். இன்னும் மகிழ்ச்சி தான். ஆனால் செல்வம் வந்த உடன் விவசாயம் ஏன் இனி அதை விட்டு விடச்சொல்லி என் பிள்ளைகள் சொன்ன போது நான் ஆடிப்போய்விட்டேன். அவர்களது அறியாமையை தீர்த்து வைக்க என்னால் முடியவில்லை. விவசாயம் செய்து சாப்பிடிற அளவில் அவையில்லையாம். பிள்ளையள் வெளிநாட்டில் தகப்பன் வயலுக்கு என்று சனம் பழிக்குமாம் சனத்திடம் செல்வம் வந்த உடன் விவசாயம் அவர்களிற்கு கசந்தது எப்படி...? விவசாயி என்பவர் தாழ்வானவனா? என்னைப் போல் விவசாயிகள் சேற்றில் இறங்கி ஏர் பிடிக்காவிடின் எந்த செல்வந்தனும் உயிர் வாழ முடியுமா? அதை உணர மறுக்கின்ற பிள்ளைகள்.

எங்கள் ஊரில் இது தற்பொழுது நாகரிகமாகி விட்டது. குடும்பத்தில் ஒருவராவது வெளிநாட்டில் இருக்கின்றார்கள். அவர்களது பணம் இங்குள்ளவர்களை தலைகால் தெரியாது ஆட வைக்கிறது. நான் என்ற உரப்புடன் மோட்டார் வண்டியிலே சுற்றித்திரியும் என் இளைய மகனிற்குக் கூட நான் விவசாயம் செய்வது கௌரவக்குறைவாய் போய்விட்டது. இதை எடுத்துச் சொல்ல என் மனைவியோ...? ஏனப்பா நீங்க உழைச்சு சாப்பிடிற நிலையில் யாரும் இல்லை வயசு போன நேரத்தில் ஏன் கஸ்டப்படுறியள் பேசாமல் உங்கின படுங்கோ.

ாரிசி பற்றிப்போனது என் நிலம் மட்டும் அல்ல என் மனசும் தான் அறியாமையில் மூழ்கியிருப்பது எழுதப்படிக்கத் தெரியாத நானா.....? இல்லை நாலொழுக்கம் படித்து இன்று நல்ல நிலையில் இருக்கும் என் பிள்ளைச் செல்வங்களா எனக்கு புரியவில்லை. தைப்பொங்கல் பொங்க தடல் புடலாய் ஆயத்தங்கள் நடக்கின்றன எதற்கு..? ஒரு உண்மை விவசாயின் உணர்வுகளைப்புரிய மறுக்கும் இவர்கள் வெறும் சம்பிரதாயத்திற்காக பொங்கல் கொண்டாடி என்ன பயன்..? என்னுள் பெரு மூச்சுத்தான். இதை பல தடவை இவர்களிற்கு புரியவைக்க முயன்றும் என்னால் முடியவில்லை. பல தடவை அவமானப் பட்டுப்போனேன். இன்று என் மகன் வந்து பேசிய தொனியப் பார்த்தீர்கள் தானே? விவசாயம் பற்றி நான் கதைத்தால் என் நிலை இது தான்.....?? நாலு பேருக்கு அன்னம் போடும் ஒரு விவசாயியின் வீட்டிலிருந்து அரிசி வாங்க கடையேறும் மனைவியும், பிள்ளைகளையும் காண்கையில் எப்படி ஒரு விவசாயியின் மனதில் மகிழ்ச்சி பொங்கும்? இந்த தைப்பொங்கலை எப்படி நான் மனம் மகிழ்ந்து கொண்டாட முடியும். எனது சொந்த நெல்லை அறுத்து அதில் பொங்கிப் படைப்பதில் உள்ள சுகம் இனி என்னைச் சேருமா ஏக்கம் தான் மிச்சம்...??

**ஆக்கம்**

**நே. ஜதுஷனா (2017 Com)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# English a World Language

For over hundred years, people have talked about English as world language. Nowadays people only argue about whether it is the world language. It is the most widely spoken second language in the world.

Why is English so Important today? Why is it learned by so many people? Is it because they want to go abroad? or to listen to news in English. It is learned because it is now the language of international communication, Do you known that 80% information stored in competes is written in English? Most jobs in international companies and organization are only given to people who speak English.

English is also learned because people need the language for education more educational material is available in English than in any other language many countries, like kenya, button, and Nadine use English as the medium of education in their schools other countries use English in this universities as many textbooks are written in English.

**J. Shanujan**
**(2017 Bio)**

**சிந்தனைக்கு சில**

என்றென்றும் கடவுளையே திடமாக நம்புங்கள்

இறந்த காலத்தைப் பற்றி புலம்பாதே எதிர்காலத்தைப் பற்றி சிந்தி.

விடியலைக் காணவேண்டுமென்றால் வாழ்க்கையோடு போராடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையுடன் சவால்

அளவுக்கு மிஞ்சிய வெப்பம், வறட்சியால் விளை நிலங்களின் பாதிப்பு உற்பத்திகளின் வீழ்ச்சி, பொருளாதார முடக்கம் என ஆரம்பிக்கும் இன்றைய உலக சூழல்மாசடைதல் விளைவுகளை மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

காரணம் என்னவெனில் புவி அளவுக்கு மீறிய வகையில் தனது தன்மையில் இருந்து மாறி வருகின்றமையே இன்று பாரிய பிரச்சினையாக அமைந்துள்ளது. இன்று புவி வெப்பமாதல் தன்மை மிக அதிகமாகி உள்ளது. எனினும் நவீனத்துவமும், விஞ்ஞானமும் தனது ஆராய்ச்சிகளை நிறுத்திக் கொள்வதாகத் தெரிவதில்லை.

புவி வெப்பமடைதல் என்ற காரணம் தொடர்பில் பகுத்தறிவு ரீதியாக சிந்திக்கும் போதே பல காரணிகளை முன்வைக்க முடியும். குறிப்பாக புவி வெப்பமடைதலின் மூலமாக ஏற்படும் பசுங்குடில் வாயுவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணம் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட இன்றைய நவீன நாகரிக வளர்ச்சியும் அபிவிருத்தி மற்றும் பொருளாதார காரணிகளை அடிப்படையாக வைத்து முன்னெடுக்கப்பட்டு வரும் காடழிப்பு மற்றும் நிலப்பயன்பாடுகளுமே ஆகும்.

குறிப்பாக கூறுவதாயின் வளர்ச்சி மேம்பாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கையாளப்படும் பொருளாதார போக்கும் செயற்பாடுகளுமே முக்கிய காரணமாகும். 20 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொழிநுட்ப புரட்சி ஆரம்பமாகியது. அதன் மாற்றம் உலகின் வல்லரசு போட்டிகளின் தொழில்த்துறை வளர்ச்சி கண்ட நாடுகள் நவீனத்துவ நாடுகளின் போட்டியில் உலகில் இயற்கை தன்மைகள் அழிக்கப்பட்டு சூழலில் மீதான அக்கறை குறைந்ததே காரணம் ஆகும்.

அதே போல் கரியமில வாயு மற்றும் ஏனைய பசுமை இல்லாத வாயுக்களின் பரவல் வளி மண்டலத்தில் அதிகரித்தமை புவி வெப்பநிலை அதிகரிக்க மிக முக்கிய காரணமாகும். உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற நோக்கம் இலாபத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார செயற்பாடுகள் மற்றும் அரசியல் ஆதிக்கம் இன்று இயற்கையை மீட்டெடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த பயணத்தின் போக்கில் ஏற்பட்டுள்ள உலக மயமாதல் இன்று உலகத்தையே அழிக்கும் கட்டத்தில் வந்து நிற்கிறது.

குறிப்பாக கடந்த நூறு ஆண்டுகளில் உலக சராசரி வெப்ப நிலையானது 0.0073 டிகறி செல்சியஸ் அளவில் உயர்ந்துள்ளது. அதே போல் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் 2-5 டிகிறி செல்சியஸ் வரையில் உலகம் சராசரி வெப்பநிலை உயரக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல் கடல் நீர் மட்டம் இன்று 1.9 ml சராசரி விகிதத்தில் உயர்ச்சி அடைந்துள்ளது. உலகில் மத்திய கிழக்கு மற்றும் தெற்கு நாடுகள் அதிக வரட்சியை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. இந்த பரவல் உலகம் முழுவதும் தாக்கம் செலுத்தும் காரணியாக மாறியுள்ளமை முக்கிய அம்சமாகும். விவசாய நிலங்கள், நீர் நிலங்கள் வறட்சி கண்டுள்ளன. சராசரி மழை வீழ்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. இயற்கை அனர்த்தங்கள் அதனுடன் கூடிய நோய்கள் என பரவ ஆரம்பித்துள்ளன. இன்று மக்கள் இயற்கையுடன் தனது போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஆனால் நவீன வளர்ச்சிப் போக்கு தொடர்பில் இன்று மக்கள் மத்தியில் தோன்றிள்ள அம்சமானது 1970 களில் இருந்தே சர்வதேச அளவில் கேள்வியாக உள்ளது. உலகம் கையாளும் நவீன வளர்ச்சிப் போக்கு காரணமாக எதிர்கால சமூகம் பாதிக்கப்படுமா என்பது அப்போதில் இருந்தே கேள்வியாக உள்ளது. குறிப்பாக 70 களில் நடைபெற்ற ஸ்டொக்ஹோன் ஜொகனஸ் பேர்க் மாநாடுகளில் இக்கேள்விகள் விவாதமாக முன்வைக்கப்பட்டுள்ளன.

1980 களில் உலக நாடுகள் இந்த நிலமை தொடர்பில் உலக நாடுகள் கவனம் செலுத்த ஆரம்பித்தமை புவி வெப்பமாதல் மற்றும் பருவ காலநிலை மாற்றம் தொடர்பில் சிந்தனை ஓரளவேனும் கவனத்தில்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பின்னர் காலநிலை மாற்றம் தொடர்பாக சர்வதேச அமையம் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து முதல் காலநிலை மாநாடு 1992 ம் ஆண்டு பிரேசிலில் ரியோடி ஜெனிரோ புவிமாநாடு நடை பெற்றது. இந்த மாநாட்டில் புவி வெப்பமடைதல் காலநிலை மாற்றங்களும் உறுதி செய்யப்பட்டன.

அன்றிலிருந்து சர்வதேச அமையங்கள் பல்வேறு காலநிலை மாநாடுகளை நடத்தித் தான் வருகின்றன. ரியோவில் இருந்து விமா இப்போது பாரிஸ் மாநாடு வரையில் காலநிலை தொடர்பிலான மாநாடுகள் நடந்துள்ளன. ஆனால் புவி வெப்ப மாதலை தடுக்க எவ்வாறான காரணிகள் கைகொடுக்கும் என்ற தீர்மானம் ஒன்றை இன்று வரை எட்டவில்லை.

ஏனெனில் இன்றைய பொருளாதார போக்குகளும், நாடுகளுக்கிடையிலான சுயநலப் போக்கும் பொருளாதார வர்த்தக ரிதியிலான பன்னாட்டு நேரத்தில் அழுத்தங்கள் மற்றும் அரசியல் சுயநலப்போக்கும் காலநிலையை சீர்நிலையில் பேண முடியாது நிலமை ஏற்பட காரணமாகும்.

அதே போல் இன்று வல்வரசு நாடுகளும் வளர்ந்து வரும் நாடுகளும் முகம் கொடுக்கும் மிக முக்கியமான பிரச்சினையாக சுற்றுச்சூழல் மாசு பிரதான காரணமாக மாறி உள்ளது. காபன் குறைப்பீடு கொண்ட சூழலை உருவாக்கும் முயற்சிகளை அனைவரும் எடுத்து வரும் நிலையில் காலநிலை மாநாடுகளை கூட நடத்த வேண்டிய நிலை உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 டிசம்பர் மாத ஆரம்பத்தில் ஐந்து நாடுகளின் சர்வதேச காலநிலை மாநாடு பிரான்சில் ஆரம்பமாகியது. இந்த மாநாட்டில் உலக நாடுகள் அனைத்தும் பங்குபற்றி தத்தமது நாடுகளின் சூழலை பாதுகாக்கும் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்துள்ளனர். சுமார் இரண்டு வாரங்களாக நடைபெற்ற இந்த மாநாட்டின் போது உலகின் காபன் மாசு வெளியீடுகளை குறைப்பது தொடர்பில் உலக வெப்பமாதலை இரண்டு பாகை செல்சியஸ் வரையில் வரையறை செய்வது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் காலநிலை மாற்றம் தொடர்பில் உதவக்கூடிய புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தியும் புதுப்பித்தல் நடவடிக்கை என்னும் திட்டத்தின் கீழ் ஐந்து வருடத்திற்கும் அதிகமான காலப் பகுதியில் மேற்கொள்ளப்படும் மாசு ஏற்படாத சக்தி வளங்கள் தொடர்பில் ஆராட்சிகளை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

அதே போல் மாசற்ற சூழலை காப்பாற்றும் நோக்கில் உலகில் வல்லரசு நாடுகள் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதுடன் உலக வங்கிகள் இணைந்த நிதி ஒதுக்கீடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே போல் மேற்படி நாடுகளில் புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்கள் போக்குவரத்து துறையிலான மாசு வெளியீடுகளை கட்டுப்படுத்தல் கழிவு முகாமத்துவம் மற்றும் நகரங்களின் காபன் வெளியீடுகளை குறைத்தல் என்பன தொடர்பிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் கனியசக்தி வளங்களை பயன்படுத்தும் நாடுகளுக்கு காபன் வெளியீடுகளை குறைக்க நிதி வளங்கவும் உலக வங்கி தயாராகி உள்ளது.

அத்தோடு இந்த மாநாடு நடைபெற முன்னரே உலகமெங்கும் பல பகுதியில் பல ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் இடம் பெற்றது முக்கிய விடயமாகும். அதாவது மேற்படி காலநிலை மா நாட்டின் போது உலக தலைவர்கள் அனைவரும் ஒருமத்த வகையில் காலநிலையை பாதுகாக்கும் வகையில் உறுதியாக உடன்படிக்கை ஒன்றை எட்ட வேண்டுமென மக்கள் வலியுறுத்தினர்.

ஆகவே மக்கள் இன்று தூய்மையான ஒரு சூழலை நோக்கிய போராட்டத்தை ஆரம்பித்துள்ளமை தெளிவாக வெளிப்படுகிறது.எம்மால் நவீனத்துவ பாதையில் விஞ்ஞான பயணத்தை ஆரம்பித்தாலும் இயற்கையை எதிர்த்து பயணிக்க முடியவில்லை என்பது வெளிப்பட்டு நிக்கிறது.

தொழில் அபிவிருத்தி நாகரீக மாற்றம் நவீன கண்டுபிடிப்பில் முன் நிலையில் வளர்ச்சி கண்டு வரும் நாடான சீனா இன்று காற்று மாசுபாட்டில் பாரிய சிக்கலை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. காற்று மாசுபாடு அதிகரித்துள்ள காரணத்தால் சீனா மக்களுக்கு மூன்றாவது தடவையாக சிகப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. குறிப்பாக வாகனப் பயன்பாடு அதிகரித்துள்ளதோடு தொழிற்சாலைகளின் செயற்பாடுகளும் பலமடைந்துள்ள நிலையில் பல நகரங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான காற்று மாசுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள நகரங்களில் வாழும் மக்கள் சுத்தமான காற்றை சுவாசிப்பதில் பாரிய சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றன.

இதனால் தலைநகர் பீஜிங்கில் பாடசாலைகளுக்கு விடுமுறை விடுக்கப்பட்டதுடன் போக்குவரத்து கட்டுப்பாடு கட்டுமானப்பணிகளில் தடையும் விதிக்கப்பட்டது. எனினும் இடர்பாடுகள் காரணமாக அந்த தடை நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இருந்தும் மீண்டும் இரண்டாவது தடவையாகவும் அதே எச்சரிக்கை விடுக்கப்பட்டது.சீனாவில் மக்களினால் தூய்மையான காற்றை சுவாசிக்க முடியாத காரணத்தால் மீண்டும் மூன்றாவது தடவையாகவும் சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு மக்களை அவதானமாக இருக்கப்படியும் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் மக்களின் பிரச்சினையை சாதகமாக பயன்படுத்திய சீன நிறுவனம் ஒன்று லேக் லூயிஸ் மலைத்தொடரில் சுத்தமான காற்றை போத்தலில் அடைத்து பொது மக்களுக்கு சுவாசிக்ககூடிய செயற்கை சாதனங்களை வழங்கி வருகின்றது. சீனாவில் மட்டுமல்லாது கனடாவில் இருந்தும் தூய்மையான காற்றைக் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகிறது.

எனினும் சீனாவில் இந்த சூழல் மாசுபாடு நிலமை வெறுமனே சீன எல்லையுடன் மட்டுப்படாது உலகின் தொழில்த்துறை மற்றும் வளர்ச்சி கண்டுவரும் அனைத்து நாடுகளுக்கும் முக்கிய எச்சரிக்கையாகும். வெறுமனே அபிவிருத்தி பணம், நவீனத்துவம் என பயணிக்கும் நாடுகள் இன்று தமது சூழலை திரும்பி பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோல் உலகில் பல்வேறு நாடுகள் தமது தொழில் வளர்ச்சியின் மூலமாக தமது இருப்புக்களை வைத்து வரும் நிலையில் உடனடியாக தொழிற்சாலை தடைகளையோ அல்லது மாற்று நடவடிக்கைகளையே மேற்கொள்ள முடியாது. ஒரு வேளை இந்த முயற்சியின் மூலமாக நம்முடைய பூமி ஓட்டு மொத்த அழிவிலிருந்து தப்பினாலும் கூட எதிர் காலத்தில் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு இதன் அழிவுகளை நாம் அனுபவித்து வர வேண்டும்.

ஏனெனில் நாம் ஏற்கனவே வெளியிட்டதும் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கும் காபன்டை ஒக்சைட் வாயுவானது இன்று பல ஆண்டு காலத்திற்கு இந்த பூமியில் நீடித்திருக்கும் நிலமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறான நிலையில் எமது மாற்று நடவடிக்கைகள் அனைத்தும் நிண்ட காலத்திற்கு எம்மை பாதுகாக்கும் வகையில் அமையாது.

இன்றைய சூழலில் நாம் தற்காலிக தீர்வை நோக்கிய பயணத்தை பழகியுள்ளோம். உணவு பழக்க வழக்கம் முதற் கொண்டு மருத்துவம், வாழ்க்கை முறை வரையில் நாம் தற்காலிக பாதுகாப்பை மட்டுமே மேற்கொண்டு வருகின்றோம். அந்த தற்காலிகம் இன்று இயற்கையுடனான போராட்டத்தை பழகிவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த பழக்கமே இன்று எம்மை அழிவின் விழிம்பில் வைத்துள்ளது. என்று கூறுவது நியாயமான கூற்றாகும். நகர அபிவிருத்தி என்ற் பெயரில் விடும் தவறுகள் இறுதியில் வெள்ளப்பெருக்கு நிலமைகளில் பாரிய சேதங்களை ஏற்படுத்தியமை 2015 டிசம்பரில் இந்தியாவில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நல்ல உதாரணமாகும்.

அதே போல் அணு ஆயதப் பரிசோதனைகள், நவீன ஆயுத பரி சோதனைகள் என்பன காரணமாக சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம் மற்றும் நவீன அறிவியல் கண்டு பிடிப்புக்களினால் ஏற்படும் மாற்றங்கள் என்பன இன்று உலகளாவிய ரீதியில் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தி உள்ளது. அதன் விளைவுகளையும் இன்று மக்களால் அனுபவிக்க முடிகிறது.

அதே போல் பயங்கரவாதம் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலமாகவும் வெடிகுண்டு தாக்குதல்கள் மூலமாகவும் ஏற்படும் மாசுபாடும் இரசாயன கலப்புக்கள், காலநிலைக்கு முரணான விவசாய செயற்பாடுகளும் முழுமையாக மக்களை பாதிக்கும் வகையில் தான் அமைந்துள்ளன. ஆகவே எந்தப் பக்கம் நோக்கினாலும் இறுதியில் பாதிப்பு எம்மையே வந்து சேரும்.

ஆகவே மக்கள் இப்போதாவது தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். தாம் இயற்கையுடன் முரண்பட்டு அல்லது போட்டிபோட்டு வெற்றி கொள்ள முடியாது. இயற்கையை எமது நிலங்களையும் நீர் நிலைகளையும் பாதுகாப்பதன் மூலமாகவே எமது சூழலை பாதுகாக்க முடியும். அதை மக்கள் தெளிவாக விளங்கிக் கொண்டு இப்போதில் இருந்தாவது சூழலை பாதுகாக்க பழகிக் கொள்ள வேண்டும்.


சாதாரணமாக ஒரு மரத்தை வெட்டுவதில் இருந்து ஆரம்பிக்கும் சூழல் மாசுபாடு இறுதியில் மிகப்பெரிய விளைவுகளில் வந்து முடிகிறது. புவி வெப்பமாதல் அதிகரித்து வரும் நிலையில் இயற்கை வாயுவின் அதிகரிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எமது சமுதாயத்தை பாதுகாக்க வேண்டும். இன்று சீனாவில் ஏற்பட்டுள்ள நிலைமை போன்றே அந்த மக்கள் போத்தல் காற்றை சுவாசிக்கும் நிலைமை எதிர்காலத்தில் உலகில் வாழும் அனைத்து மக்களும் செயற்கை காற்றை சுவாசித்து வாழக்கூடிய நிலைமையே ஏற்படும்.

ஆகவே இன்று நாம் சூழலை பாதுகாப்பதே எதிர்காலத்தில் தூய்மையான சூழலை பராமரிக்க அடிப்படையாக அமையும். ஒவ்வொரு மனிதனும் இயற்கையை நேசித்து பாதுகாத்தால் மட்டுமே எதிர்காலம் பசுமையானதாக அமையும் அதை விடுத்து விஞ்ஞான போக்கில் இயற்கையுடன் மோதிக் கொண்டால் இறுதியில் வெல்லப் போவது என்னவோ இயற்கையே. ஆகவே தொடர்ந்தும் இயற்கையுடன் மனிதன் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

**தே. டினோஜன்**
**(2016 கலைப்பிரிவு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒலிம்பிக் வரலாறு

25ம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் கவிதை படைத்த கிரேக்க கவிஞர் மன்டார் ஒலிம்பிக் போட்டிகளின் பெருமையை இவ்வாறு கூறியுள்ளார்.இந்தக் கவிஞர் கூறியதை விட ஒலிம்பிக் போட்டிகளின் தொன்மை பெருமையை வேறு எவராலும் கூற முடியாது இன்று நேற்றல்ல 27 நூற்றாண்டுகளுக்கு முன்னர் தொடங்கியது. ஒலிம்பிக் போட்டிகள் என்றால் நம்ப முடிகின்றதா? இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 776 ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க நாட்டின் ஒலிம்பியா என்ற இடத்தில் ஒரு நாள் போட்டியாக ஒலிம்பிக் போட்டி துவங்கியது. கிரேக்க கடவுளாக கருதப்படும் “ஜீசியஸ்” மற்றும் “ஹேரா” ஆகியோரை வழிபட்டு அவர்களுக்கு அர்ப்பணிக்கப்படும் ஒரு விழாவாக ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்டது. அந்தக் காலத்தில் போர்க்கலையாகவும் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் கேள்விக் குறியாகவும் இருந்த சிலவற்றை தொகுத்து விளையாட்டுப் போட்டிகளாய் மாற்றி முதல் ஒலிம்பிக் போட்டி நடத்தப்பட்டதாக பழைய வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற கிரேக்க உலகத்தின் ஒவ்வொரு நகரிலிருந்தும் ஏராளமான வீரர்கள் ஒலிம்பியா நகரத்தில் குழுமியிருந்தனர். போட்டியில் வென்ற வீரர்களுக்கு அந்தக் காலத்தில் வெற்றியின் சின்னமான கிரீடம் அணிவிக்கப்பட்டு அந்த கிரீடத்துடன் பெருமையாக தங்கள் நகர்களுக்கு திரும்பியுள்ளனர். அவர்களையே ஹீரோ என்று அழைத்துள்ளனர். ஒலிம்பிக் போட்டியில் ஆண்கள் மட்டுமே பங்கேற்றனர் திருமணமான பெண்கள் போட்டியில் பங்கேற்கவோ பார்க்கவோ அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பணிப் பெண்கள் அனுமதிக்கப் பட்டனர். அங்கிருந்த டிமட்டர் ஆலயத்தின் தலைமை பெண் பூசாரி 2 வது உயர்ந்த இருக்கையில் அமர்த்தப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் பெண்கள் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை என்றாலும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணையாக பெண்கள் மட்டுமே பங்கேற்ற அவர்களுடைய திறனை வெளிப்படுத்த ஹேரேயா போட்டிகள் என்று தனியாக நடத்தப்பட்டது. கிரேக்க கடவுளான ஜீயசின் மனைவி ஹேரா பெயரால் இந்த போட்டிகள் நடாத்தப்பட்டன.அன்றைய ஒலிம்பிக்கில் மல்யுத்தம், ஓட்டப் பந்தயம், ஈட்டி எறிதல், எடை மிகுந்த கல்லை எறிதல் ஆகியவற்றுடன் இன்று வரை பிரபலமாக இருக்கும் மரதன் போட்டி என்று அழைக்கப்படும் நீண்ட தூர ஓட்டப் பந்தயமும் நடந்துள்ளன. முதலில் ஒரு நாள் மட்டுமே நடத்தப்பட்ட போட்டியாக இருந்த ஒலிம்பிக் பிறகு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பல நாள் போட்டியாக நடாத்தப்பட்டுள்ளது. காலப்போக்கில் ஒரு அடையாளமாக 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்போட்டிகள் நடத்தப்பட்டதாக கிரேக்க வரலாறு கூறுகிறது.


**யோ.மிஷாளப்சினா**
(2017 Arts)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாதனங்களில் தவறு கிடையாது பயன்படுத்தும் முறைதான் தவறு



உலக மாற்றங்களுக்கு அமைய தற்கால மாணவர் சமூகமும் மாறி வருகின்றது. இந்த வகையில் அவரவர் பார்வைக்கும் பயன்பாட்டிற்கும் ஏற்றாற் போல் இலத்திரனியல் சாதனங்கள் மனித வாழ்வின் வளர்ச்சிக்கும் கல்வியின் விருத்திக்கும் படிக்கற்களாக அமைந்திருக்கின்றன. அதேவேளை இவை இன்னொரு வகையில் தடைக்கற்களாகவும் காணப்படுகின்றன. இவற்றை நாம் பயன்படுத்தும் போது வளர்ச்சியும் தடையும் ஏற்படுகின்றன.

சரியாகவும் முறையாகவும் இவற்றை பயன்படுத்தும் போது வளர்ச்சி ஏற்படுகிறது. தவறாகப் பயன்படுத்தும் போது அல்லது உரிய முறையில் பயன்படுத்தத் தவறும் போது வளர்ச்சிக்குப் பதிலாகத் தடையும் சீரழிவும் ஏற்படுகின்றன. இதனால் இந்தச் சாதனங்களில் தவறு கிடையாது. அவற்றைப் பயன்படுத்தும் நமது முறையில் தான் சரியும் தவறும் உள்ளது. இதை இன்னொரு வகையில் சொன்னால் கருவி முக்கியமானதல்ல. அதைக் கையாளும் முறையே முக்கியமானது என்று குறிப்பிடலாம்

சிந்தனை வளர்ச்சியில் உருவாகிக் கொண்டிருக்கும் புதியனவற்றின் வருகையின் போதெல்லாம் எப்போதும் இத்தகைய ஒரு நேர்மறை - எதிர்மறை என்ற இருநிலைப்பட்ட போக்கு ஏற்படுவது இயல்பு. இதையே பொதுவாக எங்கள் காலம் போல இந்தக் காலம் இல்லை என்று மூத்தோர் சொல்வதுண்டு.



இதற்குக் காரணம் இந்தப் புதிய சிந்தனையின் உருவாக்கங்கள் உண்டாக்கும் சமூக விளைவுகளேயாகும். இவற்றைச் சரியாகப் பயன்படுத்தும் சமூகங்கள் வளர்ச்சியை நோக்கிச் செல்கின்றன. தவறாகப் பயன்படுத்தும் சமூகங்கள் வீழ்ச்சியடைகின்றன. மனித வாழ்க்கை முன்னகர்ந்து செல்வதற்கான வழிகாட்டியாக இருப்பது நவீன யுகத்தின் முதன்மைச் சாதனமான ஊடகமே. இது தொடர்பாடல் யுகம் என்று சொல்லப்படுவதுண்டு. ஆகவே புதிய சாதனங்களை புதிய ஊடகங்களைப் பயன்படுத்தாமல் எதிர்காலச் சமூகமும் வாழ முடியாது.

எனவே நவீன யுகத்திற்கு ஏற்ப நாமும் எமது இளம் சந்ததியினரும் மாற வேண்டியது உலக ஒழுங்கின் நியதியாகும். இதற்கு ஏற்றாற் போல இளம் தலைமுறையினர் மாறி வந்தாலும் இந்த மாற்றமானது ஆரோக்கியமான கல்வி விருத்திக்கு வித்திட்டுள்ளதா என்ற கேள்வியும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன உலகை உள்ளங்கையில் அடக்கும் அளவிற்கு நவீன இலத்திரனியல் சாதனங்கள் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்றன. நவீன யுகத்தின் உருவாக்கமான இலத்திரனியல் ஊடகங்கள் ஆட்கொண்டு அடக்கி ஆளும் அளவிற்கு அதன் வருகையும் பயன்பாடும் வியாபித்துக் காணப்படுகின்றன.

இதனால் இவை பெற்றோர், ஆசிரியர்கள், கல்வித்துறையினருக்கு பெரும் சவாலாக வளர்ந்து உருவெடுத்துள்ளன. தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி, வானொலி, கையடக்கத் தொலைபேசி என்று வியத்தகு விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்களைக் கண்டு மகிழ்வதற்குப் பதிலாக சில சந்தர்ப்பங்களில் அச்சமடைய வேண்டியுள்ளது.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போல இவற்றைக் கையாளும் முறையினால் பாரிய பிரச்சினைகளே அதிகமாக உருவாகின்றன. ஆகவே இதற்குச் சரியான புரிதலும் முறையான வழிகாட்டலும் அவசியமாகிறது. மாணவர்களின் கல்விக்குக் கற்றல் சூழலுக்கும் வாய்ப்பாக விளங்கும் இலத்திரனியல் ஊடகங்கள் அவர்களுடைய கற்றலுக்கு படிக்கற்களாக அமைவதற்கு ஏற்றவாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும். அவற்றை அவ்வாறான நோக்கில் மாணவச் சமூகம் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்களைச் செய்வது அவசியம். இத்தகைய நெறிமுறை ஒவ்வொரு குடும்பத்திற்கும் பொருந்தும்.

ஏனெனில் இந்தச் சாதனங்கள் அல்லது இவ்வாறான ஊடகங்கள் பல விடயங்களைக் கற்பதற்கும் தேடிப் பார்ப்பதற்கும் இன்னும் பல சௌகரியமான காரியங்களுக்கும் ஏணிப்படிகளாக அமைகின்றன.எனவே இவற்றின் பெறுமதியினை நாம் முதலில் புரிந்து கொள்வது அவசியம். ஊடகங்களின் பயன்பாட்டை வளர்ச்சியடைந்த சமூகங்கள் முறைப்படி ஒழுங்கமைத்துள்ளன. இதன்படி அவை ஊடகமானது அல்லது இவ்வாறான சாதனங்களானவை முதலில் தகவலை வழங்குபவையாக இருக்க வேண்டும். அதாவது இவற்றிலிருந்து தகவல்களைகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக நாம் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டாவது இந்தத் தகவலின் வழியாக கற்றல் நிகழ வேண்டும். அதாவது அறிவூட்டல் நடக்க வேண்டும். மூன்றாவதே களிப்படைதலாகும். அதாவது பொழுது போக்குக்கும் மகிழ்ச்சிக்குமானது. இதை நாம் வரிசைப்படுத்தினால்

01. Information
02. Education
03. Entertainment என வரும்

ஆனால் இந்த அடிப்படையை நமது சமூகத்தினர் புரிந்து கொண்டு நடக்கின்றனரா? இன்று கல்வி அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தைச் செலுத்தி வருவது நவீன சாதனங்கள் என்ற ஒரு அபிப்பிராயம் பொதுவாக உண்டு. சில ஆய்வுகளும் சுயமதிப்பீடுகளும் கூட இதைக் கண்டறிந்துள்ளன. ஆகவே தான் நவீன சாதனங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி விருத்தியில் பாரிய பாதிப்பைப் செலுத்தி தடைக்கல்லாக அமைந்து விட்டனவா என்பது பற்றி நோக்க வேண்டியுள்ளது.

விஞ்ஞானத்தின் விந்தை மிகு கண்டுபிடிப்புக்கள் பல தற்கால சமூகத்திற்கு பாரிய அளவிலான சாதகமான கைங்காரியங்களை ஆற்றுகின்றன. இதனடிப்படையில் கணினியின் வருகையானது 1944 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டாலும் அதனுடைய தேவை அன்றைய காலத்தில் இராணுவத்தினரின் செயல்களுக்கே பெரிதும் பயன்படத்தக்க வகையில் அமைந்தது.

ஆனால் காலவோட்டத்தில் இதன் பயன்பாடு பற்றி ஆய்வுகளை மேற்கொண்டதன் விளைவாக உலகெங்கும் அனைத்துச் செயற்பாடுகளிலும் இன்று செறிந்து காணப்படுகின்றது. இவ்வாறானதே இணைய வலையமைப்புமாகும். இதன் மூலம் உலகத்தின் எந்த மூலைமுடுக்குகளிலும் நிகழும் செயல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் எமக்கு பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்தில் இருப்பவர்களுக்கான தகவலை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொள்வதற்கும் இந்த ஊடகம் மிகவும் பயனுறுதி வாய்ந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. இதனால் வீட்டுக்கு வீடு சாதாரண பாவனைப் பொருட்களைப் போன்று அன்றாடம் பயன்படுத்தப்படும் அத்திவாசியப் பொருளாக கணினியும் இணையமும் மாறியது மட்டுமல்லாது, நவநாகரிகமாகவும் மடிக்கணினி போன்ற சாதனங்களை வைத்திருப்பவர் உயர் தகுதி உடையவர் விடயப் புலமை உடையவர் என்றதொரு சமூகத்தின் பார்வையும் காணப்படுகின்றது.

இதனால் மாணவர்களின் கல்வி தொடர்பான விடயங்களையும் உலக நடப்புக்களையும்அறிந்து நவீன உலக ஒழுங்கிற்கு ஏற்றாற் போல வாழ வேண்டும். என்பதற்காக மடிக்கணினிகள் மாணவர்களின் கைகளில் சரளமாகக் காணப்படுகின்றன. இதன் மூலம் மாணவன் யாருடைய உதவியும் இன்றி தானே தனித்து நின்று தன்னுடைய கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அளவில் உற்ற நண்பனாக நல்ல ஆசானாக கணினி விளங்குகிறது.

இது எதிர்காலத்திற்கும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கும் ஏற்றாற் போல மாணவர் தம்மைப் புடம் போட்டுக் கொள்ள இலத்திரனியல் ஊடகம் பெரும்பங்காற்றுகின்றது. இதன் விளைவாக மாணவரின் கல்வி விருத்தியில் பாரிய செல்வாக்கினைச் செலுத்தி மாணவருக்கு நவீன உலகில் ஊன்றுகோலாக, அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு படிக்கற்களாகவே அமைந்து விடுகின்றது.

கல்வியில் சிகரம் தொடுமளவிற்கு இந்த இலத்திரனியல் ஊடகம் அமைந்துள்ளது. என்றால் அது மிகையாகாது மேலும் தொலைக்காட்சி என்ற இலத்தினியல் கட்புல செவிப்புல சாதனம் தொடக்கத்தில் வ்சதியுடையவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளிலேயே காணப்பட்டது. வீடுகளிலே நிகழுகின்ற மங்களகரமான காரியங்களை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து பார்ப்பதற்கு பொழுது போக்கிற்குமாகவே எமது மக்கள் அதிகமாகப் பயன்படுத்தினர். அதனை ஒரு கற்றல் உபகரணமாகவோ தொடர்பாடல் சாதனமாகவோ பயன்படுத்திக் கொண்டது குறைவு. இப்போதும் இது தான் நிலைமை. பெரும்பாலும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளிலேயே நமது தொலைக்காட்சிப் பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது மாணவர்களின் வளர்ச்சிக்கு பெரிதாக உதவுவதில்லை.

ஆனால் வளர்ச்சியடைந்த பிற சமூகங்களில் வீட்டுக்கு வீடு நவீன வடிவமைப்புக்களைக் கொண்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் மாணவரின் கல்வி விருத்தியில்உதவும் பொருளாக செய்திகள் கற்றல் முறையிலான வீடியோக்கள் எனச் சிறந்த சாதனமாக பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மாணவரின் கல்வி விருத்தியடைவதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது. இவ்வாறு நாமும் பயன்படுத்தினால் எமது சூழலும் முன்னேற்றமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தொலைக்காட்சியானது மாணவரின் கல்வி விருத்திக்கு படிக்கல்லாகவே படைக்கப்பட்டது. அதனை பயனுள்ள வகையில் பயன்படுத்தும் போது நிச்சயமாக நன்மை கிட்டும். தற்காலத்தில் கையடக்கத் தொலைபேசிப் பாவனை உலக மக்களின் எண்ணிக்கையில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது. ஒருவர் ஸ்மாட் போன் சாதாரணபோன் எனத் தனியான தேவை அலுவலகத்தேவை என்று பயன்படுத்துகின்றார். தற்போது வயதில் மிகச் சிறிய ஐந்து வயதுப் பிள்ளைகள் கூட கைத்தொலைபேசியைக் கையாளும் நிலை உருவாகியுள்ளது.

இது தவறான வழிகளுக்கும் கவனச் சிதைவுக்கும் வழியேற்படுத்துகின்றது. மாணவர்களுக்கும் ஒரு எல்லை வரை கைத்தொலைபேசி சாத்தியங்களை வழங்குகின்றது. ஆனால் இது குறித்த சரியான புரிதலும் தெளிவான விளக்கமும் இல்லாத காரணத்தினால் மாணவர்கள் இதைத் தவறான முறையில் பயன்படுத்துவதே கூடுதலாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதே வேளை மாணவர்கள் தமக்கு வேண்டிய நேரத்தில் வேண்டியவருடன் தேவையான தகவலைப் பெற்றுக் கொள்வதற்கு கையடக்கத் தொலைபேசிகள் பெரிதும் உறுதுணையாக அமைகின்றன. அதுவும் ஸ்மாட் போன் தற்கால மாணவர்களுக்குத் தேவையான அளவுக்குத் தகவல் மூலகங்களை வழங்குகின்றது. இதன் மூலம் நூலகம் சென்று வருவதற்கான நேரமோ நூல்களைத் தேடுதல், புரட்டுதல் போன்ற சிரமங்கள் எல்லாம் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

**கண்ணதாசன் சோபிகா**
**(2017 வர்த்தகம்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை



கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் 2016 - 2017 மாணவர்களின் வட்டதீபம் இதழ் - 4 எங்கள் அனைவரின் கைகளிலும் ஒளிவீசுகின்றது. இச்சஞ்சிகை ஒளிவீச பல வழிகளிலும் கரம் கொடுத்த நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அந்த வகையில் வட்டதீபம் இதழ் 4ன் படைப்புருவாக்கத்திற்கு முதற் காரணமான கல்லூரி முதல்வருக்கும் பிரதி முதல்வர், காப்பாளர், ஆசிரியர்கள் அனைவருக்கும் என் உளம் நிறைந்த நன்றி.

இச் சஞ்சிகையின் நிதிப்பங்களிப்புக்கான விளம்பரங்களை தந்துதவிய வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். அட்டைப்படம் முதல் இச்சஞ்சிகையில் இடம்பெறும் புகைப்படங்களை ஒழுங்குபடுத்தி தந்தவர்களுக்கும் இவ் இதழ் தாங்கி நிற்கும் படைப்புருவாக்கங்களை எழுதிய மாணவ நண்பர்களுக்கும் இவ்வேளையில் நன்றி கூறகின்றேன்.

இவ்விதழ் ஒளிவீச வடிவமைத்த தனு பதிப்பகத்தினருக்கும் நன்றி. 2016 - 2017 மாணவர்களின் கூட்டு முயற்சிக்கும் நிருவாக உறுப்பினர்களின் ஒத்துழைப்புக்கும் மனம் நிறைந்த நன்றி

செயலாளர்
கு.விதுஷா
(பழைய மாணவி)
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனு பிறின்டேர்ஸ் தருமபுரம் தொ.பே.: 0776115301